MAHAMAHOPADHYAYA
V. SWAMINATHAIYAR LIBRARY
TIRUVANMIYUR MADRAS

# AMIL TEXT BOOK

6906

FOR THE

## FIRST IN ARTS EXAMINATION

## 1885.

CONTAINING

## NALADIYAR AND KURMAPURANAM

WITH GRAMMATICAL AND EXPLANATORY NOTES.

**EDITED BY C. RAJAGOPALA PILLAY.**
Head Tamil Pundit, Presidency College, Madras.

AND

**PUBLISHED BY HIS PUPIL P. VASUDAVA MUDALIAR,**
Tamil Pundit, S. P. G. High School, Vepery, Madras.

MADRAS:

PRINTED AT THE SREENILAYUM PRESS.

1884.

*Price Six Annas.*

ஸ்ரீ

# நாலடியார்.

நான்கென்னும் வரையறைப் பண்புப்பெயர்; தனைமால் அடிக்கப்படுவதென்னும் பொருளில் அடி-பகுதி, இ-செயப்படுபொருண்மை விகுதி, உகரக்கேடு சந்தி, இம்மூன்றுறுப்பால முடிந்து நின்ற அடி என்னுங்காரணப்பெயர்; ஆகிய இரண்டுசொல், பண்புத்தொகைநிலைத் தொடராகிய ஒருசந்தி பெற்ற நாலடி என்பது பாக்களுள் முதன்மைபெற்ற வெண்பாவுக்குப் பண்புத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகைக் காரணப்பெயராயிற்று. முதற்பா ஆதல்பற்றி இப்பாவை அந்தணர்சாதி என்பர். வெண்பாப்பலவற்றுள்ளும் குறள்வெண்பா இரண்டடியாயும், சிந்தியல் வெண்பா மூன்றடியாயும், பஃறொடைவெண்பா நான்கின்மிக்க பலவடியாயும் வருதலாலும், சவலைவெண்பா நான்கடியாய் வருவதாயினும் இலக்கியங்களுள் பயின்றுவருவதன்றாதலாலும் இங்குவெண்பா என்றது, நேரிசை, இன்னிசை வெண்பாக்களை எனக்கொள்க. இருசொற்றொக்கு ஒருமொழிபோல நின்ற இந்நாலடி என்னும்பெயர் வெண்பாவின் தொகுதியாகிய நூலுக்குச் சினையாகுபெயராயிற்று. அது வெண்பாவினாலாகிய நூலுக்காதலால் கருவியாகுபெயராமெனினும் பொருந்தும். புறவுரைச் செய்யுளைச் சிறப்புப்பற்றி, உயர்திணை ஆண்பாற் படர்க்கை விகுதிபுணர்த்துத் தனியனென வழங்கல்போலச் சிறப்புப்பற்றி உயர்திணைப் பல்லோர்படர்க்கை விகுதி புணர்த்து நாலடியாரென வழங்கலாயிற்று. திருக்கோவையாரென்பதும் இது. இந்நூல் நாலடி நானூறெனவும் வழங்கும். இது பால், அதிகாரம், செய்யுள் என மூன்றுறுப்படக்கிய பிண்டமெனப்படும். இது இலக்கணநூற்குப் பொருந்துமே அன்றிப் பழையதோர்கதையின்மேற்செல்லுநூலுக்குப் பொருந்தாது அது சேரலெனப்படும். இது இலக்கணநூலாமாறு எங்ஙனமெனின் அறம்பொருள் இன்பங்களின் லக்ஷணமும், அவற்றின் பாகுபாட்டினிலக்கணமுங் கூறுதலாலென்க. இப்பெற்றியறியாதார் பழையதோர் கதையின்மேற் செல்லு நூலுக்கு இவ்விலக்கணத்தை ஏற்றுவர்.

## கடவுள்வாழ்த்து.

வானிடு வில்லின் வரவறியா வாய்மையால்
கானிலந் தோயாக் கடவுளை — யாநிலம்
சென்னி யுறவணங்கிச் சேர்துமெம் முள்ளத்து
முன்னி யவைமுடிக வென்று.

(இதன்பதப்பொருள்) வான்-மேகத்தில், இடு-தோன்றுகிற, வில்லின்-இந்திரதனுசையொப்ப, வரவு-பிறக்கும் பிறப்பின் தன்மையை, அறியா-அறிந்து, வா

ய்மையால்-சத்தியத்தினால், கால்- திருவடிகள், நிலந்தோயாத-பூமியிற்படியாத, கடவுளை - முதற்கடவுளை, எம்உள்ளத்து - எம்முடைய,உள்ளத்தில் முன்னியவை - நினைத்தவை, முடிகஎன்று-நிறைவேறுக என்று, யாம் நாம், சென்னி-தலை, நிலம்உறவணங்கி - பூமியில் படியும்படி வணங்கி, சேர்தும்-இடைவிடாது சிந்திப்போம்.

இந்நாலடியார் பலமுனிவர்செய்த செய்யுட்டொகுதி என்பதுணர்த்தற்கு, கடவுள் வாழ்த்துக்கூறிய அபியுத்தர் யாம் சேர்தும், எம்மெனப் பன்மையாற் கூறினர். இந்நூல் பல முனிவர் செய்தனவென்பது - "மன்னன்வழுதியர் கோன்வையைப் பேராற்றில், எண்ணியிருநான் கோடாயிரவர்-நண்ணி, எழுதியிடுமேட்டுக்குளே டெதிரோ யேறும்,பழுதிலா நாலடியைப்பார்," என்பதனாலுணர்க. வான்-இடவாகுபெயர் கால்முதலாகுபெயராய்அடியை யுணர்த்தியது. முன்னியவை என்றது அறம்பொருளின்பங்களை.

## முதலாவது - அறத்துப்பால்.

அதாவது அறத்தினது பகுப்புணர்த்துவது. அப்பகுப்பு செல்வநிலையாமைமுதல் தீவினையச்சம் ஈறாகக்கிடந்த பதின்மூன்றதிகாரங்களும். இது-ஆறும்வேற்றுமைத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகைப் பெயர் , விரிந்தால் அறத்தினது பகுப்புணர்த்துவதெனவிரியும். அறம்-இம்மை, மறுமை, வீடென்னும் மூன்றனையுந் தருதல்பற்றி,அதனை முதற்கண் வைத்தனர்.

## க-ஆம் அதிகாரம்-செல்வநிலையாமை.

அதாவது செல்வத்தினது நிலையாமையை யுணர்த்துவது. நிலையில்பொருளை உணர்ந்தன்றி நிலையுடைப்பொருளில் மனஞ்செல்லாதாதலால் நிலையில்பொருளைக் கூறுவார்;அவற்றுள் இம்மை மறுமை தருவதாகியபொருளினது நிலையாமையை முதற்கண் கூறினர். செல்வநிலையாமை என்பது ஆறும்வேற்றுமைத் தொகைநிலைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகையாகிய காரணப்பெயர்; விரிந்தால் செல்வத்தினது நிலையாமையை உணர்த்துவதென விரியும்.

அறுசுவை யுண்டி யமர்ந்தில்லா ளூட்ட
மறுசிகை நீக்கி யுண் டாரும—வறிஞராய்ச்
சென்றிரப்ப ரோரிடத்துக் கூழெனிற செல்வமொன்
றுண்டாக வைக்கற்பாற் றன்று.

(இ-ள்) அறுசுவை-அறுசுவையாகிய,உண்டி-உணவை,இல்லாள்-மனையாள், அமர்ந்து-விரும்பி, ஊட்டி-உண்பிக்க,நீக்கி-(முற்சிகையை)நீக்கி, மறுசிகை-பிற்சிகையை, உண்டாரும்-உண்டசெல்வரும், வறிஞர் ஆய் -வறுமையுடையராகி, ஓரிடத்து-தாம்உண்டுவாழ்ந்த இடத்தில், சென்று-(ஒருவர்மனையிடத்து) போய், கூழ்இரப்பர் எனின் - கூழையாசிப்பாராயின், செல்வம்ஒன்று-செல்வமாகிய ஒருபொருள், உண்டாக-நிலைமையுடையதாக, வைக்கல்பாற்று அன்று - வைத்தெண்ணுதலாகிய பான்மையுடையதன்று.

Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY.
TIRUVANMIYUR. MADRAS-41
6906



சிகை-பிடியளவுகொண்ட உணவு. மறுசிகைஎன்றதனால் நீக்கிஎன்னும் வினைக்கு முற்சிகையாகிய செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. மறுபொருள், மறுமொழி என்பனபோல நின்றமறுசிகை பண்புத்தொகை நிலைத்தொடர்; விரிந்தால் மறுமையாகிய சிகையெனவிரியும். சென்றமுன் நடந்தறியாரென்பதையும், கூழ் இரக்கப்படும் பொருளின் இழிவையும் காட்டவந்தன. உண்டி-உண்ணப் படுவதென்பது பொருளாதலால், உண-பகுதி, டு-சாரியை, இ-செயப்படு பொருண்மைவிகுதி, தகரம் டகரமானதும், உகரக்கேடும் சந்தி. உம்மை-உயர்வு சிறப்பு. (௧)

துகடீர் பெருஞ்செல்வந் தோன்றியக்காற் றொட்டுப்
பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க
அகடுற யார்மாட்டு நில்லாது செல்வம்
சகடக்கால் போல வரும்.

(இ-ள்) செல்வம்-செல்வப்பொருள், அகடுஉற-நடுவுநிலைமையாக, யார்மாட்டும்-எத்தன்மையாரிடத்தும், நில்லாது-நிலைபெறுதலில்லாதாகி, சகடக்கால்போல - வண்டியினது உருளையைப்போல, வரும் கீழ்மேலாகமாறும், (ஆதலால்) துகள்தீர் - குற்றம் நீங்கிய, பெருசெல்வம் - மிக்கசெல்வம், தோன்றியக்கால் - (ஒருவனுக்கு) உளதாயின், தொட்டு - (தோன்றியகாலம்) தொடங்கி, பகடுநடந்த - ஏர்நடந்ததனாலுண்டாகிய, கூழ்-உணவை - பல்லாரோடு - விருந்தினர்முதலிய பலரோடும், உண்க - உண்ணக்கடவன்.

அறத்தினின்வழியிற்றேடிய பொருளென்பார் துகடீர்பெருஞ்செல்வமெனவும், தோன்றுதல் ஒருநிலையனவென்றார் தோன்றியக்காலெனவுங் கூறினார். பகடுநடந்த கூழென்பது பஞ்சாலியன்ற படாமென்பதுபோல வந்தது. நடந்தகூழ் சுட்டபுண், சுட்டவடு என்பனபோலக் காரணப்பொருளதாகிப் பிறபெயர் கொண்டது. பகடு ஏரையுணர்த்தவந்த குறிப்புச்சொல். உற என்னும் வினையெச்சம் நில்லாதென்னும் மறைவினையின் முதனிலையோடு முடிந்தது. அகடென்றது தன்னைச் சிலநாள்முன் பெற்றனராதலால் இவர்பால் நிற்றல்வேண்டும், பலநாள்முன் பெற்றனராதலால் நிலையாமை வேண்டும் என்னும் நடுநிலைமையை. கால-உவமையாகுபெயர். (௨)

யானை யெருத்தம் பொலியக் குடைநிழற்கீழ்ச்
சேனைத் தலைவராய்ச் சென்றோரும்—ஏனை
வினையுலப்ப வேறாகி வீழ்வர்தாங் கொண்ட
மனையாளை மாற்றார் கொள.

(இ-ள்) யானைஎருத்தம்-யானையினதுபிடர், பொலிய-விளக்கமாகத்தோன்றும்படி, குடைநிழற்கீழ் - வெண்கொற்றக்குடை நிழலில், சேனை-மிக்கசேனையையுடைய, தலைவர்ஆய்-அரசராகி, சென்றோரும்-எதிர்உலாப்போன செல்வர்களும், ஏனைவினை-தீவினையானது, உலப்ப -கெடுப்பதினால், வேறு ஆகி

அச்செல்வத்தை இழந்து, தாம்கொண்ட - தாமமணஞ்செய்த, மனையாளை - இல்லாளையும், மாற்றார்கொள - பகைவர்கள் கொண்டுசெல்லும்படி, வீழ்வர் - வறியராவர்.

இவரேறுதலால யானையெருத்தம்பொலிவதாயிற்றெனவே இவரேறுதல் பெரிதுங்கூற வேண்டாதாயிற்று, இச்செல்வப்பெருக்கிற்குக் காரணம் நல்வினையாதலால் நல்வினையென்பது நிகழ்ச்சிகாயிற்று வினைபிறதெனனும் பொருளதாகிய இடைச்சொல. செல்வமாகிய உயர்ந்த நிலையினின்று வறியராகமாறுதலால வீழ்வரென்றார். செல்வப்பொருளேயன்றி மனையாளையு மென்னும் இறந்தது தழீஇயதன்றேயுயர்வுசிறப்புப்பொருளதாகிய உம்மை தொக்கப்பட்டது. (௫)

நின்றன நின்றன நில்லா வெனவுணர்ந்
தொன்றின வொன்றின வல்லே செயிற்செய்க
சென்றன சென்றன வாழ்நாள் செறுத்துடன்
வந்தது வந்தது கூற்று.

(இ-ள்) வாழ்நாள்-(நீர்)தேகந்தோடுகூடிவாழ நியமித்தநாள்கள், சென்றன சென்றன-செல்கின்றன செல்கின்றன, கூற்று-யமன, செறுத்து-கோபித்து, உடன்-விரைந்து, வந்தது வந்தது-வருகின்றான் வருகின்றான், (ஆதலால்) நின்றன நின்றன-நிலைபெற்றன நிலைபெற்றனவென்று உமமால் நினைக்கப்பட்ட செல்வப்பொருள்கள், நில்லா என - நிலைபெறா என்று, உணர்ந்து - உண்மையையுணர்ந்து, ஒன்றின ஒன்றின - (உமமால) இசைந்தன இசைந்தனவாகிய அறங்களை, செயின்-செய்யக்கருதுவீராயின், வல்லேசெய்க-விரைந்து செய்யக்கடவீர்.

கூற்று-சொல்லாலஃறிணையாதலால் அதன்வினையும் வந்ததென அஃறிணையாயிற்று. நின்றனநின்றன என்னும் அடுக்குபபேதைமைகாரணமாகத் துணிந்த துணிவும், மனம் வாக்கு காயம் இவற்றால் செய்யப்படுவன ஆதலால், ஒன்றின ஒன்றின என்னும் அடுக்குப்பன்மையும, மற்ற இரண்டும் அவலமும் குறித்தன்றன. செல்கின்றன, வருகின்றது என்னும் நிகழ்காலச் சொற்களைச் சென்றது வந்ததுஎன இறந்தகாலத்தாற் கூறியது முறைமையிளைவும், துணிவும் பற்றியென்க. (௬)

என்னானு மொன்றுதங் கையுறப் பெற்றக்கால்
பின்னாவ தென்று பிடித்திரா—முன்னே
கொடுத்தா ருயப்போவர் கோடிற்றீக் கூற்றம்
தொடுத்தாறு செல்லுஞ் சுரம்.

(இ-ள்) என்னானும்-யாதாயினும், ஒன்று-ஒருபொருளை, தம் கையுற-தமது கையில்கிடைக்கும்படி, பெற்றக்கால்-பெறுவாராயின், பின்-மூப்பின்காலத்தில், ஆவதென்று-பயன்படுவதென்று, பிடித்து-இறுகப்பிடித்து, இராமல்-வாளா இராமல், முன்னே-இளமையிலேயே, கொடுத்தார்-(அறத்தின்பொருட்டுப்பிற

ர்க்கு) கொடுத்தவர், கோடுஇல்-நடுவுநிலைமையுள்ள, தீக்கூற்றம் - அருளில்லாதயமன், தொடுத்து - பாசத்தாற்கட்டி, செல்லும் - போகின்ற, சுரம் - காட்டினது, ஆறு - வழி, உய்ய - தப்பும்படி, போவர்- சுவர்க்கம் புகுவார்.

இராமல்என்னும் வினையெச்சம் ஈறு தொகுத்தலாய் இராதென்றாது. கோடு முதனிலைத் தொழிற்பெயர்; பொருள் வளைதல். கோடில்லாதவ நடுவுநிலைமையுடையானென்பது, "மீட்பிதுசகிப பிளளையைத் தாயலறக்கோடல்" ஆகிய அருளின்மையைபற்றித் தீக்கூற்றமென்றார். இதில் அம்சாரியை. என் விகுதிபெயர். (௫)

இழைத்தநா ளெல்லை யிகவா பிழைத்தொரீஇக்
கூற்றங் குதித்துய்ந்தா ரீங்கில்லை—ஆற்றப்
பெரும்பொருள் வைத்தீர் வழங்குமி னாளைத்
தழீஇந்தழீஇந் தண்ணம் படும்.

(இ-ள்) பெரும்பொருள்-பெருமையைத் தருவதாகியபொருளை, ஆற்றவைத்தீர் மிகுதியும் வைத்துள்ள செல்வர்களே, இழைத்தநாள்-(உடலோடு கூடிவாழ) அளவுசெய்துள்ளநாள்கள், பிழைத்து ஒரீஇ - (அவ்வளவில்) தவறிப்போய், எல்லைஇகவா - தம்அளவைக்கடவா, கூற்றம் - (அளவுசெய்துள்ள நாள் முடிவில்வரும்) யமனினின்றும், குதித்து - தப்புதப்பட்டு, உய்ந்தார் - உயிர் பிழைத்திருப்பவர், ஈங்குஇல்லை - இவ்வுலகத்திலில்லை, நாளை - இனி, தண்ணம் - சாப்பறை, தழீஇம்தழீஇம்படும் - தழீஇந் தழீஇமென ஒலிக்கும், (ஆதலால்) வழங்குமின் -(அறத்தின்பொருட்டு) இன்றேகொடுங்கோள்.

இழைத்தநாளினெல்லை இனைத்தென உணரப் படாதாதலால் நாளை எனப்பொதுப்படக்கூறினர். நாளைஎன்றது எதிர்காலத்தைஉணர்த்தவந்தோர்க்குறிப்பு தழீஇந்தழீஇமென்பதனிறுதியிலுள்ளஎன் னும் இடைச்சொல் எஞ்சிநின்றது. நாளைஎன்றதனால் இன்றென்னும் நிகழ்காலம் வருவிக்கப்பட்டது. (௬)

தோற்றஞ்சான் ஞாயிறு நாழியா வைகலும்
கூற்ற மளந்துநுந் நாளுண்ணும்—ஆற்ற
அறஞ்செய் தருளுடையீ ராகுமின் யாரும்
பிறந்தும் பிறவாதாரில்.

(இ-ள்) கூற்றம்-யமன், தோற்றம்சால்-தோன்றுதலமைந்துள்ள, ஞாயிறு-சூரியன், நாழிஆக-அளக்குங்கருவியாக, நும்நாள் - உம்முயுளாகிய தானியத்தை, அளந்துஉண்ணும் - அளவுசெய்துண்ணுவான், (அதேயன்றியும்) யாரும் - எல்லோரும், பிறந்தும் - உலகில்பிறந்தும், (பிறப்பின் பயனாகிய அறத்தையடையாவிடின்) பிறவாதாரில் - பிறவாதவர்களில்வைத் தெண்ணப்படுவார்கள், (ஆதலால்) அருளுடையீராகி - அருளுடையீராய், ஆற்ற - மிகுதியாக, அறம்செய்ம்மின் - ஈதலாகிய அறத்தைச்செய்யுங்கோள்.

தந்துரைத்தனவெல்லாம் இசையெச்சம். ஞாயிற்றைநாழியாக உருவகஞ் செய்தாற்போல நாளைஉருவகஞ் செய்யாமையால் இதுவேகதேசவுருவகம். அதிகாரத்தால் அறம் சிறந்த ஈகையின்மேல் நின்றது. வருந்துவார்மேல யாதொரு தொடர்பும் வேண்டாமலே செல்லும் அருள்காரணமாக அறஞ்செய்தலுறுளதாவதலால், அறஞ்செய்து அருளுடையீராகுமின் என்பதில் அருளுடையீராகி அறஞ்செய்ம்மின் எனப் பின்முன்னாகநிறுத்தி விகுதிபிரித்துக்கூட்டி உரைக்க. தீவினைசெய்தாரைத் தண்டித்தற்குரியோன் கூற்றுவனாதலால் அறஞ்செய்யாநாளை அவனுண்ணுமென்றார். (எ)

செல்வர்யா மென்று தாஞ் செல்வுழி யெண்ணாத
புல்லறி வாளர் பெருஞ்செல்வம்—எல்லில
கருங்கொண்மூ வாய்திறந்த மின்னுப்போற் றோன்றி
மருங்கறக் கெட்டு விடும்.

(இ-ள்) யாம்செல்வர்என்று-நாம் இதுபொழுது செல்வமுடையோமென்றுகளித்து, தாம் செலஉழி-தாம் இனிச்செல்லும் மறுமையுலகத்தை, எண்ணாத-நினைத்தலில்லாத, புல்அறிவாளர்-சிற்றறிவினையாளுதலுடையாரது, பெருசெல்வம் - மிக்கசெல்வம், எல்லில் - பகலில், கருகொண்மூ - கரியமேகம், வாய்திறந்த - வாய்திறந்ததனாலுண்டாகிய, மினனுப்போல-மின்னலைப்போல, தோன்றி - சிறிதுகாலம்நின்று, மருங்கும்அற - இருந்தஇடமுந் தோன்றாமல், கெட்டுவிடும்- கெடாமலிராது.

நாம்-தனித்தன்மைப்பன்மை. செல்வர்-தன்மையில் பர்க்கைவந்த வழுவமைதி. மறுமையுலகமென்றது சுவர்க்கநரகங்களை, புல்லறிவாளர் பெருஞ்செல்வம் எலலில் மின்னுப்போற்றோன்றி யென்றமையால், ஈதலாலே அறிவுடையோரா லறியப்படுவதாகிய விளக்கமபெறாதென்பதாயிற்று. மின்-தொழிலுவமம். மருஙகுமென்னும் இறிவுசிறபபும்மை தொகுத்தலாயிற்று. பெருஞ்செலவம் பேரறிவாளர் பாற்படின் விளககம் பெறுமென்பார எலவிலென்றார். எல்-பண்பாகுபெயர். (அ)

உண்ணா னொளிநிறா னோங்கு புகழ்செய்யான்
துன்னருங் கேளிர் துயர்களையான்—கொன்னே
வழங்கான பொருள்காத் திருப்பானேல் அஆ
இழந்தா னென்றெண்ணப் படும.

(இ-ள்) உண்ணான்-(நல்லுண்டிகளை) உண்ணாமலும், ஒளிநிறான்-மதிப்பை நிலைக்கச்செய்யாமலும், ஓங்கு-பெருகுகின்ற, புகழ்-உரையும்பாட்டு மாகியபுகழை, செய்யான்-செய்துகொள்ளாமலும், துன்அருகேளிர்-பெறுதலரியஉறவினரது, துயர்களையான்-வறுமைத் துன்பத்தைநீக்காமலும், கொன்னே-கைம்மாறுவேண்டாமலே, வழங்கான் -(இரப்பவர்க்கு) கொடாமலும், பொருள்காத்திருப்பானேல் - செல்வப்பொருளைக்காத்திருப்பானாயின், அஆ - ஐயோ, இழந்

தான்என்று - அப்பொருளை இழந்தானென்று, எண்ணப்படும் - (அறிவுடையோரால்) மதிக்கப்படுவான்.

ஒளி-தான்வாழுநாளில் எல்லாராலும் மதிக்கப்படும்மதிப்பு. தான்உளனாகி ஒளிநிறல், புகழ்செய்தல் இவற்றைச் செய்து கொள்ளவேண்டுதலால் உண்ணானென்று தொடங்கி, கேளிர் துயர்களைவதால் மற்றவரும் இவனது கேண்மையைவிரும்பி மதிக்கப்படுதலால் ஒளிநிறலும், கொன்னேவழங்கலால் புகழ்செய்தலும் உண்டாவன ஆதலால் காரியகாரணங்களை முறை நிரனிறையாக வைத்துக்கூறினார். அஆ-அருளின்கட்குறிப்பாய்வந்த இடைச்சொல். கொன்-பயனின்மைப்பொருளதாகிய இடைச்சொல், அது கைம்மாறுவேண்டாமைக்காயிற்று. இழந்தான்-துணிவினால் எதிர்காலம் இறந்தகாலமாக வந்த காலவழுவமைதி. (கூ)

உடாஅது முண்ணாதுந் தம்முடம்பு செற்றும்
கெடாஅத நல்லறமுஞ்செய்யா—கொடாஅது
வைத்தீட்டி னாரிழப்பர் வான்றோய மலைநாட
உய்த்தீட்டுந் தேனீக் கரி.

(இ-ள்) வான்தோய்-சுவர்கத்தைத்தீண்டுகின்ற, மலைநாட- மலைநாட்டரசனே, உடாதும்-(நல்லாடைகளை)உடுக்காமலும், உண்ணாதும்-(ஐம்புலநுகர்ச்சிகளை) அநுபவியாமலும், தம்உடம்பு - தம்முடம்பை, செற்றும் - வருத்தியும்; கெடாத - தாம்கெடாமைக்குக்காரணமாகிய, நல்அறமும் - துறவறத்தையாயினும், செய்யார் - செய்யாமல், கொடாதும் - (வறியவர்க்கு) கொடாமலும், ஈட்டிவைத்தார் - பொருளைத்தேடிவைத்தவர்கள், இழப்பர் - (அதனை) இழந்தவராவர், (அதற்கு) ஈட்டிஉய்க்கும் - தேனைத்தேடி (கூட்டில்) சேர்க்கும், தேனீக்கரி - தேனீக்கள்சாட்சியாம்.

உடுக்காமலும், உண்ணாமலும், தம்முடம்பைச்செறுத்தல் துறந்தோர்க்குரிய செயலாதலால், நல்லறமென்றது துறவறத்தின்மேல்நின்றது. உடம்புசெறுத்தலாகிய அரியசெயல் தாம்வேண்டாமலே அமைதலால் செற்றுமென்ற உம்மை உயர்வுசிறப்பு. நல்லறமுமென்ற உம்மை இல்லறத்தையே அன்றி எனப்பொருள்தரலால் இறந்தது தழீஇய எச்சவும்மை. கொடாதுமென்ற இறந்தது தழீஇயஎச்சவும்மை தொகுத்தலாயிற்று. வான்-இட வாகுபெயர். (க0)

## உ-ஆம் அதிகாரம்-இளமைநிலையாமை.

அதாவது இளமையினது நிலைஇல்லாமையை உணர்த்துவது. இளமைசெல்வத்தைஅநுபவித்தற்குரிய காலமாதலால் இது அதன்பின்வைக்கப்பட்டது.

நரைவரு மென்றெண்ணி நல்லறி வாளர்
குழவி யிடத்தே துறந்தார்—புரைதீரா
மன்னா விளமை மகிழ்ந்தாரே கோலூன்றி
இன்னாங் கெழுந்திருப் பார்.

(இ-ள்) நல்அறிவாளர்-குற்றமற்ற அறிவையாளுதலுடையோர், நரைவருமென்றெண்ணி-மூப்புவருமென்று கருதி, குழவியிடத்தே-இளமையிலேயே, துறந்தார்-(யானென்னும் அகப்பற்றையும் எனதென்னும் புறப்பற்றையும்) விட்டவர், புரைதீராத - (காமவெகுளி மயக்கமாகிய) குற்றம்நீங்குதலில்லாத, மன்னா-நிலைபெறுதலில்லாத, இளமை-இளமைப்பருவத்தை, மகிழ்ந்தாரே-நன்குமதித்துக்களித்தவர்களே, கோல்ஊன்றி-(மூப்பில் நடத்தற்காதாரமாக) கோலையூன்றி. இன்னாங்கு - துன்பத்தோடு, எழுந்திருப்பார் - எழாநிற்பவர்கள்

நரை மூப்பையுணர்த்தவந்த தோர்குறிப்புச்சொல. குழவி இளமையிற்றாகிய பண்புப்பெயர். ஏ - இரண்டும் பிரிநிலையாதலால் இளமையில்துறந்தார் மனமொழிமெய்கள் அலைவில்லாமல் நிற்பதினாலும், நல்வழியிற்செல்லுதலாலும் வரும் இன்பங்களை நெடுநாள் அநுபவிப்பரென்பதும், இளமைமகிழ்ந்து துறவாதார் அவ்விளமையில் காமவெகுளிமயக்கத்தால் விளையுந்துன்பங்களையேயன்றி மூப்பில் கோலூன்றியெழுதலாகிய துன்பத்தையும் அநுபவிப்பாரென்பதும் கருத்தெனக்கொள்க. புரைதீராத, மன்னாதவென்னும் பெயரெச்சமிரண்டும் இளமையென்னும் வினைமுதலைக் கொண்டன. (கக)

நட்புநா ரற்றன நல்லாருமஃகினார்
அற்புத் தளையு மவிழ்ந்தன—உட்காணாய்
வாழ்தலி னூதிய மென்னுண்டாம் வந்ததே
ஆழ்கலத் தன்ன கலி.

(இ-ள்) நட்புநார்-உறவுகளாகிய பாசங்களும், அற்றன-அறுந்தன, நல்லாரும்-(நின்னிடத்து) மிக்கவிருப்பமுள்ள மகளிர்களும், அஃகினார்- விருப்பங்குறைந்தனர், அன்புத்தளையும் - (மனைவிபுத்திரர் முதலியோரவைத்த) அன்பாகிய கட்டுகளும், அவிழ்ந்தன - நெகிழ்ந்தன, உள்காணாய்- (இவற்றை)உனக்குள் ஆராய், வாழ்தலின்- (இளமையைமகிழ்ந்து) வாழ்ந்ததினால், ஊதிய - பயன், என் உண்டாம்-யாதுளதாயிற்று, ஆழ - (கடலில்) முழுகுகின்ற, கலத்து அன்ன - மரக்கலத்துள்ள நாய்கனுக்குவந்த துன்பத்தையொத்த, கலிஏ - துன்பமே, வந்தது - உளதாயிற்று.

இளமையில் மகிழ்ந்தோர்க்குப் பயனெனக்கொண்ட நட்புமுதலியன அற்றுப்போக, இனிச்செய்யத்தக்கதாகிய செயலின்மையுண்டானமையின் இளமையும், மூப்பும் பயன்படாமற் சென்றனவென்று, இளமையுடையானுக்கு இளமை நிலையாமையைக் கூறினாராயிற்று. உறவினர் பலராதலால் நட்பும், அன்பு செய்தற்குரியார் மனைவி புத்திரர் முதலிய பலராதலால் அன்பும் பலவாயின. அற்புத்தளை- பண்புத்தொகையாகவும், மூன்றாம்வேற்றுமைத் தொகையாகவுங் கொள்ளக்கிடந்தது ஆம்-அசை, கலம்-உயிரில் பொருளாதலால, துயர்தற்குரிய நாய்கன்மேல் நின்றது. (மஉ)

சொற்றளர்ந்து கோலூன்றிச் சோர்ந்த நடையினராய்ப்
பற்கழன்று பண்டம் பழிகாறும்—இற்செறிந்து
காம நெறிபடருங் கண்ணினார்க் கில்லையே
ஏம நெறிபடரு மாறு.

(இ-ள்) சொல்தளர்ந்து-(பேசும்)சொற்கள் வலிகுறைந்தனராகி, கோல்ஊன்றி-(ஆதரவாக) கோலை ஊன்றினராகி, சோர்ந்த-தள்ளாடிய, நடையினர்ஆய்-நடையை உடையார்களாகி, பல்கழன்று-பற்கள் உதிர்ந்தனராகி, பண்டம்-(உடலாகிய) பொருள், பழிகாறும் - (கண்டோரால்) பழிக்கப்படுமளவும், இல்செறிந்து - இல்வாழ்க்கையில் நீங்காதிருந்து, காமநெறி - காமவழியில், படரும் - செல்லுதற்குரிய, கண்ணினார்க்கு - சிற்றறிவுடையார்க்கு, ஏமம் - (தம்முயிர்க்கு) காவலாகிய, நெறி - துறவறவழியில், படரும்ஆறு - செல்லுதற்குரிய வகை, இல்லையே - உண்டாவதில்லையே ஆம். எ-று

தளர்ந்து, கழன்று என்னுஞ் சினைவினைகள் முதலின்மேல் நின்றன. ஏ-தேற்றம். இளமை நிலைமையாகிய இழிவைப் பற்றி உடலைப்பண்டமெனவும் வினைகளைக்கெடுத்துக் கூற்றதனினின்று நீக்கி முத்தியை அடைவித்தலால் துறவுநெறியை ஏமநெறியெனவுங் கூறினர். (௧௪)

தாழாத் தளரா தலைநடுங்காத் தண்டூன்றா
வீழா விறக்கு மிவண்மாட்டும்—காழிலா
மம்மர்கொண் மாந்தர்க் கணங்காகுந் தன்கைக்கோல்
அம்மனைக்கோ லாகிய ஞான்று.

(இ-ள்) தாழா-கூனலாகி, தளரா-உடல்தளர்ந்து, தலைநடுங்கா-தலைநடுங்கி, தண்டூன்றா - (நடத்தற்காதரவாக) தடியையூன்றி நடந்து, வீழா-விழுந்து, இறக்கும் - (மீளவும்) எழுந்துசெல்லும், இவள்மாட்டும்- இத்தன்மையாளிடத்தும், காழ்இல்லாத - முதிர்ந்த அறிவில்லாத, மம்மர்கொள் - காமத்தைக்கொள்ளுகின்ற, மாந்தர்க்கு - மனிதர்களுக்கு, தன்கைக்கோல் - தம்முடையகையிற்பிடித்தகோல், அம்மனைக்கோல்- அந்தமனைவியினது கைக்கோல், ஆகியஞான்று - ஆகியகாலத்தில், அணங்குஆகும் - (அம்மயக்கம்) துன்பந்தருவதாகும்.

இல்லாத என்னும் காரணப்பொருட்டாகிய பெயரெச்சக்குறிப்பு மம்மரென்னுங் காரியப்பெயர்கொண்டது; பண்புத்தொகையாகவுங் கொள்ளலாம். காழில்லாமையாகிய மம்மரெனவிரியும். மம்மர்-பேதைமை. இதுகாரியத்தைக் காரணமாகவும், அணங்கு காரணத்தைக் காரியமாகவுங்கூறிய உபசாரவழக்கு. இவண்மாட்டுமென்ற உம்மை இழிவுசிறப்பு. இவள், மனை என்பன சாதியொருமை. தன்-பன்மையிலொருமைவந்த வழுவமைதி. மம்மர் தருந்துன்பமாவது தாம்ஊன்றி நடந்தகோல் தாம் சோர்ந்தநடையுமிலராகியபின், தம்மின்இளையராகிய மனைவியர்க்குக் கைக்கோலாயமைந்தபோது இல்வாழ்க்கை நடவாமையாலாம் துன்பம். அகரச்சுட்டு கட்டழகும், கட்டிளமையுமுடையா

ளெனக் கருதிய உயாவின்கணவந்தது அம்மனை என்பதை ஒரு சொலாக்க் கொண்டு தாயென்பாருமுளர் தலைப்பெய்தல் என்று பாடங் கூறுவாருமுளர் அப் பொழுதில் தழுதல், தன்றால் இயல்பாதல்போலத் தலைப்பெய்தல் இயல்பாமென உளர் போலும்.

> எனக்குத் தாயாகியாள் என்னையீங் கிட்டுத்
> தனக்குத்தாய் நாடியே சென்றாள்—தனக்குத்தாய்
> ஆகி யவளு மதுவானால் தாய்த்தாய்க் கொண்
> டேகு மளித்திவ் வுலகு.

(இ-ள்) எனக்குத் தாய் ஆகியாள் - இம்மையில் எனக்குத் தாயானவள், என்னை-(அன்புமிக்க) என்னை, ஈங்கு இட்டு - இவ்வுலகத்திலே விட்டு, தனக்குத் தாய் நாடியே - தனக்குத் தாயைத் தேடியே, சென்றாள் - போனாள்; தனக்குத் தேடிப்போனதனக்கு, தாய் ஆகியவளும் - தாயானவளும், அது ஆனால் - தனக்குத் தாயைத்தேடிச் செல்லுதலானால், தாய் - பெற்ற தாய், தாய் - தனக்குத் தாயைத் தேடிக்கொண்டு, ஏகும் - போவாள், அளித்து - எளிமைப்பட்டது, இவ்வுலகு - இந்த உலகம் என்று.

ஆதலால் நான் இளமையை மகிழாமல் பிறப்பினின்று நீங்கும் நெறியைத் தேடுவேன் என்பது இதன் இசையெச்சம். அன்றி நிரந்தரமாதலால் தாயினையேல் வைத்துச் சென்றாள் நாடியே சென்றாள் பழ இலக்கணை. எப்பிறிவில், அது நாடிச் சென்று தங்குமைந்தன் மேல் ஏற்படுகின்ற தன்மையை மெலிமையுடையதன்று அவலமெனப்படும் இரக்கமுள்ளதுதான் 'அதுபிறபோலுறின், மீளப்புவியிலவந்தாரில்ல' என்றாற் போலும். (௰௫)

> வெறியயர் வெங்களத்து வேன்மகன் பாணி
> முறியார் நறுங்கண்ணி முன்னர்த் தயங்க
> மறிகுள குண்டன்ன மன்னா மகிழ்ச்சி
> அறிவுடை யாளர்க ணில்.

(இ-ள்) வெறி அயர் - வெறியாடுதலைச் செய்கின்ற வெம்களத்து-பலியிடுமிடத்து, வேலமகன் - வெறியாட்டாளனுடைய, பாணி - கையில், முறி தளிர்கள், ஆர் - இடையிடையே நிறைந்த, நறுகண்ணி - மணமுள்ள மாலை, முன்னர் - தன்னெதிரில், தயங்க - விளங்காநிற்க, மறி - (அதைக்கண்ட) ஆடு, குளகு - உணவாக, உண்டு அன்ன - (அதை) உண்டமகிழ்ச்சியையொத்த, மன்னா-நிலைபெறுதலில்லாத, மகிழ்ச்சி - இளமையாலவரும் மகிழ்ச்சி, அறிவுடையாளர்கண்-நல்லறிவுடைமையை ஆளுதலுடையாரிடத்து, இல - இல்லை.

வெறி ஆவேசங்கொண்டாடுதல் ஆடுமுதலிய வற்றைக் கொலைசெய்யுமிடமாதலால் பலியிடுமிடத்தை வெங்களமென்றார். குளகு இலையுமாம் விலங்கி னுணவு "இலைநுகர்விலங்குளைக் குளகென்னயமப்பலார்" என்பது நிகண்டு. அம்மாலை தன்னுயிர்க்குக் கேடுதரும் உபாயமாகக் குறியாமல் ஆடு அதையு

ன்பிறவிப்பகை உவமித்தமையால் மகிழ்ச்சி என்றது இளமையில் இல்வாழ்க்கையை மகிழ்மகிழ்ச்சியை. யானெழுதியது இவ்வெழுத்தாணி என்பது போல நின்ற உண்டதென்பது வினைமுதல் வினையைக்கருவியின்மேலேறிக் கூறு வினையாலணையும் பெயர். இது ஆறுதொகுத்தலாய் நின்றது. (௰௬)

பனிபடு சோலைப் பயன்மர மெல்லாம்
கனியுதிர்ந்து வீழ்ந்தற் றிளமை—நனிபெரிதும்
வேற்கண்ண ளென்றிவளை வெஃகன்மின் மற்றிவளும்
கோற்கண்ண ளாகுங் குனிந்து.

(இ-ள்) இளமை - (நீ மகிழும்) இளமைப்பருவம், பனிபடு - குளிர்ச்சி உண்டாகிய, சோலை - சோலையிலுள்ள, பயன்மரமெல்லாம் - பயன்தரும் மரங்களெல்லாவற்றினின்றும், கனி உதிர்ந்து வீழ்ந்தால் அற்று - பழங்கள் உதிர்ந்து வீழ்ந்தாற்போலுந் தன்மையது, இவளும் (இப்பெண்ணும்) இத்தன்மையதாகிய இளமையுடையாளும், குனிந்து - கூனலாகி, கோற்கண்ணள் ஆகும் - (வழிதெரிந்து நடப்பதற்கு) கோலாகிய கண்ணையுடையாளாவள், (ஆதலால்) வேற்கண்ணள் என்று (இப்பொழுது) வேல்போலுங் கண்ணுடையாளென்று, இவளை - இத்தன்மையாளை, நனிபெரிதும் - மிகவும், வெஃகன்மின் - விரும்பாதிருங்கோள்.

பயன்மரமெல்லாமெனப் பன்மையினொடு தனுருபு தொகுத்தலைப்பெற்றது. கனி தொழிலுவமையாதலால் இளமை சிறிதுகாலமிருந்து கழியுமென்பது கருத்து. உதிர்ந்து வீழ்ந்தாற்றென்னும் ஒருபொருட்பன்மொழி அவ்விளமையினது நிலையாமையை அதிகத்தங்காட்ட, நனிபெரிதுமென்னும் ஒருபொருட்பன்மொழி வெஃகலின் மூவிலாமையை உறுதித்துங்காட்ட வந்தன. சுட்டுமிடத்து ஒன்று இளமையினது நிலையாமையும், மற்றொன்று கோற்கண்ணளாகுதலையும் சுட்டி நிற்றலின் முன்னது உம்மைமற்று, பின்னுள்ள உம்மை இறந்தது தழீஇய எச்சவும்மையுமாம் பொருந்தும். கனிபடச் செழுமைக்குக் காரணமாயிருத்தலால் பனிபடு சோலைப் பயன்மரமென்றும், இளமைநிலையாமை யாவர்க்கும் பொதுவாதலால் மரமெல்லாமென்றும் கூறினார். (௰௭)

பருவ மெனைத்துள பல்லினபா லேனை
இருசிகையு முண்டீரோ வென்று—வரிசையால்
உண்ணாட்டங் கொள்ளப் படுதலால் யாக்கைக்கோள்
எண்ணா ரறிவுடை யார்.

(இ-ள்) பருவம் - வயது, எனைத்து - எவ்வளவினது, உள - உதிராமலுள்ள, பல்லின்பால் - பல்லினது பகுப்பு, ஏனை - எவ்வளவு உள்ளன, இருசிகையும் - முறிசிகை பிறசிகையாகிய பலவுணவுகளையும், உண்டீரோ என்று - (இளமையில்) உண்டீரோவென்று, வரிசையால் - முறைமையில், உண்ணாட்டம் - (இளையோர்) தமக்குள் நாடிக்கேட்டலை, கொள்ளப்படுதலால் - அடையப்படுதலால், யாக்கைக்கோள் - உடலின் தன்மையாகிய இளமையை, அறிவுடையார் - நல்லறிவுடையோர், எண்ணார் - பொருளாகமதியார். எ-று

எனைத்து ஒன்றன்படர்க்கை விகுதிபெற்ற பண்படியாகப்பிறந்த பெயர் இதன்பகுதி எந்தனை என்பதன் மரூஉ. வரிசையாவது மூப்புக்குக்காரணம்பரு வமுதிர்ச்சியாதலால் முன்னர்ப்பருவ மெனைத்தென்றும், உடலை நெடுங்காலங்கொண்டு செலுத்தற்குரிய வலியதும்மெலியதென்னும்எல்லாவுணவுகளில் வலியதைத்தின்னுதற்குக் கருவிபல்லாதலால், அதன்பின் பல்லின்பாலேனை என்றும், இருசிகையுமுண்டேரோஎன்றும் வினவும்முறை. வரிசையால் உருபுமயக்கம். ஏனைய என்பது ஈறுதொகுத்தலாயிற்று. உள்நாட்டமென்னுங் காரணம் வினவுதலாகியகாரியத்தின்மேல் நின்றது. எல்லாவுணவுகளாவன உண்பன, தின்பன, நக்குவன, பருகுவனஎன்பன. தின்பனஒன்றும்வன்மையுள்ளன (௰௮)

மற்றறிவா நல்வினை யாமிளைய மென்னாது
கைத்துண்டாம் போழ்தே கரவா தறஞ்செய்ம்மின்
முற்றி யிருந்த கனியொழியத் தீவளியால்
நற்கா யுதிர்தலு முண்டு.

(இ-ள்) தீவளியால் - பொல்லாதகாற்றால், முற்றியிருந்த - நன்குபழுத்த, கனிஒழிய - (மரங்களில்) பழங்களா உதிராதிருக்க, நல்காய் - வன்மையாகிய காய்கள், உதிர்தலும்உண்டு - உதிர்தலுமுண்டு, (ஆதலால்) யாம் - நாம், இளையம் - (இதுபோழ்து) இளமைப்பருவத்தையுடையோம், மற்றுஅறிவாம் - விரையாமல் ஆராய்ந்துசெய்வோம், என்னாது - என்றுநினையாமல், கைத்துஉண்டாம்போழ்தே - பொருள் உண்டாகுங்காலத்திலேதானே, கரவாது - இல்லையெனமறுக்காமல், அறம்செய்ம்மின் - ஈதலாகிய அறத்தைச் செய்யுங்கோள்.

விரையாமல் அறிவாமென்றதும் பின்காலத்தில் அறிவாமென்பதை. மற்றுவினை மாற்றுப்பொருளது. உதிர்தல் சிறுபான்மையாதலால் உம்மை இழிவுசிறப்பு. கைத்து இடமடியாகப் பிறந்த பெயர், கை-பகுதி, த்-சந்தி, து-ஒன்றன்படர்க்கைவிகுதி. ஏ தேற்றம்- கைத்துண்டாம்போழ்தே என்றது இளமைபோலச்செல்வமு நில்லாதென்பதை வற்புறுத்தற்கென்க. நல்லசாறறடித்தமையால் மரம்சாய்ந்தது என்பதிற்போல நன்மைப்பண்பு வன்மைக்காயிற்று (௰௯)

ஆட்பார்த் துழலு மருளில்கூற் றுண்மையால்
தோட்கோப்புக் காலத்தாற் கொண்டுய்ம்மின்-பீட்பிதுக்கிப்
பிள்ளையைத் தாயலறக் கோடலான் மற்றதன்
கள்ளங் கடைப்பிடித்த னன்று.

(இ-ள்) ஆள் - (தான்கொண்டுபோகும்) ஆளை, பார்த்து - ஆராயாநின்று உழலும் - திரியாநின்ற, அருள்இல்கூற்று - கருணையின்மையாகிய யமன், உண்மையால் - உளனாயிருத்தலால், தோட்கோப்பு - (நீர்இனிச்செல்லும் வழிக்கு) ஆற்றுணவாகிய தருமத்தை, காலத்தால் - இளமையில்தானே, கொண்டு - செய்துகொண்டு, உய்ம்மின் - பிழையுங்கோள், பீள் - இளங்கருவினின்றும், பிதுக்கி - வெளிப்படுத்தி, பிள்ளையை - பிள்ளையினுயிரை, தாய்அலற - பெற்

வள் அலறியழும்படி, கோடலால் - கொண்டுபோதலால், அதன் - அவ்யமனது, மற்றுக்கள்ளம் - வஞ்சத்தொழிலை, கடைப்பிடித்தல் - மறவாதிருத்தல் நன்று - நன்மையைத் தருவதாகும் எ-று

தோட்கோப்பு ஏழாம்வேற்றுமைத் தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகைப்பெயர் ; விரிந்தால் தோளில் கோக்கப்படும் உணவின்கட்டு என விரியும். இது மறுமைவழிக்கு உணவுபோல்வதாகிய அறத்தின்மேலது. காலத்தால் வேற்றுமைமயக்கம். பிள்ளை முதலாகுபெயராய் உயிரின்மேல் நின்றது. அருளென்றது அதுகாரணமாகவரும் கண்ணோட்டத்தை. உடையானும் அறியாவகை பீட்பிதுக்கிப் பிள்ளையைக்கோடலால் அச்செயலைக் கள்ளமென்றார். பிறர்செய்யும் வஞ்சம்போலாமையால் அக்கள்ளம் மற்றுக்கள்ளமெனப்பட்டது. இவ்விடைச்சொல் பிறிதென்னும் பொருளது. (உ0)

## ௩-ஆம் அதிகாரம் - யாக்கைநிலையாமை.

அஃதாவது உடலினது நிலையாமையைஉணர்த்துவது - புறத்ததாகியசெல்வநிலையாமையையும், அகத்ததாகிய இளமைநிலையாமையையும் முறையேயுணர்த்திஞராதலால் அவ்விரண்டையும் அடைந்து அநுபவித்தற்குரிய யாக்கையினது நிலையாமையை உணர்த்துகின்றமையின் இஃது அவ்விளமை நிலையாமையின் பின்வைக்கப்பட்டது. யாக்கை கைவிகுதியதெனக் கொண்டால்தொழிலாகுபெயரெனவும்,யா-பகுதி, க்-சந்தி, கு-சாரியை, ஐ-செயப்படுபொருண்மைவிகுதியதெனக் கொள்ளின் தொழிலடியாகப்பிறந்த பெயரெனவும்ஆம்.

மலைமிசைத் தோன்று மதியம்போல் யானைத்
தலைமிசைக் கொண்ட குடையர்—நிலமிசைத்
துஞ்சினா ரென்றெடுத்துத் தூற்றப்பட் டாரல்லால்
எஞ்சினா ரிவ்வுலகத் தில்.

(இ-ள்) மலைமிசை - மலையின்மேல், தோன்றும் - காணப்படுகின்ற, மதியம்போல - பூரணசந்திரன்போல, யானை -யானையின்மேல், தலைமிசைக்கொண்ட - (தமது) தலையின்மேல் கவியப்பெற்ற, குடையர் - வெண்கொற்றக்குடையாராகச் சென்றவர்களும்,துஞ்சினார்என்று - இறந்தனர்களென்று, நிலமிசை - பூமியில், எடுத்து - குறிக்கப்பட்டு, தூற்றப்பட்டார் அல்லால் - பலரறியச்சொல்லப்பட்டாரல்லாமல், எஞ்சினார் - அச்சாவினின்றும் தப்பினவர், இவ்வுலகத்து - இந்தஉலகத்தில், இல் - இலர். எ-று

செல்வமிகுதியை உணர்த்தற்கு மலைமிசைத்தோன்றும் மதியம்போல என உவமைகூறினர். குடையரும் என்னும் உயர்வுசிறப்பும்மை தொகுத்தலாயிற்று. குடையரும் துஞ்சினரென்றெடுத்துத் தூற்றப்பட்டாரென்று கூறவே மற்றவர் துஞ்சுதலைக்கூறவேண்டாதாயிற்று. நிலமிசைஎனவேண்டாதுகூறினார்நிலையாமையையுடையதென்னும் இழிவுபற்றி. இவ்வுலகென்பதற்கு இளமைநிலையாமையில்-டு-ஆம் பாட்டில்இவ்வுலகென்பதற் குரைத்தாங்குரைக்க. (உக)

வாழ்நாட் கலகாய வயங்கொளி மண்டிலம்
வீழ்நாள் படாஅ தெழுதலால் — வாழ்நாள்
உலவாமுன் னொப்புர வாற்றுமின் யாரும்
நிலவார் நிலமிசை மேல்.

(இ-ள்.) வாழ்நாட்கு - (சீவர் தேகத்தோடுகூடி) வாழ நியமித்த நாள்களுக்கு, அலகு ஆய - அளவாக, வயங்கு - விளங்குகின்ற, ஒளிமண்டிலம் - சூரியன், வீழ்நாள் - உதியாதநாள், படாது - உண்டாகாமல், எழுதலால் - உதிக்கிறதனால், யாரும் - எத்தன்மையாரும், நிலமிசைமேல் - பூமியில், நிலவார் - நிலைத்தலிலார், (ஆதலால்) வாழ்நாள் - வாழ்நாட்கள், உலவாதமுன் - (அறஞ்செய்யப்பெறாமல்) கெடாதமுன்னே, ஒப்புரவு - அறத்தை, ஆற்றுமின் - செய்யுங்கோள் எ-று.

காலமாகிய அருவப்பொருள் சூரியனாகிய அளவையால் அளக்கப்படுதலால் வயங்கொளிமண்டிலம் வாழ்நாட்கலகாயவென்றார். ஆக என்பது ஆய எனத் திரிந்துநின்றது. இது எழுதலாலென்பதனொடு முடிக்க. ஒளிமண்டிலம் பண்புத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகைக் காரணப்பெயர். யாவருக்கும் ஒத்த ஒழுக்கமாதலால் ஈகையை ஒப்புரவென்றார். மிசைமேல் ஒருபொருட்பன்மொழி. இங்ஙனம் கொள்ளாமல், மேலென்பதற்கு வாழ்நாள்முடிந்தபின் என உரைத்தலுமாம். ஒப்புரவைத் துறவறமாகிய மேலறமெனின், நிலமிசைமேல் எல்லாவுலகங்களுக்கும் மேலாகிய முத்தியுலகத்தில், யாரும் - துறவறஞ்செய்யாத எல்லாரும், நிலவார் - விளங்குதலிலார் என உரைத்தலுமாம். யாருமென்பதில் உம்மை எஞ்சாமைப்பொருளது. (௨௨)

மன்றங் கறங்க மணப்பறை யாயின
அன்றவர்க் காங்கே பிணப்பறையாய்ப் — பின்றை
ஒலித்தலு முண்டாமென் றுய்ந்துபோ மாற்றை
வலிக்குமாம் மாண்டார் மனம்.

(இ-ள்.) மன்றம் - உறவினர்முதலியோர் கூடிய இடத்தில், கறங்க - ஒலியுண்டாம்படி, மணப்பறை ஆயின - மணத்துக்குக் கொட்டும் பறையாயவைதாமே, அன்று - அத்தினத்தில், ஆங்கே - அம்மணப்பந்தலிலே, அவர்க்கு - மணக்கோலங் கொண்டவர்க்கு, பின்றை - பிறபொழுதில், பிணப்பறையாய் - பிணத்திற்குக் கொட்டும் பறைகளாகி, ஒலித்தலும் - ஒலிக்குதலும், உண்டாம் என்று - உளதாகுமென்று, உய்ந்துபோம் ஆற்றை - (இல்வாழ்க்கையினின்றும்) தப்பிப்போகும் துறவறநெறியையே, மாண்டார் மனம் - மாட்சிமைப்பட்ட அறிவுடையாருடைய மனம், வலிக்கும் - துணியுமாம் எ-று.

முன்னே மணப்பறையாயின என்றமையால், ஆண்பாலாரும் பெண்பாலாரும் அடங்க அவர்க்கெனச் சுட்டினார். ஆங்கென்பதும் அது. ஏ பிரிநிலை. அன்றென்றதனாற் பின்றை பிறபொழுதுக்காயிற்று. ஒலித்தலுமென்ற உம்மை இழிவுசிறப்பு. ஆற்றையென்னும் ஏ பிரிநிலையாதலால், பிறப்பிறப்புக்குக் காரணமாயுள்ள அவாநீங்காத இல்வாழ்க்கையை உய்ந்துபோமாறென்பதாயிற்று. (௨௩)

சென்றே யெறிப வொருகால் சிறுவரை
நின்றே யெறிப பறையினை—நன்றேகாண்
முக்காலைக் கொட்டினுண் மூடித்தீக் கொண்டெழுவர்
செத்தாரைச் சாவார் சுமந்து.

(இ-ள்) சென்று - (கொட்டுவோரிடத்து) சென்று, ஒருகால் - ஒருமுறை, பறையினை - பறையை, எறிப - கொட்டுவார், சிறுவரைநின்று - சிறிதுபொழுதுசும்மாஇருந்து, எறிப - கொட்டுவார், முக்காலை - மூன்றாமுறை, கொட்டின் - கொட்டினால், செத்தாரை - செத்தவரை, உள் - வீட்டினுள், மூடி - (கோடியால்)மூடி, தீக்கொண்டு - தீயைத்தாங்கி, சாவார் - இனிச்சாகஇருப்போர், சுமந்து - சுமவாநின்று, எழுவர் - (புறத்தே) செல்வர், நன்றே-(இந்தன்மையானவாழ்க்கை) இன்பமுடையதோ, காண் - நீஆராய்.

நின்றென்பதில் நிற்றலகொட்டுத லின்மைக்காயிற்று. சிறுவரை பண்புத்தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகைக் காரணப்பெயர். சிறுவரைநில்லாமல் கொட்டாராதலால் நின்றே யென்னும் ஏ தேற்றம். நன்றேயென்னும் ஏ எதிர்மறை. சுமந்து சுமவாநின்றென்னும் நிகழ்கால வினையெச்சந் திரிந்துநின்றது. செத்தார் சாதிப்பன்மை. (௨௪)

கணங்கொண்டு சுற்றத்தார் கல்லென் றலறப்
பிணங்கொண்டு காட்டுய்ப்பார்க் கண்டும் - மணங்கொண்டீண்
டுண்டுண்டுண் டென்னு முணர்வினாற் சாற்றுமே
டொண்டொண்டொ டென்னும் பறை.

(இ-ள்) சுற்றத்தார் - உறவினர், கணங்கொண்டு - கூடிநின்று, கல்லென்றலற - கல்லென்று அலறிஅழும்படி, பிணங்கொண்டு - பிணத்தைச்சுமவாநின்று, காட்டுய்ப்பார் - மயானத்திலசெலுத்துவோரை, கண்டும்-கண்டிருந்தும், மணங்கொண்டு - மணத்தைவிரும்பி, ஈண்டு - இவ்வுலகத்தில், உண்டுஉண்டுஉண்டென்னும் - இன்பம் உண்டென்றேகருதுகின்ற, உணர்வினான் - அறிவில்லானுக்கு, டொண்டொண்டொடென்னும்பறை - தொண்தொண்தொடென்று ஒலிக்கும்பறையொலி, சாற்றும் - (அவ்வாசையை விடுவிடுவிடு என்று) சொல்லுவதுபோலும் எ-து.

கணங்கொண்டு ஒருசொல்லின் தன்மையது. கண்டும் உண்டுண்டுண்டென்னுமென்ற குறிப்பினால் உணர்வினானென்பது உணர்விலானுக்காயிற்று. உம்மைஉயர்வுசிறப்பு தந்தாைத்தனஎல்லாம்இசையெச்சம்,அடுக்குத்துணிவுப்பொருளது டொண்டொண்டொடென்பது கொட்டுவோர்பறையைக்கொட்டிமுத்துங்காலத்தில், மூன்றுமுறைதட்டி,நிறுத்தும்,ஒலியையுணர்த்துங்குறிப்பு, அதுசாற்றும் என்றது, தற்குறிப்பேற்றவணி, பறைகருவியாகுபெயர். (௨௫)

நார்த்தொடுத் தீர்க்கிலெ னன்றாய்ந் தடக்கிலென்
பார்த்துழிப் பெய்யிலென் பல்லோர் பழிக்கிலென்

தோற்பையு ணின்று தொழிலறச் செய்தூட்டும்
கூத்தன் புறப்பட்டக் கால்.

(இ-ள்) தோற்பையுள்நின்று - உடலாகியதோற்பையில்தங்கி, தொழில்-(முன்செய்த) இருவினைகளும், அற - முற்றுப்பெற, செய்து -(அவற்றின்பயனை) செய்து, ஊட்டும் - (உடலோடுகூடியதனக்கு) உணவிக்கின்ற, கூத்தன் - உயிராகியகூத்தன், புறப்பட்டக்கால் - (உடலினின்றும்) புறப்பட்டபின், நார்த்தொடுத்து - (அவ்வுடலை) நாரினால்கட்டி, ஈர்க்கில்என் - இழுத்தால்என்ன பயன், நன்றுஆய்ந்து - (அதுசெய்யாமல்) மிகுதியாக )ஆடைஅணிமுதலியவற்றை) ஆய்ந்தெடுத்தணிந்து, அடக்கில்என் - அடக்கஞ்செய்தால்என்னபயன், பார்த்தஉழி - (அதுசெய்யாமல்) கண்டவிடத்தில், பெய்யில்என் - எறிந்தால் என்னபயன், பல்லோர் - (பார்த்தவிடத்திருக்கக்கண்ட) பலரும், பழிக்கில் என் - பழித்தால்என்னபயன், (ஒரு பயனுமில்லை.) எ-று

பார்த்தஎன்னும் பெயரெச்சத்தீறு தொகுக்கப்பட்டது. பார்த்தஇடமென்றது அடக்கஞ்செய்வதற்கெனக் குறிக்கப்படாதஇடம். நன்று குறிப்புவினையெச்சம். இருவினைகளுக்குத்தக்க பலவுருவுகளை மாறிமாறிக் கொள்ளலால் உயிரைக்கூத்தனென்றார். நார்தொடுத்து ஈர்த்தலைமுன்னே கூறியது உடலினிழிவுபற்றி. (௨௬)

படுமழை மொக்குளிற் பல்காலுந் தோன்றிக்
கெடுமிதோ ராக்கையென் றெண்ணித்—தடுமாற்றம்
தீர்ப்பெம்யா மென்றுணருந் திண்ணறி வாளரை
நேர்ப்பாரியார் நீணிலத்தின் மேல.

(இ-ள்) ஓர்யாக்கை - இத்தன்மையாகியஉடல், மழை - மழையில், படு - தோன்றிமறைகின்ற, மொக்குளின் - குமிழியைப்போல, பல்காலும்-பலமுறையும், தோன்றி - காணப்பட்டு, கெடும்-அழியும், இதுஎன்று -இத்தன்மையதென்று, எண்ணி - (அவ்வுடலை) அவமதித்து, தடுமாற்றம் - பிறவித்தடுமாற்றத்தை, யாம்தீர்ப்பெம்என்று-நாம்ஒழிப்போமென்று, உணரும் -(தீர்க்கும்வழியை) ஆராய்கின்ற, திண்அறிவாளரை - கலங்காதஅறிவைஆளுதலுடையாரை, நீள்நிலத்தின்மேல் - பெரியபூமியில், நேர்ப்பார்யார் - ஒப்பார்யாவர், ஒருவருமிலர். எ-று

அருவமாயும், நித்தமாயுமுள்ள உயிர்க்குத்தோன்றலும், கெடுதலுமில்லாமையால், அத்தோன்றலையும் கெடுதலையும் உருவமாயும் அநித்தமாயுமுள்ள உடலின்மேலேற்றித் தோன்றிக் கெடுமென்றும், கெடாதுநிற்பதாகிய ஒருடலின்மையாலும், உயிர்தான்செய்த வினைப்பயனை உடலோடுகூடிநின்றே அநுபவித்தல் வேண்டுமாதலாலும், பல்காலுமென்றுங் கூறினர். ஓன்றென்னும்வரையறைப்பண்பு இழிவையுணர்த்தியது. இதுஎன்னுங் குறிப்புவினைமுற்றின்பகுதியாகிய இகரச்சுட்டு தோற்றக்கேடுகளைச் சுட்டிநின்றது. (௨௭)

யாக்கையை யாப்புடைத்தாப் பெற்றவர் தாம்பெற்ற
யாக்கையா லாய பயன்கொள்க—யாக்கை
மலையாடு மஞ்சுபோற் றோன்றிமற் றாங்கே
நிலையாது நீத்து விடும்.

(இ-ள்) யாக்கை - உடம்பு, மலை - மலையின்மேல், ஆடும் - உலவுகின்ற மஞ்சுபோல - மேகம்போல, தோன்றி - (பூமியில்) காணப்பட்டு, ஆங்கே - அத்தோன்றியநிலையில்தானே, நிலையாது - நிலைத்திராமல், மற்றுநீத்துவிடும் - (பூமியை) நீங்கிவிடும், (ஆதலால்) யாக்கையை - உடம்பை, யாப்புஉடைத்து ஆக- உறுதியுடையதாக, பெற்றவர் - (முன்செய்தநல்வினையால்) பெற்றவர்கள், தாம்பெற்ற - தாம்பெற்றுள்ள, யாக்கையால - அவ்வுடம்பினால், ஆயபயன் - தக்கஅறப்பயனை, கொள்க - கொள்ளக்கடவர். எ-று

மலையாடுமஞ்சை உடலுக்கு உவமிந்தமையால்உடல்தோன்றுதற்குரியஇடமாகியபூமி வருவிக்கப்பட்டது. மாநுடயாக்கையை அடைதல் ஒருபேறென்பார்பெற்றவரென்றும், அதனை வற்புறுத்தற்குத் தாம்பெற்ற யாக்கையென்றும், பிறப்பின்பயன் அறனே ஆதலால்அதனைப்பயனென்றுங்கூறினர். யாக்கையாலென்னும் மூன்றனுருபு கொள்கவென்னும் வியங்கோள் கொண்டது. மற்று வினைமாற்றில்வந்தது. (௨அ)

புன்னுனிமே னீர்போ னிலையாமை யென்றெண்ணி
இன்னினியே செய்க வறவினை—இன்னினியே
நின்றா னிருந்தான கிடந்தான்றன் கேளலறச்
சென்றா னெனப்படுத லால.

(இ-ள்) இன்னினியே - இப்போதே, நின்றான் - நின்றனன், இருந்தான் - உட்கார்ந்தான், கிடந்தான் - படுத்தான், தன்கேள - தன்சுற்றத்தார், அலற - அலறியழும்படி,சென்றான்என்னப்படுதலால் - இறந்தானென்றுசொல்லப்படுதலால், புல்நுனிமேல் - புல்லினதுநுனியிலுள்ள,நீர்போல - நீரைப்போல,நிலையாமைஎன்று-(உடல்)நிலையில்லாமையையுடையதென்றுகருதி, இன்னினியே- உடலோடுகூடி யிருக்கின்றபொழுதே, அறவினை - அறத்தொழிலை, செய்க - செய்துகொள்க. எ-று

ஒருகாலத்திற்றானேநிற்றலும், இருத்தலும், கிடத்தலும் செல்லுதலுமாகிய பலதொழிலுமநடத்தல்கூடாதாதலால் ஒருவனிருந்தநிலையைக்கண்டோர்கூறுங்கூற்றாகநின்றான், இருந்தான், கிடந்தான், சென்றானெனக் கூறினர். இன்னினியேஎன்பதனை இருந்தான் முதலியவற்றோடுங்கூட்டுக. இன்னே என்பதுபோல இன்னினி நிகழ்காலம் உணர்த்தும் இடைச்சொல். ஏ இரண்டும்பிரிநிலை, நிலையாமை என்னுங் குணத்தின்பெயர் குணியின்மேல் நின்றது ஓர்மரபுவழுவமைதி. அதிகாரததால் வந்தியைவதினால் யாக்கைஎனமிகைபடக்கூறுதொழிந்தார். (௨௯)

கேளாதே வந்து கிளைகளா யிற்றோன்றி
வாளாதே போவரால் மாந்தர்கள் —வாளாதே
சேக்கை மரனொழியச் சேணீங்கு புட்போல
யாக்கை தமர்க்கொழிய நீத்து.

(இ-ள்) இல் - ஒருகுடும்பத்தில், கேளாதே - உணராதவகையே, வந்து, (கருவில்) சேர்ந்து, கிளைகளாய்த்தோன்றி - முறையுடையார்களாய்ப்பிறந்து - மரன் - மரத்தில் சேக்கை - தன்கூடு, ஒழிய தன்னைநீங்கும்படி, சேண் - நெடுந்தூரவிடத்தில், வாளாதே நீங்கு - சொல்லாமலே நீங்கிச்செல்லுகிற, புள்போல, பறவையைப் போல, யாக்கை - தம்முடல் தமர்க்கு - உறவினர்க்கு, ஒழிய - தம்மினீங்கும்படி, நீத்து - நீக்கிவிட்டு, வாளாதே - உணராதவகையே போவர் - செல்வார், மாந்தர்கள் - மனிதர்கள் என்று

கேளாதே, வாளாதே யென்பன மௌனம், அவை தாமும்பிறரும் உணராவகையின்மேல் நின்றன. இதனிலக்கத்து ... பொருள் ... தமக்கெனச் சுதந்தரமின்றி இருவினையாற்பட்டு வந்து தோன்றலும் போதலுமாதலால் கேளாதேவந்து தோன்றி வாளாதே போவரென்றார் ... புள் ... முட்டை ... பெரிதாதலுக்காகக் கட்டியகூட்டை அவ்வினைசெய் முற்றத்தின் அக்கூட்டைவிட்டு நீங்குதல்போல, மாந்தர்கள் இருவினைப்பயனை அனுபவித்தற்காக வந்துதோன்றி, அப்பயனை அனுபவித்தபின் அவ்வுடலை விட்டு நீங்குவரென்பது. புள்ளொழிவுவமம் தமர்க்கு ... எனுமானோர் ... பொருளது (௩0)

## ௪ - ஆம் அதிகாரம் அறன்வலியுறுத்தல்.

அஃதாவது நிலைபேறில்லாத செல்வம், இளமை, யாக்கைகள் போலாகாமல் இம்மை, மறுமை, வீடென்னும் மூன்றையுந்தருவதாகிய அறத்தினது நிலைபேற்றைக் கூறுதல். அதிகாரமுறைமையும் இதனால் விளங்கும்.

அகத்தார் வாழ்வாரென் றண்ணாந்து நோக்கிப்
புகத்தாம் பெறாஅர் புறங்கடை பற்றி
மிகத்தாம் வருந்தி யிருப்பரே மேலைத்
தவத்தால் தவஞ்செய்யா தார்.

(இ-ள்) மேலைத்தவத்தால் - முற்பிறப்பிற்செய்த தவத்தின் பயனாகிய செல்வச்செருக்கால், தவம்செய்யாதார் - (மறுமைக்குவேண்டிய) தவத்தைச்செய்யாமல் பிறந்தவர், அகத்தார் - இல்வாழ்க்கையுடையாரே, வாழ்வாரென்று எண்ணி - உயிர்வாழ்பவரென்று மதித்து, அண்ணாந்து - தலைநிமிர்ந்து, நோக்கி - (அவர்மனையின்மேனிலையை) பார்த்து, தாம் புகப்பெறார் - தாமாகநுழைதலைப் பெறுமல், புறங்கடை - தலைவாயிலை, பற்றி - பிடியாநின்று, மிகவருந்தி - மிகுதியாகவருந்தாநின்று, இருப்பர் - யாதொருமுயற்சியுமில்லாதிருப்பார் எ-று

அண்ணாத்தற்குரியது தலையாதலால் அண்ணாந்தென்னுஞ் சினைவினை நோக்கி என்னும் முதல்வினைகொண்டதென்க. அண்ணாந்தென நோக்கிப்பால நோக்கி

[illegible] செய்யப்படும் பொருளாக மேனிலைவருவிக்கப்பட்டது புக என்னு [illegible] செய்யவென்னுஞ் செய்தெழிற்பெயர்ப்பொருள்பட நின்றது [illegible] மீக [illegible] போலப் [illegible] முன்னைத்தொகைத் [illegible] ஆறுமவேறுறுமைத் [illegible] ஒரு [illegible] முற்பிறப்பிற் செய்த தவங் காரணமாக [illegible] பிறப்பிற் [illegible] பா [illegible] செல்வச் [illegible] காலமயங்கி வருபிறப்பிற் [illegible] செய்யாவிடின் [illegible] தவ [illegible] (௩௧)

[illegible]
போவாரார் [illegible]
[illegible] வெனினும் [illegible]
[illegible]

([illegible]) [illegible] அறமம [illegible] செய்க [illegible] செல்வப்பொருள் [illegible] எனவும், [illegible] செய்தொழில் [illegible] வாழ்நாள்கள் [illegible] செய்து [illegible] உண [illegible]

எனவே [illegible] வினையெனவும் [illegible] தீவினை [illegible] காலத்தால் [illegible] வினையால் [illegible] பொருள் [illegible] இரண்ட [illegible] போதே [illegible] கூறுவா [illegible] னுயினுன (௩௨)

வினைபயன் வந்தக்கால் வெய்ய வுயிரா
மனத்தி னழியுமாம் பேதை — நினைத்ததனைத்
தொல்லைய தென்றுணர்வா ரே தடுமாற்றத்
தெல்லை யிகந்தொருவு வார்.

(இ-ள்) பேதை - அறிவில்லான், வினைப்பயன் - தீவினை பயன், வந்த

க்கால் - தன்னை வந்தடைந்தால், மனத்தின் அழியா - மனத்தில் ஊக்கங்கெட்டு, வெய்ய உயிர்க்கும் - மிகுதியாகப் பெருமூச்செறிவான், அதனை - அத்தீவினைப் பயனை, நினைத்து - (நூலளவையால்) ஆராய்ந்து, தொல்லையது என்று - முன்னை வினையாலானதென்று, உணர்வாரே - உணரவல்லவரே, தம்மொடு மற்றது - பிறவித் தம்மொடு மற்றதனது, எல்லை - எல்லையாகிய வினையை, இகந்து ஒருவுவார் - கடந்து நீங்குவார் எ - று.

பைய, வெய்ய என்பன போல வெய்ய என்பது வினையெச்சக்குறிப்பு. மனத்தினழிதல் காரணமாக உயிர்த்தலுள்ளதாவதாதலால், உயிரா அழியுமென்பன வற்றைப் பின்முன்னாக நிறுத்தி விகுதிபிரித்துக் கூட்டியுரைக்க. பேதைப்பண்பாகுபெயர். தொல்லையென்பதும் அவ்வாகுபெயர். பிறவித் தம்மொடு மற்றதெல்லையாவது வினையுள்ளளவும் பிறவியுள்ளதாமாதலால் அவ்வினையை அத்தம்மொடு மற்றதுக் கெல்லையென்றார் எ - பிரிநிலை. (௩௩)

> அரும்பெறல் யாக்கையைப் பெற்ற பயத்தால்
> பெரும்பயனு மாற்றவே கொள்க — கரும்பூர்ந்த
> சாறுபோற் சாலவும் பின்னுதவி மற்றதன்
> கோதுபோற் போகு முடம்பு

(இ-ள்) பெறலரு - பெறுதலருமையாகிய, யாக்கையை - உடம்பை, பெற்ற பயத்தால் - அடைந்த அறப்பயனால் பெரும் பயனும் - பெருமையாகிய தவப்பயனையும், ஆற்றவே கொள்க - மிகுதியாகவே பெற்றுக் கடவர்கள், கரும்பு - கரும்பு, ஊர்ந்த - தன்னை ஆலையிலாட்டினதனாலுண்டாகிய, சாறு உதவல் போல - சாற்றை உதவுதல் போல, சாலவும் - மிகவும், பின் உதவி - மறுமைக்குரிய பயனைத் தந்து, அதன் கோதுபோல - அக்கரும்பின் சக்கைபோல, போகும் - ஒழியும், உடம்பு - உடல் எ - று.

ஒருவன் வீட்டை அடைதற்குரியது மானுடயாக்கை ஆதலால் அரும்பெறல் யாக்கை என்றும், அதனைப் பெறுதற்கு முன்செய்த நல்வினைப்பயனுதலால் பெற்ற பயத்தால் என்றுங் கூறினார். காரியம் காரணத்தின் பின்னதாதலால் பயன் பின் எனப்பட்டது. அது பண்பாகுபெயர். பெற்றதே பயனாதலால் பெற்ற என்னும் காரியப் பொருட்டாகிய இறந்தகாலப் பெயரெச்சம் பயமென்னுஞ் செயற்பெயரையும், ஊர்ந்த என்னுங் காரணப்பொருட்டாகிய அக்காலப்பெயரெச்சம் சாறென்னுங் காரியப்பெயரையுங் கொண்டன. உதவலென்பது சொல்லெச்சம். வாளா பயனென்னாது அதனைப் பெருமை என்னும் அடைகொடுத்தோதினமையாலும், உடலுக்குக் கரும்பை உவமையாக்கினமையாலும் பெரும்பயனென்றது தவத்தை. அரும்பெறல் யாக்கையைப் பெறுதற்குரிய அறப்பயனைக் கொண்டதே அன்றி எனப்பொருள் தரலால் உம்மை இறந்தது தழீஇய எச்சவும்மை. பெரும்பயன் செய்துகொள்ளலாவது விரதங்களினால் உணவைக்குறைத்தல், கோடையில் வெயிலில் நிற்றல், மழையிலும், பனியிலும் மற்றுமுதலியவற்றில் நிற்றல் முதலிய செயல்களால் உடலை உலர்த்தி, மனத்தைப் பொறிகளின்வழியே போகவொட்டாமல் நிறுத்தல். (௩௪)

கரும்பாட்டிக் கட்டி சிறுகாலைக் கொண்டார்
துரும்பெழுந்து வேங்காற் றுயராண் டுழவார்
வருந்தி யுடம்பின் பயன்கொண்டார் கூற்றம்
வருங்காற் பரிவ திலர்.

(இ-ள்.) சிறுகாலை - (கரும்பு) பதனழியாதகாலத்தில், கரும்புஆட்டி- அக்கரும்பை (ஆலையில்) ஆட்டி, கட்டி - சருக்கரைக்கட்டியை, கொண்டார் - பெற்றவர், துரும்புஎழுந்து - (அது) துரும்பாகி, வேம்கால் - (தீயில்)எரியும்போது, ஆண்டு - அதுகண்டவிடத்து,துயர் உழவார் -துன்பப்படார்,வருந்தி- (விரதமுதலியவற்றால) வருந்தி, உடம்பின்பயன்கொண்டார் - உடம்பாலாகிய அறப்பயனைப் பெற்றவர், கூற்றம்வருங்கால் - யமன் வருகின்ற மரணகாலத்தில், பரிவதுஇலர்- (தம்முடலின் கேட்டைகுறித்த) இரங்குதலில்லார்

சிறுகாலைஎன்பது விடியல், அதுபதனழியாதகாலத்துக்காயிற்று, கட்டி தொழிலடியாகப் பிறந்தபெயர், இவினைமுதற்பொருண்மைவிகுதி. கட்டுதல் இறுகுதல் உடம்பின்பயன்மூன்றுவதன் கருவிப்பொருண்மையில்வந்தஆறும்வேற்றுமைத தொகைப்புணர்ச்சி. யோகியர்கரும் வாழ்நாண்முடிவில் யமதரிசனமாமென்பது நூற்றுணிபாதலால் கூற்றம் வருங்காலென்றார். இதுவேற்றுப்பொருள வைப்பென்னும் அணி. (கூ௫)

இன்றுகொ லன்றுகொ லென்றுகொ லென்னாது
பின்றையே நின்றது கூற்றமென றெண்ணி
ஒருவுமின் றீயவை யொல்லும வகையால்
மருவுமின் மாணடா ரறம.

(இ-ள்) கூற்றம் - யமன்வருதல், இன்றுகொல் - இவ்விளமை யிலோ அன்றுகொல் - மூப்பின் காலத்திலோ, என்றுகொல் - இடைநின்றகாலத்திலோ, என்னாது - என்றுஎண்ணாமல்,பின்றையே - பிடரினிடத்தே, நின்றது என்றுஎண்ணி - நின்றுளனென்றுகருதி, மாண்டார் - மேன்மையானஅறிவுடையாரால் விலக்கிய,தீயவை-தீயகருமங்களை, ஒருவுமின் - நீக்குங்கோள், ஒல்லும்வகையால் - செய்யக்கூடியவகையால, அறம் - (அவர்களால் விதித்த) நற்கருமங்களை, மருவுமின் - தழுவிநடவுங்கோள் எ-று.

வருதல் சொல்லெச்சம்.பகுதிப்பொருள் விகுதியாகிய து என்பதுதகரம் றகரமாய், ஐகாரச்சாரியை ஏற்றுநின்ற பின்றைஎன்னும் பண்புப்பெயர் ஆகுபெயராய்ப் பிடரையுணர்த்திற்று. மறுபிறப்பும், இருவினைப்பயனும், கடவுளுமில்லையென்றும், இன்பமும்பொருளும் ஒருவனாற் செய்யப்படுவன என்றுங் கூறும் உலோகாயிதர் முதலியோரார்கூறப்பட்டனவற்றினீக்குதற்கு மாண்டாரறமென்றார். ஒல்லும்வகை மருவுதலாவது இல்லறத்தைப் பொருளளவுக்கேற்கவும், துறவறத்தை உடலின்நிலைமைக்கேற்கவும் தழுவிநடத்தல். கொல் ஐயப்பொருளது. (௯௬)

மக்களா லாய பெரும்பயனு மாயுங்கால்
எத்துணையு மாற்றப் பலவானால்—தொக்க
உடம்பிற்கே யொப்புரவு செய்தொழுகா தும்பர்க்
கிடந்துண்ணப் பண்ணப் படும்.

(இ-ள்) மக்களால் - மக்கட்பிறப்பினால், ஆய - உண்டாகுதற்குரிய, பெரும்பயனும் - பெருமையாகியபயன்களும், ஆயுங்கால் - (நூல்களால்) ஆராயுமிடத்து, எத்துணையும் - எவ்வளவுசிறிதும், ஆற்ற - செய்வதற்கு, பல - பலவாயிருக்கின்றன, ஆனால் - ஆயின், தொக்க - (ஏழுதாதுக்களால்) கூடிய, உடம்பிற்கே - உடலுக்கே, ஒப்புரவு - (ஒப்புர) நன்மைகளை, செய்து ஒழுகாது செய்துவாழாமல், உம்பர் - துறக்கத்தில், கிடந்து - நீங்காதிருந்து, உண்ண (சுகத்தை) அநுபவிக்கும்படி, பண்ணப்படும் - (உயிர்க்குரிய நன்மையாகிய சில அறங்களை, செய்தலேதகுதியாம். எ - று.

மக்கள் பொருளாகுபெயர் முன்னுள்ள உம்மை உயர்வுசிறப்பு. பின்னுள்ள உம்மை இழிவுசிறப்பு. முன்னே பலஎன்றும், உடம்பிற்கே ஒப்புரவு என்றுங்கூறினமையால் உயிர்க்குறுத்த நன்மைகளென்பது வருவிக்கப்பட்டது. பல பண்படியாகப்பிறந்த குறிப்புவினைமுற்று ஏ பிரிநிலை. (௩௭)

உறக்குந் துணையதோ ராலம்வித் தீண்டி
இறப்ப நிழற்பயந் தாஅங்—கறப்பயனும்
தான்சிறி தாயினுந் தக்கார்கைப் பட்டக்கால்
வான்சிறிதாப் போர்த்து விடும்.

(இ-ள்) உறக்கும் துணையது - சுருங்கிய அளவினதாகிய, ஓராலம்வித்து - சிறியஆலம்விதை, ஈண்டி - முளைத்துவளர்ந்து, இறப்ப - (மற்றமரங்களினும்) மிகுதியாக, நிழல்பயந்தால்ஆங்கு - நிழலைத்தந்தாற்போல, தான - (செய்யப்படும்) அறம்சிறிது ஆயினும் - சிறியதாயிருப்பினும், தக்கார்கை - (அறிவுஒழுக்கங்களால்) தகுதியுடையாரதுகையில், பட்டக்கால் - படுமானால், அறப்பயனும் - அவ்வறத்தின்பயனும், வான்சிறிதுஆக - ஆகாயத்தைச்சிறியதாகும்படி, போர்த்துவிடும் - தனக்குள்ளாக்கிக்கொள்ளும். எ - று.

உறப்பு சுருக்கமென்னுங் குறிப்புணர்த்தும்உரி. உறங்குமென்பது உறக்குமெனவலித்தலாயிற்றெனக்கொண்டு, உறங்குந் துணையது - உறங்கிவிழுங்காலத்தின் அளவினதாகிய எனஉரைத்தலுமாம். நிழற்பயந்தாங் கென்பதில் லகரம் சந்தஇன்பப்பொருட்டுத்திரிந்தது. முடிவிலாதபயனைத் தருமென்பதனை வான்சிறிதாப்போர்த்து விடுமென்றது இலக்கணை. அவ்வறம் தன்பயனைத் தாராதிராததலால் போர்த்துவிடுமென்றார். (௩௮)

வைகலும் வைகல வரக்கண்டு மஃதுணரார்
வைகலும வைகலை வைகுமென றின்புறுவா
வைகலும வைகற்றம வாழ்நாண்மேல வைகுதல்
வைகலை வைததுணரா தார்.

(இ-ள்) வைகலும் - நாள்தோறும், வைகல் - பொழுதுகழிதலை, தம்வாழ்நாள்மேல் - தமது ஆயுளின்மேல், வைகுதல்வைத்து - தங்குதலாகவைத்து, வைகலை - அப்பொழுதுகழிவை, உணராதார்- உணருமியல்பிலலாதவர், வைகலும் - தினமும், வைகல்வர - பொழுதுகழிவுவராநிறக, கண்டும் - கண்கூடாகப்பார்த்திருந்தும், அஃதுஉணரார் - அப்பொழுதுகழிவை உணர்ந்து துன்புறுமல், வைகலும் -தினமும், வைகலே - அபபொழுதுகழிவை, வைகும்என்று (முட்டின்றி) கழியாநிறகுமென்று, இன்புறுவர் - மகிழ்வார். எ-று.

வைகற்றம்என்பதில் றகரம் சந்தவின்பப் பொருட்டுவந்த விரித்தல்விகாரம் மூன்றும் அடியினீற்றில் நின்றவைகுதல் தஙகுதலென்னும் பொருளது மற்றவைகல்கள் நாள் கழிதலென்னும் பொருளன. பொழுதுகழிதலைத் தம் வாழ்நாளில் வைததுணர்வாராயின் இன்புறுமல்விரைந்து அறஞ்செய்வரென்பது குறிப்பெச்சம், இது சொறபொருட்பின் வருநிலை. (௩௯)

மான வருங்கல நீக்கி யிரவென்னும
ஈன விளிவினால் வாழ்வேன்மன் —ஈனத்தால்
ஊட்டியக் கண்ணு முறுதிசேரா திவவுடமபு
நீட்டித்து நிறகு மெனின.

(இ-ள்) ஈனத்தால் - இழிதொழிலினால், ஊட்டியக்கண்ணும் - உண்பித்தவிடத்தும், இவ்வுடம்பு - இந்தஉடம்பு, உறுதிசேர்ந்து - தளராமையையடைந்து, நீட்டித்து - (ஆயுளை) நீள்வித்து, நிற்கும்எனின் - நிலைக்குமானால், மானம் - மானமாகிய, அருகலம்-(இறந்தாலபெறுதல) அருமையாகிய அணியை, நீக்கி - விடுத்து, இரவுஎன்னும் - இரததலென்றுசொல்லப்படும், ஈனம்-அவமதிப்பாகிய, இளிவினால் - இழிதொழிலினால், வாழ்வேன்மன் -உயிர்வாழ்வேன்

மற்றஅணிபோலக்களவர்முதலியோரால்கவரப்படாமையையும்,எக்காலத்தும் உளதாவதாகிய தன்மையையு முடையதாய்த் தன்னை உடையானை அழகு செய்தலால் மானத்தை அருங்கலமென்றான். நிலைததலில்லாதஉடம்பைப்பாதுகாத்தறபொருட்டு நிலைத்தலுடைய மானத்தைநீக்கி வாழேனென்னும் பொருள்தருதலால் மன் ஒழியிசைக் கண்வந்தது. இளி என்பதும், பின்னுள்ள ஈனமென்பதும் பண்பாகுபெயர்கள். உடல்நிற்பதறகுக் காரணமாகிய ஆயுளென்னுஞ் செயப்படுபொருள நீட்டித்தென்னும் வினையெச்சத்துக்கு வருவிததுரைக்கப் (௪௰)

## ரு-ஆம் அதிகாரம் - தூயதன்மை.

அஃதாவது மாதரைவிரும்பாத சுத்தராந்தன்மை. பொதுவகையால் அ

றன்வலியுறுத்தல் கூறி, இனிச் சிறப்புவகையால் துறவு கூறுவாராதலால் அதற்குமுற்றும் பகையாகிய அவ்விருப்பத்தை ஒழிதல் வேண்டுமென்னுங் கருததால் அவ்விருப்பம் வைத்தற்குரிய மாதரதிழிவைக் கூறுகின்றமையின் இது அதன் பின்வைககப்பட்டது.

மாக்கேழ் மடநல்லா யென்றரற்றுஞ் சான்றவர்
நோக்கார்கொ னொய்யதோர் புக்கிலை—யாக்கைக்கோர்
ஈச்சிற கன்னதோர் தோலறினும் வேண்டுமே
காக்கை கடிவதோர் கோல்.

(இ - ள்) ஓர்ஈச்சிறகு - சிறியஈயினதுசிறகை, அன்னது - ஒத்ததாகிய, ஓர்தோல் - சிறிதுதோல், அறினும் - அறுந்தாலும், காக்கை - (அப்புண்ணை க்குத்தவரும்) காக்கையை, கடிவது - ஓட்டுவதாகிய, ஓர்கோல் - ஒருசிறுகொம்பு, யாக்கைக்கு-(நிலையாததாகிய) உடலுக்கு, வேண்டும் - வேண்டப்படும், (அப்படியிருக்க) மா - (நிறத்தாலும் மென்மையாலும்) மாந்தளிர், கேழ-ஒப்பாகிய, மடநல்லாய் - இளமைவாய்ந்த சிறந்த அழகுடையாளே, என்றுஅரறும் - என்றுகதறுகின்ற, சான்றவர் - (கல்வி யறிவு கேள்விகளால்) நிறைவில்லாதவர், நொய்யது மிகச்சிறியதாகிய, ஓர்புக்கிலை - ஒப்பற்ற நிலைததவீட்டை, நோக்கார்கொல் - (தம்முயிர்ககு) கருதாரகளோ. எ-று

மாக்கேழ் என்பதற்குத் திருமகளொப்பாகிய என உரைத்தலுமாம். மடநல்லாய் என்பதைப் பண்புத் தொகைநிலைத்தொடராககி மடமாகிய நல்லாய என உரைத்தலே அன்றி, மடமென்னும் எழுவாய் வருமொழியின் முதனிலையாகிய நலஎன்பதனோடு முடிந்ததாகக்கொண்டு, திணைவழுவமைதி யாக்கி, இளமைமிக்காய் என உரைத்தலும் பொருந்தும். இம்மைப் பயன்முதலியவற்றைத் தராமையால் புணர்ந்துரைத்தலை அரற்றுமென்றும், நோககுதலினது சிறுமையைப் புககிலின்மேலேற்றி நொய்யதோர்புககிலென்றுங் கூறினர் அவ்வரற்றுமென்றகுறிப்பால் சான்றவரொன்னும் இறந்தகால வினைப்பெயர் சால்பிலாருக் காயிற்று. கொல் ஒருபால் நிகழ்ந்த ஐயப்பொருளது. புக்கில் ஒருசொற்றன்மையது. (சுக)

தோற்போர்வை மேலுந் தொளைபலவாய்ப் பொய்ம்மறைக்கு
மீப்போர்வை மாட்சித் துடம்பானால்—மீப்போர்வை [ம
பொய்ம்மறையாக் காமம் புகலாது மற்றதனைப்
பைம்மறியாப் பார்க்கப் படும்.

(இ-ள்) தோல்போர்வைமேலும் - தோலாற்சமைந்த போர்வையின் மேலிடத்தும், பலதொளையாய் - பலதொளைகளையுடையதாகி, பொய்-அருவருக்கத்தக்க உறுப்புகளை, மறைக்கும்-மறையச்செய்யும், மீப்போர்வை - மேற்போர்வையால், மாட்சித்து -(விரும்பத்தகும்) பெருமையுடையது, உடம்பு-உடல் ஆனால்உம்-(அது)அப்பெருமையை யுடையதாயிருப்பினும்,மீப்போர்வை-அம்

மேற் போர்வையால், பொய் - அவ்வருக்கத்தக்க உறுப்புகளை, மறையா மறையவைத்து, காமம் - (அவ்வுடம்பினிடத்து) காமத்தை, புகலாது - தல்செய்யாமல், அதனை - அம்மேற்போர்வையை, பை - பையைமறித்து ார்ப்பதுபோல, மறியா - மதறித்து, மற்றுப்பார்க்கப்படும் - (மனத்தால்) நோக்குதலே தகுதி. எ-று.

பார்ப்பாராயின் மாக்கேழ்மடநல்லா யென்றரற்றுவொன்பது கருதது.பேதை கண்ணுக்கினிதாகிய மீப்போர்வையாலாகியமாட்சியை உண்மையெனக்கொள்ளுதலால் அருவருக்கும் உள்ளுறுப்புகளைப் பொய்யென்றார். உள்ளே பலதொளைகளையுடைய தாயிருப்பதும் அன்றி எனப்பொருள் தரலால் மேலும் என்றஉம்மை இறந்தது தழீஇய எச்சவும்மை. ஆறு லென்பதனீற்றில் உயர்வுசிறப்பும்மை தொகுதல், மறையா தன்வினை பிறவினைகளுக்குப் பொதுவாயினும், இங்குப்பிறவினையாய் நின்றது. மறையவைத்தென்றது நினையாமல்வைத்தென்பதனை. மற்று வினைமாறறுப்பொருளது. ஆ யென்னும் வினையெச்சம் மாட்சித்தென்னுங் குறிப்புவினை முற்றையும், மறையா என்னும் எதிர்மறைவினையெச்சத்தின் முதனிலையையுங் கொணடன. தொளைபலவா யென்பது குணியைக் குணமாககூறுவதோர் மரபுவழுவமைதி. (சஉ)

தக்கோலந் தின்று தலைநிறையப் பூச்சூடிப்
பொய்க்கோலஞ் செய்ய வொழியுமே—எக்காலும்
உண்டி வினையு ளுறைக்கு மெனப்பெரியோர்
கண்டுகை விட்ட மயல்.

(இ-ள்) பெரியோர் - பேரறிவுடையோர், எக்காலும் - அலங்காரஞ்செய்துகொண்டகாலத்தும் செய்துகொள்ளாக காலத்தும், வினை - பலவகைத்தொழிலாற்சமைத்த, உண்டி - உணவுப்பொருள்கள், உள் - உள்ளிடத்து, உறைக்கும் என - உறைக்குமென்று, கண்டு - உணர்ந்து, கைவிட்ட - முற்றும் விட்ட, மயல் - (பெண்ணாகிய) துரும்பு, தக்கோலம் - தக்கோலமரத்தின் மலரை, தின்று - (மணமுண்டாம்படி) மென்று, தலைநிறைய - தலையில்நிரம்ப, பூச்சூடி - மலர்களைத்தரித்து, பொய்க்கோலம் - தனக்கியறகையல்லாதமற்ற அலங்காரத்தை, செய்ய - செய்துகொள்வதினால், ஒழியுமே - (அவ்வுண்டி உள்ளுறைத்தல்) ஒழிந்துபோகுமோ போகாது. எ-று.

கோலத்துக்குரிய மற்ற அணியாடைகளைத் தரித்தல்முதலியவை அடங்கப்பொய்க்கோலமென்றார். தக்கோலம் முதலாகுபெயர். பொய்ம்மை இங்கு இயற்கையல்லாமைக்காயிற்று. ஏ எதிர்மறை ஆதலால் பொய்க்கோலத்தைக் கண்டு மகிழாமல் உண்டியுள்ளுறைக்கும் புணணுடலென உண்மையுணர்ந்து துறவுகொள்க என்பது இசையெச்சம். (சங)

தெண்ணீர்க் குவளை பொருகயல் வேலென்று
கண்ணில்புன் மாக்கள் கவற்ற விடுவேனோ

உண்ணீர் களைந்தக்கா னுங்குருன் றிட்டன்ன
கண்ணீர்மை கண்டொழுகு வேன்.

(இ - ள்) உள்நீர் - உள்ளிடத்துள்ள நீர், களைந்தக்கால் - (நோயால்) நீக்கிவிடப்பட்டால், நுங்குருன்றிட்டது அன்ன - நுங்கைத்தோண்டியதை ஒத்த, கண்நீர்மை - கண்ணினதுசெயலை, கண்டு - உணர்ந்து, ஒழுகுவேன் - (துறவுவழியில்) நடப்பேனாகியநான், (உருவினால்) தெள்நீர் - தெளிவாகியநீரில் பூத்த, குவளை - குவளைமலர், (மெய்யாலும் பிறழ்தறறொழிலாலும்) பொருகயல் - போர்செய்கின்றசேல்மீன், (மெய்யாலும்உருவுதறறொழிலாலும)வேல் வேலாயுதம், என்று - என்று (பெண்ணினுடைய கண்ணை) சொலலி, கண இல் - அறிவில்லாத, புல்மாக்கள் - இழிவாகிய மாந்தாகள், கவற்ற - (என்மனத்தை) கவலைப்படுத்தலால், விடுவெனோ - (என்னூககததை) விடுவேனோ விடேன். எ-று.

தெளிவு ஆழநீாக்குண்மையால் குவளையினது செழுமைதோன்றத் தெண்ணீர்க்குவளையென்பாராயினா. குவளைமுதலாகுபெயர். ஔதிர்மறை. நுங்குதொழிலாகுபெயர் தொழிலும் பணபினு ளடஙகுதலால் குழிதறறொழில நீர்மை எனப்பட்டது. கவறறல் கணணைப புனைந்துாைகருஞ சொல்லால கேட்போர்க்கு அககணணினிடத்து விருப்பமுணடாககல. (சுசு)

முல்லை முகைமுறுவன் முததென் றிவைபிதறறும்
கல்லாபபுன மாககள கவறற விடுவேனோ
எல்லாருங் காணப் புறங்காட் டுதிாநதுக்க
பல்லென்பு கணடொழுகு வேன்.

(இ-ள்) எல்லாரும் - யாவரும், காண - விளக்கமாககாணும்படி, புறங்காடு - சுடுகாட்டில், உதிர்ந்துஉகக - உதிர்ந்துகிடக்கின்ற, பல்எனபு நீர்மை - பல்லாகிய எலும்பினது தன்மையை, கண்டு - உணர்ந்து, ஒழுகுவேன் - (துறவுவழியில்) நடப்பேனாகியநான், முறுவல் - (பெண்ணினுடைய) பலலை, முல்லைமுகைஎன்று - (மெய்யாலும உருவாலும்) முல்லை அரும்பென்றும, முத்தென்று - (உருவால்) முத்தென்றும, இவை - இவ்வுவமைகளை, பிதறறும் - விடாதுபேசுகின்ற, கல்லாத - கற்றறிவில்லாத, புல்மாக்கள - இழிவாகியமாந்த கவற்ற - (அவ்வாறு புனைந்துாைத்து என்மனத்தை) கவலைப்படுத்தலால், விடுவேனோ - (என்னூக்கததை) விடுவேனோ விடேன். எ-று.

பிதற்றுதல் ஒருபொருளையே விடாமல் பேசுதல், “பிடித்தொன்றைவிடாதுபேசல் பிதற்றுதலென்றுபேரே” என்னும் நிகண்டாலுமுணர்க. கல்லாமைஅதன்காரியமாகிய அறிவின்மையின்மேல் நின்றது. எல்லாருமென்றது கல்லாப்புன்மாக்களையும் தன்போல்வாரையும். உதிர்ந்து உக்க ஒருபொருட்பன்மொழி. முல்லைமுகை, முத்தென்பவையே அன்றி இப்பெற்றிய ஆய கழுமுள், முருந்துமுதலியவற்றையுங் கூறுகின்றனரென்பார்முத்தென்பவைபிதற்றுமென்னுமல் முத்தென்றிவை பிதற்றுமென்றார். உள்ளத்தினிகழும் விருப்பைக்கண்பார்வையாலும், முறுவல் நகையாலும் புன்மாக்களுக்குப் புலப்படுப்பன

ஆதலால் அவ்விரண்டையுங்கூறி, அவற்றுள்ளும் நோக்கத்தின்பின்னே நகை நிகழ்வதாதலால் முதற்கண்ணையும், அதன்பின் முறுவலையும் வைத்தனர். இவ்வாறு மாதருடைய கண்ணையும் பல்லையும் புனைந்துரைத்தல் மரபாதலாலும், கவியறிவுபெண்பாலராற்பெறப்படாமையால் கல்லாப்புன்மாக்கள் ஆண்பாலாரையுணர்த்தலாலும், அதிகாரத்தாலும் இவ்விருவயமும்பெண்பாலாருடையன என உணர்க. மேலேநீர்மை என்றதை இங்குப்பல்லுக்குங்கூட்டுக. •(சரு)

குடருங் கொழுவுங் குருதியு மென்பும்
தொடரு நரம்பொடு தோலும்—இடையிடையே
வைத்த தடியும வழும்புமா மற்றிவற்றுள்
எத்திறத்தா ளீர்ங்கோதை யாள்.

(இ-ள்) குடரும் - குடலும், கொழுவும் - இறைப்பையும், குருதியும்-உதிரமும், என்பும் - எலும்பும், தொடரும்நரம்பொடு-தொடர்ந்துள்ள நரம்புகளோடு, தோலும்.(மேலேபோர்த்த) தோலும், இடைஇடையே-(எலும்புநரம்புகளுக்கு)நடுவுநடுவே, வைத்ததடியும்-வைத்த இறைச்சியும், வழும்பும்-நிணமும்,ஆம்-ஆகும், (உடல்) இவற்றுள்-குடல்முதலியவற்றுள், எத்திறத்தாள்-எக்கூற்றினள், ஈர்கோதையாள் - (இழிசனரே உங்களால் விரும்பப்பட்ட) வாடாத பூமாலையை அணிந்தவள். எ-று

உடலென்பது சொல்லெச்சம். மற்றென்பது அசை. ஆமென்பதைப்பெயரெச்சமாக்கி வழும்புமாகிய இவற்றுளெனஉரைத்து ஒருமுடிபாக்கினும்பொருந்தும். குடர்முதலியவாகக் கூறிய வற்றுக்கே அன்றி மற்றவுறுப்புக்கும் கொழுமையைத் தரத்தக்க உணவுதங்குதற்கு இடமாதலின் அவ்விறைப்பையைப் பண்பாகுபெயராலே கொழுஎன்றும், இத்தன்மையதாகிய உடலுடையாள்மேல் வீசும்மணம் இயற்கையன்று ; மலர், மெய்ப்பூச்சு முதலியவற்றானாகிய செயற்கையா மென்பார் ஈர்ங்கோதையாளென்றுங் கூறினர். (சகு)

ஊறி யுவர்த்தக்க வொன்பது வாய்ப்புலனும்
கோதிக் குழும்பலைக்குங் கும்பத்தைப்—பேதை
பெருந்தோளி பெய்வளா யென்னுமீப் போர்த்த
கருந்தோலாற் கண்விளக்கப் பட்டு.

(இ-ள்) குழும்புஊறி - மலக்குழம்பு சுரப்பதினால், உவர்க்கத்தக்க - அருவருக்கத்தக்க, ஒன்பதுவாய்ப்புலனும் - ஒன்பது தொளையினிடங்களும், கோதி - (அம்மலக்குழம்பை) சிதறி, அலைக்கும் -(அச்சிந்தியகுழம்பால்) மூழ்குவிக்கின்ற, கும்பத்தை - குடத்தை, பேதை - அறிவிலான், மீப்போர்த்த-(அதன்மேல்) போர்க்கப்பட்ட, கருதோலால் - பெருமையாகிய தோலினால், கண்விளக்கப்பட்டு - தன்கண்கள் மழுக்கப்பட்டு, பெருதோளி - பெருமையாகிய தோளையுடையாளே, பெய்வளாய் - அணியப்பெற்ற வளையலையுடையாளே, என்னும் - என்று அழைப்பான். எ-று

ஊறி ஊறனென்பதன் றிரிபு. உவர்க்களென்பது உவமொ ஈறுதொகுத்தலாயிற்று. புலன் இடத்தின்மேல் நின்றது. உடலினின்றும் ஒன்பதுவாயின் வழியர்கக்குழம்பு வெளிப்படுதல்பற்றி, அவ்வொன்பதுவாய்ப்புலனை வினைமுதலாக்கியும், அக்குழம்புவிளைந்து தங்குதற்கு இடமாயிருத்தலாகிய இழிவுபற்றி உடலைக் கும்பமென்றும், அவ்வுடலினிழிவை யுணரமாட்டாமையால் அவனைப்பேதையென்றும், அவ்விழிவை யுணரவொட்டாது அவாவச்செய்தலாற் கருங்தோளென்றும், பேதைபுனைந்துரைப்பது பெரும்பான்மையும் ஒருத்தியினது அகத்துறுப்பையும், புறத்துறுப்பையுமே யாதலால் பெருந்தோளி, பெய்வளாயென்னுமென்றுங் கூறினர். கண்விளக்கம் மங்கலம். (சஎ)

பண்டமறியார் படிசாந்துங் கோதையும்
கொண்டு பாராட்டுவார் கண்டிலர்கொல்—மண்டிப்
பெடைச்சேவல் வன்கழுகு பேர்த்திட்டுக் குத்தும
முடைச்சாகா டச்சிற் றுழி.

(இ-ள்) முடை-தீநாறறத்தையுடைய, சாகாடு - உடலாகியவண்டில், அச்சுஇற்றஉழி-(உயிராகிய) அச்சுமரம்முறிந்தவிடத்து, பெடை -பேடையும்,சேவல் - சேவலுமாகிய, வல்கழுகு - வலியகழுகுகள், மண்டி-நெருங்கி, பேர்த்திட்டு - திருப்பி, குத்தும் - குத்தாநிற்கும், (இதனை) பண்டம்அறியார் - உடலாகிய பொருளினிழிவை அறியாதவராய், படிசாந்தும் - (தேய்த்தலால்) உண்டாகிய சந்தனத்தையும், கோதையும் - மலர்மாலையையும், கொண்டு - முயன்றுபெற்று, பாராட்டுவார் - (அத்தன்மையதாகியஉடலை) நன்குமதிதது அணியும்பேதையர், கண்டிலர்கொல் - பார்த்துணர்ந்திலரோ. எ-று.

பார்த்துணர்வாராயின் பாராட்டாரென்பது குறிப்பெச்சம். பாராட்டுவாரெனப் பொதுப்படக் கூறினமையால், உடலென்றது ஆண்பாலார் பெண்பாலா ரிருவருடலையும். வண்டியியங்குதற்கு அச்சுப்போல, உடலியங்குதற்கு உயிர் அமைந்ததாதலால் இவ்வாறு அவ்வுடலுயிர்களை உருவகப் படுத்தினர்; இதுமுடைஎன்ற அடையால்விளங்குகிறது. அச்சு உருளைகோத்தமரம். இற்ற ஈறுதொகுத்தலாயிறறு; இச்சினைவினைமுதன்மேல் நின்றது. உம்மைதொக்கு ஒருமொழிபோலநின்ற பெடைச்சேவலென்பது அத்தொகை மாத்திரையினில்லாமல் தன்னோடுவன்கழுகென்பது இருபெயரொட்டுப் பண்புத்தொகைநிலையாய்ப் புணர்ந்தமையின் இடையே சந்திச்சகரவொற்றுப்பெறறது. (சஅ)

கழிந்தா ரிடுதலை கண்டார்நெஞ் சுட்கக்
குழிந்தாழ்ந்த கண்ணவாய்த் தோன்றி—யொழிந்தாரைப்
போற்றி நெறிநின்மி னிற்றிதன் பண்பென்று
சாற்றுங்கொல் சாலச் சிரித்து.

(இ-ள்.) கழிந்தார் - உயிர்நீங்கினவரது , இடுதலை - இடுகொட்டிலுள்ளதலைகள், கண்டார் (தம்மை) பார்த்தவர்கள், நெஞ்சு உட்க - மனம் அஞ்சும்படி, குழிந்துஆழ்ந்த - மிகுதியுமாழ்ந்த - கண்ணஆய் - கண்களையுடையன

ஆகி, தோன்றி-தோற்றப்பட்டு, ஒழிந்தாரை-தமதுநிலைமையில்லாரை,போற்றி-(மனத்தைப் புலன்களில்செல்லாமல்) பாதுகாத்து, நெறிநின்மின் - துறவுநெறியில் நில்லுங்கோள், இதன்பண்பு - இவ்வுடலினது தன்மை, இற்றுஎன்று-இந்நிலைமையாகிய தன்மையதென்று, சாலச்சிரித்து - மிகச்சிரியாநின்று, சாற்றுங்கொல் - சொல்வதுபோலும். எ-று

இறறென்றது தம்முடைய நிலைமையை ஆதலால் இது என்னுஞ்சுட்டு உடலின்மேலது. பற்கள்தோன்ற வாய்மிகத்திறந்தபடி யிருத்தலால் அதுசாலச்சிரித்துச் சாற்றுவதாகக் குறிக்கப்பட்டது. குழிந்தாழ்ந்த ஒருபொருட்பன்மொழி. வாழ்நாண் முடியுமுன்னேபோற்றி நெறிநிறறல்வேணடுமாதலால் ஒழிந்தாரை என்ருர். இவ்விரண்டனுருபு சாற்றுமென்னும் வினைகொண்டது. இடுதலைஎன்பதில் இடு இடுகாட்டை உணர்த்தவந்த குறிப்புச்சொல் இச்செய்யுள் தறகுறிப்பேறற அணி. கொல் அவ்வணியைச் சார்ந்துவரும் இடைச்சொல். (சகூ)

உயிரபோயார் வெண்டலை யுட்கச சிரித்துச்
செயிர்நீக்குஞ் செம்மாப்பவரைச—செயிர்தீர்ந்தார்
கண்டிற் றிதன்வண்ண மென்பதனுற் றம்மையோர்
பணடத்துள் வைப்ப திலர்.

(இ-ள.) உயிர்போயார் - உயிர்நீங்கினவரது, வெள்தலை - தசையில்லாத தலைகள, உட்கச்சிரித்து - (கண்டோர்நெஞ்சு) அஞ்சும்படிநகைத்து, செம்மாப்பவரை - (இலவாழ்க்கையில்) மயங்கிக்கிடப்பவரை, செயிர் - அமமயககமாகிய குறறத்தினின்றும், தீர்க்கும் - நீஙகச்செய்யும், செயிர்தீர்ந்தார் - அக்குறறத்தினின்று நீங்கினவர், இதன்வண்ணம் - இவ்வுடலின்தன்மையை, கணடு கண்கூடாககசணடு, இற்று - இந்நிலையாமையையுடையது, என்பதனுல - என்றுணர்ந்த மெய்யறிவிஞல், தம்மை - தங்களை, ஓர்பணடத்துள் -ஒருபொருளில், வைப்பது - வைத்துமதித்தல், இலர் - இலராவர். எ-று.

வெண்மைப்பண்பு கலப்பின்மையையுணர்த்திற்று. செம்மாப்பவர் இவ்வினையாலணையும்பெயர் ஒருசொல்லின் தன்மையது. பகுதி செம்மா; சேமமயா இவறறுள் முன்மொழி கடைக்குறையாயச் சேம் எனநின்று, செம்எனமுதல்குறுகி, பின்மொழியின் யகரஉ ஆகிய ஆஎன்பது புணாந்து,மகரம்இரட்டி அவ்வாறு நின்றது. என்பது என்னும் வினையாலணையும்பெயர் அறிவின்மேலது; என்று உணரவல்லது அதுவேயாதலால். (ருய)

## சா - ஆம் அதிகாரம் - துறவு.

அஃதாவது மேற்கூறிவந்த புறமாகிய செல்வத்தினிடத்துளதாகிய எனதென்னும் புறப்பற்றையும், அகமாகிய உடலினிடத்துளதாகிய நானென்னும் அகப்பற்றையும் செல்வம் உடல் இவற்றி னிலையாமையை உணர்ந்துவிடுதலை யுணர்த்துவது. அதிகாரமுறையும் இதனுல்விளங்கும்.

விளக்குப் புகவிருண் மாயந்தாங் கொருவன்
தவத்தின்முன் னில்லாதாம் பாவம்—விளக்குநெய்
தேய்விடத்துச சென்றிருள் பாய்ந்தாங்கு நல்வினை
தீர்விடத்து நிற்குமாந் தீது.

(இ-ள்.) விளக்குப்புக - விளக்குப்புகாநிற்க, இருள் - முன் இருள், மாய்ந்தால்ஆங்கு - அழிந்தால்போல, ஒருவன் தவத்தின்முன் - ஒருவன்செய்ததவத்துக்குமுன், பாவம் - முன்செய்தபாவம், நில்லாதுஆம் - நிலைத்திராதாகும், விளக்குநெய் தேய்விடதது - தீபம்நெய்குறையுமிடத்து, இருள்சென்று-இருள்போய், பாய்ந்தால்ஆங்கு - பரவினாற்போல, நல்வினை-தவம், தீர்விடத்து-செய்தல்நீங்குமிடத்து, தீது-பாவம், நிற்கும்-நிலைபெறும். எ-று.

விளக்கு ஒளிபெருகுதற்குக் காரணம்நெய்யானாற்போலத் தவம்பெருகுதற்குக்காரணம் மனமொழி மெய்களாற்செய்யும் செயலென்பதும், ஒளியுடைய தேயுவின் அபாவமே இருளாதல்போலத் தவத்தினது அபாவமே பாவமென்பதும் கருத்து. உவமையில் நெய்யென்றமையால் பொருளிலும் செயலென்பது வருவிக்கப்பட்டது. தேய்விடத்து, தீர்விடத்து என்பன நிகழ்காலவினையெச்சம்; இடத்தென்னும் விகுதியே காலங்காட்டியது. தல்என்னும் புடைபெயர்ச்சி விகுதி புணர்ந்துகெட்டு, முதனிலை திரிந்த விளக்கென்னுந் தொழிற்பெயர் விளங்குதலுடைய தீபத்துக்குத் தொழிலாகுபெயர்; இவ்வாறன்றித் தான் காரணமாகநின்று பிறபொருள்கள் விளங்குதலாகிய காரியத்தைச்செய்கின்றமையால் காரியவாகுபெய ரெனலுமாம். முன்னில்லாதாமென்பதை முன் இல்லாதாமெனப் பதம்பிரித்து உரைத்தலுமாம். (நுக)

நிலையாமை நோய்மூப்புச் சாக்காடென் றெண்ணித்
தலையாயார் தங்கருமஞ் செய்வார்—தொலைவில்லாச்
சத்தமுஞ் சோதிடமு மென்றாங் கிவைபிதற்றும்
பித்தரிற் பேதையா ரில்.

(இ-ள்.) நிலையாமைஎன்று - (வளர்தல் சுருங்கல்ஆகிய இவற்றுள் ஒன்றில்) நிலைத்தலில்லாமையும், நோய்என்று - நோயும், மூப்புஎன்று - மூப்பும், சாக்காடென்று - சாதலும்இருத்தலை, எண்ணி - கருதி, தலையாயார் - முதன்மையாகிய அறிவுடையார், தம்கருமம் - தம்முயிர்க்குரிய செயலாகிய தவத்தை, செய்வார் - செய்வார்கள், தொலைவுஇல்லாத - முடிவுஇல்லாத, சத்தமும் - இலக்கணநூலும், சோதிடமும்-கணிதநூலும், என்ற - என்றுசொல்லப்பட்ட, இவை - இந்நூல்களை, பிதற்றும் - விடாதுபேசுகின்ற, பித்தரின் - பேதையர்போல, பேதையார்இல் - பேதைமையுடையாரில்லை. எ-று.

இருத்தல் சொல்லெச்சம். பின்னே சாக்காடென்றமையால் நிலையாமை வளர்தல் சுருங்கல்களின்மேல்நின்றது. என்ற என்னும்பெயரெச்சம் ஈறு தொகுக்கப்பட்டது. நிலையாமையுடைய உடற்கு வரும் வருத்தத்தை

நோக்காமல் தவத்தினைச்செய்தலால், பிறப்புநோய் மூப்புச்சாக்காடுகளால் அநாதியாகத் துன்பமடைந்து வருகின்ற உயிர் ஞானம் உதித்து வீட்டைப் பெறுதலைக் கருதித்தவநதைத் தங்கருமமென்றும், சத்தமும், சோதிடமும் அறநூல் முதலியவற்றை உணர்தற்குக் கருவியெனக்கருதாது, அவ்விருநூலை யுங் கற்றமட்டில் நின்றுபாராட்டுகின்றமை கருதிப்பிதற்றும் பித்தரில் பே தையாரில் லென்றுங்கூறினர். (௫௨)

> இல்ல மிளமை யெழில்வனப்பு மீக்கூற்றம்
> செல்வம் வலியென் றிவையெல்லாம—மெல்ல
> நிலையாமை கண்டு நெடியாா துறப்பர்
> தலையாயாா தாமுய்யக் கொண்டு.

(இ-ள்) தலையாயார் - (அறிவுவொழுக்கங்களில்) முதன்மையானவர், இ ல்லம் - இல்வாழ்க்கையும், இளமை - இளமைப்பருவமும், எழில்- எழுச்சியும், வனப்பு - அழகும், மீககூற்றம் - சொறசெலவும், செல்வம் - பொருட்செல்வ மும, வலி - வலியும், என்ற - என்றுசொல்லப்பட்ட, இவைஎல்லாம் - இவை களெல்லாம், மெல்ல - மெள்ள, நிலையாமை - நிலைபெறுமல்கழிதலை,கணடு - க ணகூடாகக் கண்டு, நெடியார் - காலநீட்டியாமல், தாம்உய்ய - தாம்பிழைக்கு ம்படி, கொண்டு - துணிவுகொண்டு, துறப்பர் - யானெனதென்னும இருபற் றையுந் துரப்பார்கள். எ-று.

எழில்வனப்பு என்பவற்றிற்கு முறையே அழகும் மாமைநிறமும் என உ ரைத்தல் மாமைஇளமையிலடஙகுதலாலும், மீககூறறென்பதனைப் பண்புத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகைக காரணப் பெயரெனகசொ ண்டு, அதறகுமேலாகிய சொல்லாறபிறந்த புகழெனஉரைத்தல் "புகழல்லால பொன்றுாது நிறபதொன்றில்" என்பதனுலும் பொருந்தாளன்க. மாமை இள மையில் தோன்றும் ஒளி எழுச்சி என்றது முயறசியோடு திரிதலை. எழில் இ ல்விகுதி ஈறறதாகிய தொழிறபெயர். மீக்கூற்றம் யாவரும் மறுக்காமல் மேன் மையாகக்கொள்ளுஞ்சொல். அது ஈற்றில் சாரியை பெற்றது. இல்லமுதலிய வை உடையாரறியாமலே கழிதலால் மெல்ல நிலையாமை என்றூர். நெடித்த ல் காலநீட்டித்தல். (௫௩)

> துன்பம் பலநா ளுழந்து மொருநாளை
> இன்பமே காமுறுவ ரேழையார் - இன்பம்
> இடைதெரி ந்தினனுமை நோக்கி மினையா
> றடை வொழிந்தா ரான்றமைந் தார்.

(இ-ள்.) ஏழையார் - அறிவிலார், பலநாள் - மிகுதியாகியகாலமெல்லா துன்பம் உழந்தும் - துன்பத்தால்வருந்தியும், ஒருநாளை - சிறிதுபோழ்து அநுபவிக்கும், இன்பமே - சுகத்தையே, காமுறுவர் - விரும்புவார், ஆன்று - (கல்வியறிவுகேள்விகளால்) நிறைந்து, அமைந்தார் - அதற்குத்தக்கபடி அட

ங்கொடக்கும்பெரியோர், இன்பம் - சுகத்தின் சிறுமையை, இடைதெரிந்து - நடுவுநிலையாக ஆராய்ந்து, இன்னாமை - துன்பத்தின் மிகுதியை, நோக்கி - அறிந்து, மனைஆறு - இல்வாழ்க்கையின் வழியில், அடைவு - சார்ந்துநடப்பதை, ஒழிந்தார் - நீங்கினார். எ-று.

நாள்காலத்தின்மேலும், பல, ஒன்றென்பனமுறையே மிகுதிசிறுமையின் மேலும்நின்றன. நாளையென்பதில் ஐ சாரியை. வீட்டினது நித்தியமாகியபேரின்பத்தினின்றும், நீக்குதலால் ஏ பிரிநிலை. இல்வாழ்க்கை இன்பந்தருவது போலத் தோன்றுதலால் இன்பம் இடைதெரிந்தென்றார். காமுறுவர் ஒரு சொல்லின் தன்மையது; பகுதி காமுறு; இது, உறு என்பது புணர்ந்தபோது காமம் கடைக்குறை பெற்றது. (௫௪)

கொன்னே கழிந்தன் றிளமையு மின்னே
பிணியொடு மூப்பும வருமால் - துணிவொன்றி
என்னொடு சூழா தெழுநெஞ்சே போதியோ
நன்னெறி சேர நமக்கு.

(இ-ள்.) எழுநெஞ்சே - அடங்காத இயல்புள்ள மனமே, இளமையும் - இளமைப்பருவமும், கொன்னே - பயனில்லாமலே, கழிந்தன்று - கழிந்தது, இன்னே - இப்போதே, மூப்பும் - முதுமையும், பிணியொடுவரும்-நோயோடுகூடிவரும், நமகரு நல்நெறிசேர - நமக்கு நல்லொழுககமாகிய துறவு சேரும்படி, துணிவு ஒன்றி - கலங்காமையைப்பொருந்தி, என்னொடுசூழாது - என்னிடத்து ஆராயாமல், போதியோ - (புலன்களின்மேல் செல்லுகின்றாயோ.

கழிந்தன்றென்னும் ஒன்றன்படர்க்கை இறந்தகால வினைமுற்றில் அன் சாரியை, மனமொழிமெய்கள் அலைதலில்லாமல் நிற்றல், அவை நன்னெறியில்செல்லல் இவறறால் வரும் இன்பததை நெடுநாள் அநுபவித்தலாகு மாதலால் இளமையுமென்ற உம்மைஒருபுடை எதுராதுதழீஇயதனோடு உயர்வு சிறப்புப்பொருளது. மூப்புமென்ற உம்மை ஒருபுடை இறந்தது தழீஇயதனோடுஇழிவுசிறப்புப்பொருளது. முதிராமல்அடங்கிநின்றநோய்பெருகிவெளிப்படுதற்குரியகாலம்அது ஆதலால் பிணியொடு மூப்பும்வருமெனறான். பிணிதொழிலாகுபெயர்.என்னொடு என்னுமூன்றனுருபு எழாவதனிடப்பொருளது. (௫௫)

மாண்ட குணத்தொடு மக்கட்பே றில்லெனினும்
பூண்டான் கழித்தற் கருமையால் - பூண்ட
மிடியென்னுங் கா்ரணத்தின் மேன்முறைக் கண்ணே
கடியென்றார் கற்றறிந் தார்.

(இ-ள்.) மாண்ட - மாட்சிமைப்பட்ட, குணத்தொடு - தன்மையோடு, மக்கள்பேறு - பிள்ளைப்பேறு, இல் எனினும் - இல்லாதவளாயினும், பூண்டான் - கொண்டநாயகன், கழித்தற்கு - நீக்கிவிடுதற்கு, அருமையால் - கூடாதவளாயிருத்தலால், பூண்ட - விட்டொழியாத, மிடியென்னும் - இடுக்கண்தருவ

தென்று சொல்லப்படும், காரணத்தின் - காரணத்தைப்பற்றி, மேல் - முற்காலத்தில், முறைக்கண் - நூல்களில், கடிஎன்றார் - (மணத்துக்கு) கடியென்று பெயரிட்டனர், கறறு - நூல்களைக்கற்று, அறிந்தார் - சொல் லியல்புணர்ந்த புலவர். எ-று

அருமையுடையாரை அருமையென்றும், மிடியைத்தருவதனை மிடியென்றுங்கூறியது ஓர்மரபு வழுவமைதி. அருமையாலென்னும் ஏதப்பொருளதாகிய மூன்றனுருபும், காரணதகின்என்னும் அப்பொருளதாகிய ஐந்தனுருபும் விரவி அடுக்கியென்றுமொன்னும் வினைகொண்டன. கடியென்னும் இடைகுறியாகிய உரிச்சொல்லைக கடுமையதென்னும் பொருளதாகிய காரணப்பெயராகக்கொண்டமையால் இதுபிரிநிலை நவிறசியணி.கடுமை பகுதி, இ ஒன்றன்படர்க்கை விகுதி, விகுதிப்புணர்ச்சியில மை யீறும், விகுதி யுயிராதல் பற்றி உகாமுங்கெட்டது சந்தி. கடுமை இங்குத தன்பதின் மேலது. இவ்வாறு கொடுமை (வளைவு)என்னும்பண்பமி யாகசசொடி,கருமைஎன்னும்பணபடியாகக்கரிஎன்னும் பெயர்கள்வருதல்காண்க. மேல்பணபாருபெயா .முறை இதுவும்அது. (௫௯)

ஊக்கிததாங் கொணட விரதஙக ளுள்ளுடையத
தாக்கருந துன்பங்க டாநதலை வநதக்கால
நீக்கி நிறாஉ முரவோரே நலலொழுக்கம
காக்குந திருவத தவா.

(இ-ள்.) ஊக்கி - முயன்று, தாம்கொண்ட - தாம்பூண்ட, விரதங்கள் - தவங்கள், உள்உடைய - தம்மில்கலங்கும்படி, தாக்கு அருதுன்பங்கள் - நீக்குதறகருமையாகிய துன்பஙகள், தலைவந்தககால் - தம்மிடத்துவந்தால், நீக்கி - (அந்துன்பங்களை) நீஙகச்செய்து, நிறாஉம் - (விரதங்களை) நிலைக்கச்செய்யும், உரவோரே-பேரறிவுடையோரே, நல்ஒழுக்கம்-நல்லொழுக்கங்களை, காக்கும்-விடாமற்செய்யும், திருவததவர் (கண்டோரால் விரும்பப்படும்) அழகியதவமுடையார். எ-று.

ஊக்கல் ஊக்கங்கொள்ளல், அதுதன்காரியமாகிய முயலலின்மேல் நின்றது. பின்னுள்ளதாம் அசை. தாக்குதலாகிய காரணம் நீக்குதலாகியகாரியத்தின்மேலது. தாக்குதல் பொருதல். அது முதனிலைத் தொழிறபெயர். நிறாஉம் சொல்லிசையளபெடையாதலால் பதப்பிரிவிலும் அதனை நீர்காதுகொள்க. நில்என்னுந்தன் வினைப்பகுதி, பிறவினைப்படுத்தும் துவ்விகுதிப் புணர்ச்சியில் தகரத்திரிபும் லகரக்கேடுமாகிய சந்தி பெற்றநிறு பகுதி, உம் பெயரெச்சவிகுதி, பகுதி உகரம் ஊகாரமானதும்அளபெழுந்ததும்நீட்டல்விகாரம்,விகுதி உகரக்கேடு முதற்குறை. ஏ பிரிநிலை. திருவத்தவர்என்பதில் அசாரியை. (௬௰)

தம்மை யிகழ்ந்தமை தாம்பொறுப்ப தன்றிமற்
றெமமை யிகழ்ந்த வினைப்பயத்தால் — உம்மை

எரிவாய் நிரயத்து வீழ்வரகொ லென்று
பரிவதூஉஞ் சான்றோர் கடன்.

(இ-ள்.) தம்மை இகழ்ந்தமை - (பிறர்) தம்மை அவமதித்ததை, தாம்பொறுப்பதூஉம் அன்றி - தாம்பொறுத்துக் கொள்ளுதலுமல்லாமல், மற்று எம்மை - இகழ்தற்குக் காரணமில்லாதஎம்மை, இகழ்ந்த - இகழ்ந்ததனாலாகிய, வினைப்பயத்தால் - தீவினையாகியபயனால், உம்மை-மறுமையில், எரிவாய் - தீநிரம்பிய, நிரயத்து - நரகத்தில், வீழ்வர்என்று - வீழ்வாரென்று, பரிவதும் - (அவரிடத்து) இரக்கங்கொள்ளுதலும், சான்றோர்கடன் - தவவொழுக்கம் நிறைந்தவரது கடமையாம். எ-று

பொறுத்தலும், பரிவதும் கடனெனவே பொறுக்காமல் வெகுளிகொள்ளல் கடனன்றென்பதாயிற்று. இங்குஇகழ்தல் "ஆற்றுவாராற்ற லிகழாமை" என்பதிற்போல அவமதித்தலையுணர்த்திற்று. பொறுப்பதென்பதனீற்றில் எதிரது தழீஇயஎச்சவும்மைதொக்கது. நிரயத்து வீழ்தல் இணைமாதலால் கொல்அசைநிலைப் பொருளது. இகழ்ந்தகாரணத்திலுண்டாம் பயன் தீவினையேயாதலால் வினைப்பயனென்பது இருபெயரொட்டுப் பண்புத்தொகை நிலைத்தொடரென்க. அளபெடை இன்னிசைக்கண் வந்தது. மற்றுப் பிறிதென்னும் பொருளது, (டுஅ)

மெய்வாய்கண் மூக்குச் செவியெனப் பேர்பெற்ற
ஐவாய வேட்கை யவாவினைக்—கைவாய்
கலங்காமற் காத்துய்க்கு மாற்ற லுடையான்
விலங்காது வீடு பெறும்.

(இ-ள்.) மெய்வாய்கண் மூக்குச்செவிஎன - உடம்புவாய்கண்மூக்குச்செவிகளென்று, பேர்பெற்ற - பெயர்களைப்பெற்றுள்ள, ஐவாய - ஐம்பொறிகளை வழியாகவுடைய, வேட்கையினை - விருப்பங்களையும், அவாவினை -(அவற்றிற்குரிய பொருள்களைப் பெறவேண்டுமென்னும்) ஆசையையும், காத்து - (தன்னிடத்துண்டாகாமல்) காத்து, கைவாய் - தவவொழுக்கத்தில், கலங்காமல் - கலங்குதலில்லாமல், உய்க்கும் - தன்னைச்செலுத்தவல்ல, ஆற்றல்உடையான் மனவலியுடையான், விலங்காது - தவறுதலுண்டாகாமல், வீடுபெறும் - வீட்டுலகத்தை அடைவான். எ-று

ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசையென்னும் ஐம்புலன்களின்மேலும் செல்லும் விருப்பத்துக்கு வழியாயிருத்தலால ஐம்பொறிகளை ஐவாயென்றார் வாய இடமடியாகப்பிறந்த குறிப்புப்பெயரெச்சம்,குறிப்புமுற்றுப் பெயரெச்சமாய் வேட்கையென்னும் பெயர்கொண்டதெனினும் பொருந்தும். விகுதி அ பலவின்படர்க்கையதென்க. ஐயுருபை வேட்கையென்பதனோடுங் கூட்டுக வேட்கையவா வேணவா என்வும் வருதலுண்டு, (டுக)

துன்பமே மீதூரக் கண்டுந் துறவுள்ளார்
இன்பமே காமுறுவ ரேழையார் — இன்பம்
இசைதொறு மற்றதன் இன்னாமை நோக்கிப்
பசைதல் பரியாதா மேல்.

(இ-ள்.) ஏழையார் - அறிவில்லார், துன்பமே - துன்பமொன்றே, மீதூர - மிகுதியாகவர, கண்டும் - உணர்ந்தும், துறவு - துறவுநிலையை, உள்ளார் - அடையநினையாமல், இன்பமே - (இல்வாழ்க்கையில் சிறிதாகவரும்) இன்பத்தையே, காமுறுவர் - விரும்பாநிற்பார். மேல - மேலாகியவறிவுடையார், இன்பம் - இன்பமானது, இசைதொறும் - (தம்மிடத்து) வருந்தோறும், அதன் - அவ்வின்பத்திற்குக் காரணமாகிய, இன்னாமை - துன்பத்தை, நோக்கி - சீர்தூக்கி, பசைதல் - (அவ்வின்பத்தை) விரும்புதலை, பரியாது - கொள்ளார்.

இன்பத்திற்குக் காரணமாகிய துன்பமென்றது ஐம்புலநுகர்ச்சிப்பொருள்களை உழந்து தேடுதலால் வருந்துன்பத்தை. துன்பத்தினளவுக்கு அதனாற் பெறும் இன்பம் சிறிதளவினதென உணரமாட்டாமையால் அவரை ஏழையாரெனவும், உணரவல்லாருக்கு அவ்வின்பத்தை விரும்புதலும் ஒருபாரமாகத்தோன்றலால் பசைதல் பரியாதெனவும் கூறினர். பரித்தல் சுமத்தல். ஏ இரண்டும் பிரிநிலை, மேல் பண்பாகுபெயர். (௬௰)

## ௭ - ஆம் அதிகாரம் - சினமின்மை.

அஃதாவது கோபஞ்செய்தற்குக் காரணமாகிய குற்றமொருவனிடத்துண்டானகாலத்தும் கோபஞ்செய்யாமையை உணர்த்துவது. காமவெகுளி மயக்கமாகிய மூன்றில் சினம் அருள் முதலியவற்றைக் கெடுத்தலால் அது துறவினர்க்காகாதென அதனின்மை துறவின் பின் வைக்கப்பட்டது. ஆயினும் இது யாவர்க்கும் பொதுவெனக்கொள்க.

மதித்திறப் பாரு மிறக்க மதியா
மிதித்திறப் பாரு மிறக்க — மிதித்தேறி
ஈயுந் தலைமே லிருத்தலா லஃதறிவார்
காயுங் கதமின்மை நன்று.

(இ-ள்.) மதித்து - (தம்மை) நன்குமதித்து, இறப்பாரும் - நடப்பவரும், இறக்க - நடக்கக்கடவர், மதியாது - நன்குமதியாமல், மிதித்து - இழிவுபடுத்தி, இறப்பாரும் - நடப்பவரும், இறக்க - நடக்கக்கடவர், ஈயும் - (நாலறிவுயிரினதாகிய) ஈயும், தலைமேல்இருத்தலால் - தம்முடைய தலையின்மேல் ஏறியிருத்தலால், அஃது அறிவார் - அவ்வீயினறியாமையை அறியும் இயல்பினர், காயும் - (தம்மை அவமதித்தோரை) கோபிக்கின்ற, கதம் இன்மை - கோபமில்லாதல், நன்று - நன்மையைத்தருவதாம். எ-று.

மதியாது ஈறு தொகுக்கப்பட்டது. முன்னுள்ள மிதித்தல் இழிவுபடுத்தலுக்காயிற்று. இருத்தலாலென்னும் ஏதுப்பொருட்டாகிய மூன்றனுருபு இன்

மையென்னுங் குறிப்புத்தொழிற் பெயர்கொண்டது. துறந்தார்க்கு நட்புப் பகையும் கூடாமையின் மதித்திறப்பாரும், மிதித்திறப்பாரு மிறக்கவென்றும், மிதித்திறப்பதற்குக் காரணம் அறிவு நூல்கேட்குஞ் செவியறிவில்லாமையாத லால் அவரொருபொருளல்லரென்பார் ஈயுமென்றும், தமது தானகாரணமாக நின்று மிதித்திறப்பாரமேற் சாபம் விடுவித்துச்செய்த தவத்தை இழப்பித்தலா ல் அஃதில்லாமை நன்றென்றுங் கூறினார். (௬௧)

தண்டாச் சிறப்பிற்றம் மின்னுயிரைத் தாங்காது
கண்டுழி யெல்லாந் துறப்பவோ—மண்டி
அடிபெயரா தாற்ற விளிவந்த போழ்தின்
முடிகிற்கு முள்ளத் தவர்.

(இ-ள்) மண்டி - (தவவொழுக்கத்தில்) மிகுதியுஞ்சேர்ந்து, ஆற்ற - மிகு தியும், இளிவந்தபோழ்தின் - (அத்தவவொழுக்கத்துக்குக்) குறைவு நேரிட்ட போது, அடிபெயராது, அந்நிலையில் தளராமல்நின்று, முடிகிற்கும் - இறக்கவ ல்ல, உள்ளத்தவர் - ஊக்கமுடைய முனிவர், தம் இன் உயிரை - தம் இனிமை யாகிய உயிரை, தண்டாத - கெடுதலில்லாத, சிறப்பின் - சிறந்த தவவொழுக் கத்தில், தாங்காது - கொண்டிராமல், கண்டஉழியெல்லாம் - கண்டவிடங்களி லெல்லாம், துறப்பவோ - செல்லவிடுவரோவிடார். எ-று

கண்டவிடங்களென்றது காமவெகுளிமயக்கங்களை. வினையாகிய மாசுநீ ந்து சுத்தமான அந்தக்கரணங்களை யுடையாராதலால் கண்டுழியெல்லாந் துற வாராயினார். முடிகிற்குமென்பதற்கு முடிக்கவல்ல என்பொருளுரைத்தல், இ து தன்வினையாவதல்லது பிறவினையாவதன்றாதலால் குற்றமென்க. அழியாத வீடுபேற்றைத் தருவதாதலால் தவவொழுக்கத்தைத் தண்டாச்சிறப்பென்றா ர். எதிர்மறை முடிகிற்குமென்னுங் காரியப்பொருட்டாகிய பெயரெச்சம் உ ள்ளத்தவரென்னும் பெயரின் முதனிலையாகிய உள்ளமென்னுங் காரணப்பெய ர்கொண்டது. இதனை இருசொல்லாகக்கொண்டு உள்ளம் தவரென்ப் பிரித்தலு ங் கூடும். (௬௨)

காவா தொருவன்றன் வாய்திறந்து சொல்லுஞ்சொல்
ஓவாதே தன்னைச் சுடுதலால்—ஓவாதே
ஆய்ந்தமைந்த கேள்வி யறிவுடையா ரெஞ்ஞான்றும்
காய்ந்தமைந்த சொல்லார் கறுத்து.

(இ-ள்.) ஒருவன் - (அறிவில்லாத) ஒருவன், தன்வாய்காவாது - தன்வா யைக்காக்கமாட்டாமல், திறந்துசொல்லும் - திறந்துசொல்லுகின்ற, சொல் - கடுஞ்சொல், தன்னை - சொல்லிய அவனை, ஓவாதே - விடடொழியாமலே நின் று, சுடுதலால் - வருத்துதலால், ஓவாதே - இடைவிடாமலே, ஆய்ந்து - (அறிவு நூல்களை) ஆராய்ந்து, அமைந்த - நிரம்பிய, கேள்வி - மெய்ஞ்ஞானக் கேள்வி யையுடைய, அறிவுடையார் - துறவினர், எஞ்ஞான்றும் - எக்காலத்தும்,

றுத்து - கோபித்து, காய்ந்தஅமைந்த-அக்கோபித்தலால் அமைந்த சாபமொழிகளை, சொல்லார் - சொல்லார்கள். எ-று.

காவாதென்றதனால்சொல் கடுஞ்சொலென்பது பெற்றாம். துறவினர்தம்மை ஒருவன்வைத கடுஞ்சொல் அவனையேசார்ந்து வருத்ததலால், தாம்தழுது தவம்குறையும்படிச்சாபமொழிகளைக் கூறார்என்பது. சொல்தன்னை வருத்துதலாவது அதனாலாகிய வினைப்பயனடைதல். ஏ இரண்டும் தேற்றம். காக்கமாட்டாத இழிவை முடிகதற்கு வாய்திறந்தெனவேண்டாதுகூறினர். ஒருவன் வைதவைவு அவனையே வருத்துமென்பதறிந்திருத்தலால் தாம்சினந்து கடுஞ்சொல்சொல்லாரெனினும் பொருந்தும். காய்ந்து காரணப்பொருட்டாகிய இறந்தகாலச்செயவெனெச்சத்திரிபு. அமைந்த இறந்தகாலவினைப்பெயர். (௬௩)

நேர்ந்து நிகரல்லார் நீரல்ல சொல்லியக்கால்
வேர்த்து வெகுளார் விழுமியோர்—ஓர்த்ததனை
உள்ளத்தானுள்ளி யுரைத்துரா யூர்கேட்பத்
துள்ளித்தூண் முட்டுமாங் கீழ்.

(இ-ள்) நிகர் அல்லார் - (தம்மோடு) ஒப்பல்லாதவர், நேர்வித்து - தம்மை) ஒப்பாக்கிக்கொண்டு, நீர் அல்ல - இனிமையல்லாதசொற்களை, சொல்லியக்கால் - சொல்லினால், விழுமியோர் - சிறந்ததுறவு நிலையுடையோர், வெகுண்டுவேர்க்கார் - கோபங்கொண்டுவேர்க்கார், அதனை - அக்கடுஞ்சொல்லை, உள்ளத்தான்உள்ளி - மனத்தாற்கருதி, ஓர்ந்து - ஆராய்ந்து, ஊர்கேட்ப - ஊரிலுள்ளார் கேட்கும்படி, உரைத்து - (பலரோடும்) சொல்லி, உராய் (சுவர்முதலியவற்றில்) உராய்ந்து, துள்ளி - துடித்து, தூண்முட்டும் - தூணினிடத்து முட்டுவார், கீழ் - கீழானவர். எ-று

நேர்வித்து என்பதில் விவ்விகுதி தொருக்கப்பட்டது. நீர் இனிமைக்காயிற்று. அல்ல பன்மையாகப்பிறந்த குறிப்பு வினைப்பெயர். வேர்த்தல் வெகுளலின் காரியமாதலால் வேர்த்துவெகுளார் என்பதனைப் பின்முன்னாகநிறுத்தி விகுதிபிரித்துக்கூட்டுக. ஓர்ந்தெனபது தொடைநோக்கி ஓர்த்தெனவலித்தலாயிற்று. விழுமியோர் பலகடுஞ்சொற்களுக்கும் வெருளாமைதோன்ற நீரல்லவென்றும், கீழாயினோர் கடுஞ்சொலொன்றுக்கும் வெருளாதிராரென்பது தோன்ற அதனையென்றுங் கூறினர். உராய் இறந்தகாலவினையெச்சம். உரா பகுதி, உகரத்தின் திரிபாகிய ய் விகுதி. உராவுதல் உராய்தல். ஊர் இடவாகுபெயர். கீழ் பண்பாகுபெயர். (௬௪)

இளையா னடக்க மடக்கங் கிளைபொருள்
இல்லான் கொடையே கொடைப்பயன்—எல்லாம்
ஒறுக்கு மதுகை யுரனுடை யாளன்
பொறுக்கும் பொறையே பொறை

(இ-ள்.) இளையான் - இளமைப்பருவ முடையான், அடக்கம் ஏ - அடங்கியொழுகுதலே, அடக்கம - அடக்கமாம், கிளை - கிளைபபதற்குக்காரணமாகிய, பொருள் இல்லான்-மிக்கபொருளில்லாதவன், கொடையே - கொடுத்தலே, கொடைப்பயன் - கொடையாகியபயனும், எல்லாம் - யாவரைய ஒறுக்கும் - வெல்லவல்ல, மதுகை - வலியையும், உரன் - அவ்வலியை (காம் இடமறிந்து காட்டவல்ல) அறிவையும், உடைய-உடையானாகிய, ஆள ஆளுநற்குணமுடையான், பொறுக்கும் - (பிறர்குற்றத்தை) பொறுத்துக் கொள்ளுகின்ற, பொறையே - பொறுமையே, பொறை - பொறுமையாம். எ-று

முதுமையோனடக்கம், பொருளுடையான்கொடை, மதுகையுரங்களில்லான்பொறை,யிவற்றினின்றும் பிரிதலால் ஏ பிரிநிலை கொடையேயென்றம்ஏகாரத்தை அடக்கமென்பதனோடுங்கூட்டுக. பொருளுடைமைக்குப் பயன் கொடையேயாதலின் கொடையெனவாளாகூறாது கொடைப்பயனென்று பொருள் ஒருவன்பெருகுதற்குக் காரணமாதலால் கிளையென்னும் அடைகொடுத்தோதப்பட்டது. அடக்கம் அடங்குதலென்னும் பொருட்டாய்த்தன்வினைத் தொழிற்பெயராவதல்லது பிறவினைத்தொழிற்பெயராகாமையாலும், அவ்விகுதி தன்வினைப்பகுதியோடன்றிப் பிறவினைப்பகுதியோடுபுணர்தலின்மையாலும் அடக்கமென்பதற்கு அடக்குதலெனப்பொருள் சொல்லுதல்குற்றமென்க. கொடை, பொறை ஐவிகுதித் தொழிற்பெயர். எல்லாமென்னுந் திணைப் பொதுப்பெயர் ஒறுக்குமென்றதனால் உயர்திணைக்காயிற்று. (௬௫)

கல்லெறிந் தன்ன கயவர்வா யின்னாச்சொல்
எல்லாருங் காணப் பொறுத்துய்ப்பர்—ஒல்லை
இடுநீற்றாற் பையவிந்த நாகம்போற் றத்தம
குடிமையான் வாதிக்கப் பட்டு.

இடுநீற்றால்-(மந்திரித்து)வீசியநீற்றினால், ஒல்லை - அவ்வீசியகாலத்தில் பை அவிந்த - (ஆடுங்காலத்துவிரித்த) படம் மடங்கிய, நாகம்போல் - நாகத்தைப்போல, தம்தம் - தம்தம்முடைய, குடிமையான் - உயர்குடிப்பிறப்பின்தன்மையால், வாதிக்கப்பட்டு - வருத்தப்பட்டு, எறிந்தது கல்அன்ன - எறிந்ததாகிய கல்லை ஒத்த, கயவர்வாய் - கீழ்மக்கள் வாயினின்றும் வரும், இன்னாச்சொல் - துன்பந்தருஞ்சொற்களை, எல்லாரும் - பகைவர்நட்பினர்களாகிய யாவரும், காண - பார்க்கையில், பொறுத்து -பொறுத்துக்கொண்டு, உய்ப்ப (மனத்தைநன்னெறியில்) செலுத்துவர் எ-று

காணவென்னும் வினையெச்சம் காரணகாரியப்பொருளதன்றி நிகழ்காலத்தில்வந்தது. பெருமைக்குணமில்லாரைக் கயவரென்றது வழக்கு. இன்னாமையைத்தருஞ்சொல்லை இன்னாச்சொலென்றது ஓர்மரபுவழுவமைதி. ஒல்லை காலவிரைவு. தனியராயிருந்த காலத்தினும் பலர்கூடியகாலத்தில் சினங்கொள்ளுதல்யாவர்க்குமியல்பாக, இவர் சினங்கொள்ளாத சிறப்புத்தோன்றஎல்லாருங் காணப்பொறுத்தென்றார். (௬௬)

மாற்றாராய் நின்றுதம் மாறேற்பார்க் கேலாமை
ஆற்றாமை யென்னா ரறிவுடையார்—ஆற்றாமை
நேர்த்தின்னா மற்றவர் செய்தக்காற் றாமவரைப்
பேர்த்தின்னா செய்யாமை நன்று.

(இ-ள்) மாற்றார் ஆய்நின்று - பகைவராய்நின்று, தம்மாறு - தமதுபகை யை, ஏறபார்க்கு - ஏற்கத்தக்கவலியில்லார்க்கு, ஏலாமை- (அவரதுபகைமை) ஏற்றுநில்லாமையை, ஆற்றாமை - வலியில்லாமை, என்னார் - என்றுசொல்லா ர், அறிவுடையார் - பேரறிவுடையோர், (ஆதலால்) அவர் - அவ்வலியில்லார், நேர்வித்து - (தம்மை) சமனாக்கிக்கொண்டு, இன்னா - துன்பந்தருவனவற்றை, செய்தக்கால் - செய்வாராயின், ஆற்றாமை - (தம்மி லெழுங்கோபத்தினை) த ணிக்காமல், தாம் - (வலியோராகிய) தாம், பேர்த்து - மீட்டு, அவரை - அவ ரை, இன்னாசெய்யாமை - துன்பந்தருவன செய்யாமை, நன்று - நன்மைத ருவதாம். எ - று.

ஆற்றாமை இரண்டனுள் முன்னது எதிர்மறைத்தொழிற்பெயர்; பின்னது எதிர மறைவினையெச்சம். மாறுஏறபார்என்றது மறுக்கவலியிலலாமையால் மாறுஏற்பாரயினாரென விளக்குதலால் ஏறபாரை வலியிலலாரென்றாம். இன்னாவைத்தருஞ் செயல்களை இன்னாஎன்றது காரியவாகுபெயர். இன்னாமை இனிமையல்லாமை, 'அதாவது துன்பம். இங்குமையீறுகெட்டு இன்னாஎனநின்றது. குவ்விகுதிஏற்று நன்குஎன்பதுபோல இன்னுங்குஎனவும்வரும். வினைமுதனிலையோடன்றி மற்றமுதனிலையோடெதிர்மறையாகாதம் புணராதென்னும் இலக்கணமுணராதார் இன்னாஎன்பதில் ஆ எதிரமறையென்பர். பேர்த்துவி னைமாற்றுப்பொருளதாகிய இடைச்சொல். அவரைஎன்னும் இரண்டாவதை எழுவாதாகத்திரிக்கின் இன்னாசெய்யாமையில் இன்னாவைச்செய்யாமை, என இரண்டாவதை விரிக்க. (௬எ)

நெடுங்கால மோடினு நீசர் வெகுளி
கெடுங்கால மின்றிப் பரக்கும—அடுங்காலை
நீர்கொண்ட வெப்பம்போற் றானே தணியுமே
சீர்கொண்ட சான்றோர் சினம்.

(இ-ள்) நீசர்வெகுளி - கீழ்மக்களுடையகோபம், நெடுகாலம்ஓடினும் -ப லநாள்சென்றாலும், கெடுங்காலம் - இல்லாத தாகுங்காலம், இன்றி - இல்லா மல், பரக்கும் - பெருகும், சீர்கொண்ட - சிறந்த தவவொழுக்கத்தைக்கொண் ட, சான்றோர்சினம் - (ஞானநூற்கேள்வியால்) நிறைந்தவரதுகோபம், அடுங் காலை-காய்ச்சுங்காலத்தில், நீர்கொண்ட - நீர்பெற்ற, வெப்பம்போல - வெப்ப த்தைப்போல - தானேதணியும் - தானேஆறிப்போம். எ - று.

பரக்கும் செய்யுமென்முற்று; பர பகுதி, க் சந்தி, கு சாரியை, உம்எதிர்

காலவிகுதி, உகரக்கேடு சந்தி. சான்றோர்சினத்துக்கு அடுங்காலைநீர்கொண்ட வெப்பத்தையுவமைகூறினமையால், அதுபிறர் துன்பந்தருவன செய்யுந்துணை யுநிகழுமென்பதும், தானேதணியு மென்றதினால் பிறர்வேண்டுகோளும், போ த்தும் இன்னா செய்தலுமின்றிகெடுமென்பதுமாயிறறு, ஏ பிரிநிலை. (சா௮)

உபகாரஞ் செயததனை யோராதே தங்கண்
அபகார மாற்றச செயினும—உபகாரம
தானசெயவ தல்லாற றவற்றினாற் றீங்கூக்கல்
வான்றோய் குடிப்பிறநதாரக கில

(இ-ள்) உபகாரஞ் செய்ததனை - (தாம்) உபகாரஞ்செய்ததை, ஒராது - உணராமல், தஙகண் - தம்மிடதது, அபகாரம் - அபகாரததை, ஆறற - மிகவு ம், செயினும் - (ஒருவர்) செய்தாராயினும், உபகாரம் - உபகாரததையே, தாம் செய்வதுஅல்லால் - தாமசெய்வதல்லாமல, தவறறினால் - (அவாசெய்த) அப காரத்தால், தீங்கு - (பிரதி) அபகாரததை, ஊககல - செய்யமுயலல, வான்றோ ய் - விண்ணுலகத்தைஅளாவிய, குடிப பிறந்தார்கரு - உயர்குடியிலபிறந்தவர் க்கு, இல் - உண்டாகாது. எ-று.

ஒராதென்றதனால்உபகாரம்காரணமின்றிச்செய்ததென்பது பெற்றும்.த வறு முதனிலைத்தொழிறபெயர்,அது அபகாரததின்மேலது.வான்இடவாகு பெயர் வான்றோய்குடியெனபது ''வானுயாதோறறம'' எனறுறபோன்ற இல க்கணை. (சா௯)

கூர்த்துநாய் கௌவிக் கொளக்கண்டுந தம்வாயால்
போத்துநாய கௌவினா ரீஙகில்லை—நீரததன்றிக
கீழமக்கள கீழாய சொல்லியககாற சொலபவோ
மேன்மகக டமவாயான மீட்டு.

(இ-ள்) நாய் - நாயானது, கூர்ந்து - (சினம்) மிகுந்து, கௌவிக்கொள் கௌவிக் கொள்ள, கணடும் - கண்டிருந்தும், தம்வாயால் - (கடியுண்ட) தம்முடையவாயினால், போதநுககௌவினார் - அதறகுமாறுகக் கடிததவர், ஈங்குஇல்லை - இவ்வுலகத்தில்இலர், (அதுபோல) கீழ்மக்கள் - கீழானவர், நீ ர்த்துஅன்றி - இனிமையுடையசொல்லை அல்லாமல், கீழஆய - இழி பொரு ளைத்தருஞ்சொற் களை, சொல்லியககால் - சொல்லினால், மேன்மககள்-மேலா னோர், மீட்டு-பிரதியாக, சொல்பவோ-(கீழாயசொல்லை) சொல்லார். எ-று.

உவமை அஃது அவர்கடியல் பென்பதைவிளக்கியது. இது இல்பொருளு வமை. பொருளினதிழிவைச்சொல்லின்மேலேற்றிக கீழாயவென்றார்; இதுஇ றந்தகாலவினைப்பெயர், ஓ எதிர்மறை, தம்வாயாலெனவேண்டாது கூறியவ தனால்,இன்சொற்களோடுபயின்ற வாயென்பது முடிந்தது, நீர்த்தெனஒருமை யாற்கூறினர்,இன்சொலொன்றுங் கூறியறியாரென்பதை யுணர்த்தற்கு (சா௰)

## அ - ஆம் அதிகாரம்-பொறையுடைமை.

அஃதாவது ஒருவன்காரணத்தினாலாயினும், அறிவின்மையாலாயினுந்தம்மிடத்துக்குற்றஞ் செய்வாராயின்தாமும் அவனிடத்துக் குற்றஞ்செய்யக்கருதாமல் பொறுமையுடையராதல். முன்சினமின்மையைக் கூறிக்குறைவுறுமையால் அதனையேபொறையுடைமையெனக்கூறினமையின் இது அதன்பின் வைக்கப்பட்டது.

கோதை யருவிக் குளிர்வரை நன்னாட
பேதையோ டியாது முரையற்க—பேதை
உரைப்பிற் சிதைந்துரைக்கு மொல்லும் வகையான்
வழுக்கிக் கழிதலே நன்று.

(இ-ள்) கோதை - மாலைபோலவிழுகின்ற, அருவி - அருவியினையுடைய, குளிர்வரை - குளிர்ச்சியாகியமலையைச்சார்ந்த, நல்நாட - நல்லநாட்டரசனே, பேதையோடு - அறிவில்லானிடத்து, யாதும் - நன்மையைத்தருஞ்சொல்லையும், உரையற்க - சொல்லாதிருக்கக்கடவாய, உரைப்பின் - சொல்லுவாயாயின், பேதை - அவ்வறிவிலான், சிதைந்து - கோபித்து, உரைக்கும் - (கடுஞ்சொல்) சொல்லுவான், (ஆதலால்) ஒல்லும்வகையான் - கூடும்வகையினால், வழுக்கி - (அவனினின்றும) தப்பி, கழிதலே - நீங்கிவிடுதலே, நன்று - நன்மையைத்தருவதாகும். எ - று

நன்னாடஎன்றது ஆடூஉ முன்னிலை. இச்செய்யுள்கள் செய்தவர்கள் முனிவர்களாதலாற் பெண்பாலாரெபயரையும் வாயாற்கூற அஞ்சிப் பெரும்பாலும் ஆடூஉமுன்னிலையாறகூறினர். பேதை பண்பாகுபெயர் ஏ தேற்றம். மூன்றனுருபு ஏழாவதனிடப்பொருளது, உருபு மயக்கமன்று. (எக)

நேரல்லார் நீரல்ல சொல்லியக்கான் மற்றது
தாரித் திருத்த றகுதிமற்—றோரும்
புகழ்மையாக் கொள்ளாது பொங்குநீர் ஞாலம்
சமழ்மையாக் கொண்டு விடும்.

(இ-ள்) நேர்அல்லார் - (தமக்கு) சமனல்லாதவர், நீர்அல்ல - இனிமையல்லாதசொற்களை, சொல்லியக்கால் - சொல்லினால், (தவவொழுக்கமுடையார்) தரித்து - பொறுத்து, இருத்தல் - (தம்மனத்தை ஒழுக்கத்தில்) இருத்துதல், தகுதி - உரியதாகும், மற்றது - பொறுத்திராமையை, பொங்குநீர் - கடலாற்சூழப்பட்ட, ஞாலம் - பூமியிலுள்ளஉயர்ந்தோர், புகழ்மைஆக - புகழின்தன்மையாக, கொள்ளாது - கருதார், சமழ்மைஆக - இழிவின்தன்மையாக, கொண்டுவிடும் - கருதாமலிரார். எ - று.

தவத்தின் வளர்ச்சிக்குப் பொறை இன்றியமையாதாதலால் அவர்க்கு அது தகுதியாயிற்று. தரித்தென்பதுதாரித்தென நீட்டல்பெற்றது. உலகங்

ண்ணாக உடையது உணர்வு மிகுதியுடையாரை யாதலால் ஞாலம் ஆகுபெயரா யவரையுணர்த்திற்று. அதுசொல்லால் அஃறிணையாதலான் கொள்ளாதெ ன அத்திணைவினைகொண்டது. பொங்குநீர் ஞாலமென்னும் இயற்பெயர்ப் பொருளை விசேடிக்கவந்தது. அவ்விசேடணம்வினைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகைக் காரணப்பெயர். கொண்டுவிடும் என்பதில் விடு விகுதி துணிவுப்பொருண்மைவிகுதி. இருத்தல் பிறவினைத்தொழிற்பெயர், பகுதி இருத்து. மற்று, ஒரும் அசை. (எஉ)

காதலார் சொல்லுங் கடுஞ்சொ லுவந்துரைக்கும்
ஏதிலா ரின்சொலிற் றீதாமோ—போதெலாம்
மாதர்வண் டார்க்கு மலிகடற் றண்சேர்ப்ப
ஆவ தறிவார்ப் பெறின்.

(இ-ள்) போது எல்லாம் - பேரரும்புகளிலெல்லாம், மாதர் வண்டு - அழகாகியவண்டுகள், ஆர்க்கும் - ஒலிக்கின்ற, மலிகடல் - (வளம்) நிறைந்தகடலினது, தண்சேர்ப்ப - குளிர்ச்சியாகியதுறைவனே, ஆவது - (ஒருவன்) தான் பெருகுதற்குக்காரணமாகிய நன்மையை, அறிவார் - அறிந்துசொல்லவல்லாரை, பெறின் - பெற்றிருப்பானாயின், காதலார் - (தன்னிடத்து) உள்ளன்புடையார், சொல்லும் - சொல்லுகின்ற, கடுசொல் - (செவிக்கு) இனிமையல்லாதசொல், உவந்து - மேலன்புகாட்டி, உரைக்கும் - சொல்லுகின்ற, ஏதிலார் - உள்ளன்பிலாரது, இன்சொலின் - (செவிக்கு) இனிமையாயுள்ளசொல்லினும், தீதுஆமோ - தீமையைத்தருவதாகுமோ ஆகாது. எ - று.

முன்காதலாரென்றமையால் ஏதிலார் அஃதில்லாருக்காயிற்று. ஏதிலார் பண்படியாகப்பிறந்தபெயர்; ஏதில் பகுதி, ஏதுவிகுதிப்பெயர் ; வடமொழியாயின் உகரங்கெடாது நிற்றல்வேண்டுமாதலால் அது அன்று. பகை உறவுயாதுமில்லாரென்பது. ஐந்தனுருபு எல்லைப்பொருளது. ஓ எதிர்மறை ஆவது ஒன்றன்படர்க்கை எதிர்காலவினைப்பெயர். அறிவாரென்பதுஉயர்திணைப்பெயராதலாலும், இரண்டாம் வேற்றுமைத்தொகையாதலாலும், அறிவார்ப் பெறினென இயல்பின் விகாரமாயிற்று. (எ௩)

அறிவ தறிந்தடங்கி யஞ்சுவ தஞ்சி
உறுவ துலகுவப்பச் செய்து—பெறுவதனால்
இன்புற்று வாழு மியல்பினா ரெஞ்ஞான்றும்
துன்புற்று வாழ்த லரிது.

(இ-ள்) அறிவது - அறிதற்குரியநூல்களை, அறிந்து - (விபரீதஐயமில்லாமல்) அறிந்து, அடங்கி - (அவைகூறியவழியில்) அடங்கிநடந்து, அஞ்சுவது - அஞ்சவேண்டியதீச்செயல்களை, அஞ்சி - (செய்வதற்கு) அஞ்சி, உறுவது - (தம்மை) நீங்காதனவாகிய அறங்களை, உலகு உவப்பச்செய்து - உயர்ந்தோர் (கண்டு) மகிழும்படிச்செய்து, பெறுவதனால் - பெற்றபொருள்களால், இன்பு உ

ற்று - மகிழ்ந்து, வாழும் - வாழ்கின்ற, இயல்பினர் - இயல்புடையார், எஞ்ஞான்றும் - வறியராகிய காலத்தும், துன்பு உறறுவாழ்தல் - துன்பத்தையடைந்து உயிர்வாழ்தல், அரிது - இல்லை. எ - று.

அறிவது, அஞ்சுவது, உறுவது, பெறுவது என்னும் செயப்பாட்டுவினையாலணையும்பெயர்கள் சாதியொருமை. இவற்றின்இடையே படுவிகுதிதொகுத்தல்பெற்றது. அறிதற்குரியநூல்கள் அறம், பொருள், இன்பம் இவற்றையுணர்த்துவன. (எச)

வேற்றுமை யின்றிக் கலந்திருவர் நட்டக்கால்
தேற்றா வொழுக்க மொருவன்க ணுண்டாயின்
ஆற்றுந் துணையும் பொறுக்க பொறானாயின்
தூற்றாதே தூர விடல்.

(இ-ள்) இருவர் - இரண்டுபேர், வேற்றுமைஇன்றி - (நான்நீஎன்கின்ற) வேறுபாடுஇல்லாமல், கலந்துநட்டக்கால் - (மனம்) கலந்து சிநேகித்தால், ஒருவன்கண் - (இருவருள்) ஒருவனிடத்து, தேற்றாதஒழுக்கம் - (மற்றவர்க்கு) அறிவிக்கக்கூடாத தீயஒழுக்கம், உண்டுஆயின் - உளதானால், ஆற்றும்துணையு(ம் - மற்றவன்)பொறுத்துக்கொள்ளுமளவும், பொறுக்க பொறுத்துக்கொள்ளக்கடவன், பொறான்ஆயின்-பொறுத்துக்கொள்ளச்சுருத்திலனானால், தூற்றாதே-(மற்றவனது தீயஒழுக்கத்தை) பலரறியச்சொல்லாமலே, தூரவிடல்-(அவனது நட்பை) தூரவிடக்கடவன். எ - று.

தேற்றாதவொழுக்கத்தை இவன்தூற்றுவானாயின் அதனாலுண்டாம் மானக்கேடும், அவனைப்பலகாலம் பலவழியால் ஆராய்ந்து நட்புக்கொண்டிலனென்னும்பழிப்பும் தன்னைச்சார்தலால் தூற்றாதே எனப்பிரிநிலை ஏகாரங்கொடுத்தாதினர். தேற்றாத என்னும்வினை தன்வினை பிறவினை இரண்டிக்கும்பொதுவாதலால், அதற்கு அறிந்து செய்யாத எனவும்உரைக்க. பிறவினையானபோது காரியப்பொருட்டாய்ச் செயப்படுபொருள் கொண்டதெனவும், தன்வினையாய்நின்றபோது காரணப் பொருட்டாய்க் காரியப்பெயர் கொண்டதெனவுங்கொள்க. (எரு)

இன்னா செயினு மினிய வொழிகென்று
தன்னையே தானோவி னல்லது—துன்னிக்
கலந்தாரைக் கைவிடுதல் கானக நாட
விலங்கிற்கும் விள்ள லரிது.

(இ-ள்.) கானகநாட - காட்டைச்சார்ந்த நிலத்தையுடையானே, விலங்கிற்கும் - மிருகங்களுக்கும், விள்ளல் - (மருவியிருந்து) பிரிதல், அரிது - இலது, (ஆதலால்)இன்னாசெயினும் - (நட்பினர்) துன்பந்தருவனவற்றைச்செய்தாராயினும், இனிய - (நாம்முன்செய்ததீவினைப்பயன் இவர்வழியாக வந்தன ஆதலால்) அவை இனிமையுடையன, ஒழிகஎன்று - நீங்கென்றுகொள்ளு

தலை) ஒழியக்கடவோமென்று, தன்னையே - (அத்தீவினைசெய்த) உன்னையே, தான்கோலின் - நீ நொந்துகொள்ளுதலினின்று, அல்லது-நீங்கி அவனைநொந்து கொள்ளுதலில், துன்னி - சார்ந்து, கலந்தாரை - நட்டோரை, கைவிடுதல் - கைவிடாதை. எ - று.

ஏ பிரிநிலை, கோ முதனிலைத்தொழிற்பெயர். ஐந்தனுருபு நீங்கற்பொருளது. அல்லது குறிப்புவினைப்பெயர். துன்னிஎன்னும் இறந்தகாலவினையெச்சம் கைவிடுதலென்னும் ஏவலொருமை எதிர்மறை வினைகொண்டது, ஒருசொல்லின்தன்மையாகியகைவிடு பகுதி, து சாரியை, அல் எதிர்மறைஏவலொருமை விகுதி, உகரக்கேடு சந்தி. இச்சொல்லைத் திணைபாலிடமெல்லாம் செல்லாதென உணரமாட்டாதார் வியங்கோள்வினையென மயங்கிக்கூறுவர். விலங்கு முதனிலைத் தொழிலாகுபெயர். செயினுமென்ற வும்மை செயயாமையின் மிகுதியை விளக்கி நிற்றலால் எதிர்மறை விலங்குமென்றது இழிவுசிறப்பும்மை. தன், தான்முன்னிலையில் படர்க்கை வந்த வழுவமைதி. (எசு)

பெரியார் பெருநட்புக் கோடனாஞ் செய்த
அரிய பொறுப்பவென் றன்றோ—அரியரோ
ஒல்லெ னருவி யுயர்வரை நன்னாட
நல்ல செய்வார்க்குத் தமர்.

(இ-ள்.) ஒல் என் - ஒல்லென ஒலிக்கும், அருவி - அருவியையுடைய, உயர்வரை நல் நாட - உயர்வாகிய மலையைச்சார்ந்த நல்லநாட்டை யுடையானே, நல்ல - (நட்டோர்க்கு) இதமாயினவற்றை, செய்வார்க்கு-செய்பவர்க்கு, தமர் - உறவாவோர், அரியரோ - இலரோ (பலருளர்) பெரியார் - பெருமைக்குணமுடையாரது, பெருநட்பு - மேன்மையாகியநட்பினை, கோடல்- (சிறியார்) தேடிக்கொள்ளுதல், நாம்செய்த - (அறிவின் சிறுமையால்) தாம் செய்த, அரிய - பிறரால் (பொறுத்தல்) கூடாததீயசெயல்களை, பொறுப்ப என்று அன்றோ - பொறுப்பார்களென்று கருதியே ஆம். எ - று.

ஆதலால பெரியார்பொறையுடையராயிருத்தலவேண்டுமென்பது இசையெச்சம். என்று இடைச்சொலடியாகப் பிறந்த இறந்தகால வினையெச்சம், என் பகுதி, ற் இறந்தகால இடைநிலை, உ வினையெச்சவிகுதி. அன்று என்னும் பண்படியாகப்பிறந்த ஒன்றன்படர்க்கைக் குறிப்புவினை முற்றுக்குவினைமுதல் கோடல் ஓ எதிர்மறை. இவ்விரண்டு எதிர்மறையுங் கூடித் தேற்றப்பொருள் தந்தன. அரியரோஎன்பதும் அது. (எஎ)

வற்றிமற் றொற்றப் பசிப்பினும் பண்பிலார்க்
கற்ற மறிய வுரையற்க—அற்றம
மறைக்குந் துணையாக் குரைப்பவே தம்மைத்
துறக்குந் துணிவிலா தார்.

# அ-ஆம் அதிகாரம் - பி ர்மனையுடைமை.

(இ-ள்.) வற்றி - (உண்டஉண(வு) அறறமையால், ஆற்றமற்றுப் பசிப்பினும் - மிகுதியும் பசித்தாலும, பணபுஇல்லார்க்கு - (அப்பசியை நீக்க வல்ல) இயல்பில்லாதவர்க்கு, அறறம் - (தமது) இல்லாமையை, அறிய - (அவா) அறிநதுகொளளும்படி, உரையறக - வெளிப்படுததா தொழியககடவர், தம்மை- தமமுயிரை, துறக்கும் - விடவல்ல, துணிவுஇல்லாதார்- துணிவில்லாதவர், அறறம - இல்லாமையை, மறைககும் - இல்லாமற்செய்யவல்ல, துணையார்கரு - நட்பினர்ககு, உரைப்ப-சொல்லுவார். எ - று.

தம்மைத்துறக்குந் துணிவுள்ளார் அவாககும் உரையாரொன்பது குறிப்பெச்சம். வறறி காரணப்பொருட்டாகிய இறந்தகாலச்செயவெனெச்சத்திரிபு; இல்லார்பசி காலமுறைதவறாது உண்பார் பசியினுந்துன்பஞ் செய்வதாதலால மற்றுபபசிப்பினுமென்றும், பொறுமல மறைககுந் துணையார்க் குரைத்தல் தமககுசகருத்தன்மையின் 'உரைச்சஎன்னுமல் உரைப்பஎன் றுங கூறினர். மற்று வினை மாற்றுப்பொருளது. அறறம தொழிறபெயர்; அறுபகுதி, அம் புடைபெயாச்சி விகுதி, பகுதி முற்றியலுகரமாதலால் றகரமிரட்டல் விரிததல்விகாரம், உகரககேடு சந்தி ஏ ஈறறசை. மானஙகெடாத இரவுங கூடாதென்பது கருத்து. வறறி என்பதறகு உடல இளைககஎன உரைத்தலுமாம். (எஅ)

இனபம பயநதாங கிழிவு தலைவரினும
இனபத்தின பக்க மிருநதைககக—இன்பம்
ஒழியாமை கணடாலு மோங்கருவி நாட
பழியாகா வாறே தலை.

(இ-ள்.) ஓங்குஅருவிநாட - உயர்ந்த அருவியையுடைய நாட்டானே, இன்பம் - இன்பத்தை, பயநத - தந்த, ஆஙகு - அவ்வொழுககத்தில், இழிவு - துன்பம், தலை - நின்னிடத்து, வரினும் - நேரிடினும், இன்பத்தின்பககம் - இனபத்தின்பககததில், இருந்தைகக - விரும்பிநின்றஉனககு, இன்பம்ஒழியாமை (ஒரொழுக்கத்தில்) இன்பம் இடைவிடாது வருதலை, கண்டாலும் - அறிந்தாலும், பழி - (அறிவுடையோரால்) பழித்தல், ஆகாத ஆறே - உண்டாகாதஒழுக்கமே, தலை - தலைமையானது, எ - று.

ஆதலால் பழியாகாதஆற்றிலேஒழுகுகஎன்பது இசையெச்சம். இன்பதுன்பஙகளிரண்டில் ஒருவர்விழைவது இன்பமொன்றுமே ஆதலின் இன்பத்தின்பககமிருந்தைக்க என்றும், இன்பம்ஒழியாது வருதலின்அருமை நோக்கி ஒழியாமைகண்டாலு மென்றுங்கூறினா முன்னது இறந்தது தழீஇய எச்சவும்மை, பின்னது எதிர்மறை யும்மை. இருக்தைஎன்னு முன்னிலையொருமையிறந்தகாலவினைப்பெயர் இருந்தைக்கு எனக்குவ்வுருபேற்று, "கு ஐ ஆனொ வருஉமிறுதி, அ ஒடு சிவணுஞ் செய்யுளுள்ளே" என்பது ஒத்தாதலின் அக்குவ்வுருபு அகரத்தைப்பொருந்தி இருந்தைக்கஎனநின்றது. இதனைவியங்கோள் வினையாக்கிஉரைககினும் பொருந்தும், (எகூ)

தான்கெடினுந் தக்கார்கே டெண்ணற்க தன்னுடம்பின்
ஊன்கெடினு முண்ணார்கைத் துண்ணற்க—வான்கவிந்த
வையக மெல்லாம் பெறினு முரையற்க
பொய்யோ டிடைமிடைந்த சொல்.

(இ-ள்) தான்கெடினும் - (ஒருவன்) தான்கெடுவானாயினும், தக்கார்கேடு - மேலோர்கெடுதலை, எண்ணற்க - ஆராயாதொழியக்கடவன், தன் உடம்பின் - தன்னுடலினது, ஊன்கெடினும் - தசையழிவதாயினும், உண்ணார்கைத்து - அநுபவிக்கத் தகாதவருடையபொருளை, உண்ணற்க - அநுபவியாதிருக்கக்கடவன், வான்கவிந்த - ஆகாயத்தால் கவியப்பட்ட, வையகம்எல்லாம் - பூமி முழுமையும், பெறினும் - பெறுவானாயினும், பொய்யோடு - பொய்யுடன், இடைமிடைந்த - இடையில்கலப்புற்ற, சொல - சொற்களை, உரையற்க-சொல்லாதொழியக் கடவன். எ-று.

தக்கார் கெடுதலால் தன்கேடும், உண்ணார்கைத்துண்ணலால் தன்னுடம்பின் ஊன்கேடும் ஒழிதலும், பொய்யோடிடைமிடைந்தசொல் உரைத்தலால் வையகமெல்லாம்பெறுதல் கூடுதலும் உளவாவனஆயினும் அவை செய்யற்கஎன்பது. உம்மைகள்மூன்றும் உயர்வுசிறப்பு. உண்ணத்தகாதார் தெய்வம், குரு, தன்னைத்தேறினோர், எளியர்முதலானோர். கைத்துஎன்பதில் அத்துச்சாரியை எனக்கொண்டு உண்ணார்கைத்துண்ணற்க என்பதற்கு உண்ணத்தகாதவரிடத்துண்ணற்க என்வுரைத்தலும் பொருந்தும். கைத்து இடமடியாகப்பிறந்தபெயர், கை பகுதி, த் சந்தி, து ஒன்றன்படர்க்கைவிகுதி. வையகமெல்லாம் ஒருமையிற் பன்மைவந்தவழுவமைதி. (௮௦)

## ௯ - ஆம் அதிகாரம் - பிறர்மனைநயவாமை.

அஃதாவது காமமயக்கத்தால் பிறருடையமனையாளை விரும்பாமையையுணர்த்துவது. துறவியர்தாம் விட்டகாமவின்பநுகர்ச்சியை மீண்டும் கொள்ளல் கூடாமைபற்றி இஃது அதன்பின்வைக்கப்பட்டது. இதுவும் பொது.

அச்சம் பெரிதா லதற்கின்பஞ் சிற்றளவால்
நிச்ச நினையுங்காற் கோக்கொலையால்—நிச்சலும்
கும்பிக்கே கூர்த்த வினையாற் பிறன்றாரம்
நம்பற்க நாணுடை யார்.

(இ-ள்) அச்சம் - (பிறன்மனையாளைவிரும்பிஒழுகலால்வரும்) அச்சம், பெரிது - பேரளவையுடையது, அதற்கு - அவ்வச்சத்தினளவுக்கு, இன்பம் - (அவ்வொழுக்கத்தால்வரும்) இன்பம், சிறுஅளவு - சிறியஅளவையுடையது, நிச்சம் - அவ்வொழுக்கத்தின் உண்மையை, நினையுங்கால் - ஆராயுமிடத்து, கோ - அரசனால், கொலை - வருத்துதலுளது, நிச்சலும் - எப்போதும், கும்பிக்கே - கும்பிபாகமென்னும் நரகத்துக்கே, கூர்ந்த - காரணமாய்மிகுந்த, வினை - பாவஞ்

ளது, (ஆதலால்) நாண்உடையார் - (பகைபழிபாவங்களுக்கு) அஞ்சுதலுடையார், பிறன்தாரம் - பிறனுடையமனையாளை, நம்பற்க-விரும்பாதிருக்கக்கடவர்.

எப்போது மென்றது நினைத்தல், முயலுதல், உண்ணுதல் நிகழுங்காலத்தை. கும்பிபாகமென்பது கும்பி யெனக்குறைந்து நின்றது. ஏ பிரிநிலை. குவ்வுருபு இரண்டில் முன்னது ஐந்தாவதற்குரிய எல்லைப்பொருளது; பின்னது நிமித்தகாரண காரியப்பொருளது. நம்பற்க நசையாகிய குறிப்புணர்த்தும் உரிப்படியாகப்பிறந்த எதிர்மறை வியங்கோள். (அக)

அறம்புகழ் கேண்மை பெருமையிந் நான்கும்
பிறன்றார நச்சுவார்ச் சேரா—பிறன்றாரம்
நச்சுவார்ச் சேரும் பகைபழி பாவமென்
றச்சத்தோ டிந்நாற் பொருள்.

(இ-ள்.) அறம் - அறமும், புகழ் - புகழும், கேண்மை - நட்பும், பெருமை - பெருமிதநடையும், இந்நான்கும் - ஆகிய இந்நான்கும், பிறன்தாரம் - பிறனுடையமனையாளை, நச்சுவார் - விரும்பி நடக்குமியல்பினரை, சேரா - அடையா, பிறன்தாரம் - பிறன்மனையாளை, நச்சுவார் - விரும்பிநடக்கும், அவ்வியல்பினரை, பாவம் - பாவமும், பழி - குடிப்பழியும், பகையென்று - பகையும், அச்சத்தோடு-அஞ்சிநடத்தலோடு, இந்நாற்பொருள்-இந்நான்குபொருளும், சேரும் - (தாமேவந்து) அடையும். எ - று.

அறம், புகழ், கேண்மை, பெருமையென்றதற்கேற்பப்பாவம், பழி, பகை அச்சம் என்பதேமுறைநிரனிறையாயினும் செய்யுள்நோக்கிப் பிறழவைத்தனர். பாவமென்னும் பண்பும், பகை, பழி, அச்சமென்னும் தொழிலும் பொருளென்றது நியாயநூலார் மதம்பற்றி. பெருமையும், அச்சமும் நடையின்மேனின் முற்றும்மை விகாரத்தால் தொக்கது. (அஉ)

புக்கவிடத் தச்சம் போதரும்போ தச்சம்
துய்க்குமிடத் தச்சந் தோன்றாமற் காப்பச்சம்
எக்காலு மச்சந் தருமா லெவன்கொலோ
உட்கான் பிறனில் புகல்.

(இ-ள்) புக்க இடத்து - (பிறன்மனையாளைவிரும்பி)புகுந்ததனியிடத்தில் அச்சம் - அச்சமுளது, போதரும்போது - தன்னிடம் மீண்டுவரும்போது அச்சம் - அச்சமுளது, துய்க்குமிடத்து - அநுபவிக்கையில், அச்சம் - அச்சமுளது, தோன்றாமல் - (அத்தீயொழுக்கம்) வெளிப்படாதபடி, காப்பு - காத்துக்கொள்ளுதலில், அச்சம் - அச்சமுளது, எக்காலும் - எல்லாக்காலத்திலும், அச்சம்தரும் - (அவ்வொழுக்கம்) அச்சத்தைத்தரும், உட்கான் - இவ்வச்சங்களைக் கருதாதவனாகி, பிறன் இல் - பிறன்மனையாளிடத்து, புகல் - விரும்பிச்செல்லல், எவன் - எத்தன்மையது.

துய்க்குமிடத்து நிகழ்காலவினையெச்சம். துய் பகுதி, க் சந்தி, கு, உம் சாரியை, உகரக்கேடு சந்தி, இடத்து நிகழ்காலவினையெச்சவிகுதி. மூன்னுள்ள அச்சநாள்களிற்றில் உளதுசொல்லெச்சம். எக்காலுமென்பதில் உம்மைமுற்றுதலால்எகரவினு எஞ்சாமைப்பொருளது. எக்காலுமச்சந்தருமெனவே பிறர்மனை நயத்தலால் இன்பஞ் சிறிதுமில்லையென்பது. போதருமென்பதில் போபடர்க்கை யிடத்துச்சொல்லாயினும் அதனோடுதாஎன்னும் தன்மையிடத்துச்சொல்புணர்ந்து போதாஎன ஒருசொற்றன்மைப்பட்டு இவ்விடத்துக்குரியதாயிற்று. தன்மைஎன்றது அணமையை. (அங)

காணிற் குடிப்பழியாங் கையுறிற் கால்குறையும்
ஆணின்மை செயயுங்கா லச்சமாம—நீணிரயத்
துன்பம் பயக்குமாற் றுச்சாரி நீகண்ட
இன்ப மெனக்கெனைத்தாற் கூறு.

(இ-ள்) காணின் - (பிறன்மனையாளைவிரும்பிச் செல்லுதலை அயலவர்) காண்பாராயின், குடி - நினதுகுடிக்கு, பழி ஆம - பழிஉளதாகும், கை உறின் (கொண்டான்முதலியோர்) கையிலகப்பட்டால், கால் குறையும் - கால் குறைபடும், ஆண் இன்மை - ஆண்மையில்லாமையாகிய தீயொழுககத்தை, செய்யுங்கால் - செய்யாநிறகையில், அச்சம் ஆம் - அச்சமுளதாம், நீள் நிரயம் - பெருநரகத்தினது, துன்பம் - துன்பததுக்குக் காரணமாகிய பாவத்தை, பயக்கும் - (அவ்வாணின்மை) தரும், துச்சாரி - தீயொழுக்கமுடையானே, நீகண்ட இன்பம் - நீ அநுபவித்தஇன்பம், எனைத்து - எவ்வளவையுடையது, எனக்குக் கூறு (அவ்வொழுக்கத்தை இகழும்) எனக்குச்சொல். எ - று.

எனவே அத்தீயொழுக்கம்இம்மை மறுமையிரண்டிடத்தும் துன்பந்தருமென்பதாயிறறு. அத்தீயொழுக்கத்தைப் பாரதிதமென்னும் இன்பநாலுடையானை நோக்கிக்கூறியது இச்செய்யுள். பிறன்மனை யடைதற்பொருட்டுத்திரிவது காலாதலால் அதன்மேல்வைத்துக் கால்குறையுமென்றாராயினும் அதனை உபலக்கணமாகக்கொண்டு வினையுறுப்புங் குறையுமெனவுங்கொள்க. உட்பகையாகிய காமத்தை அடக்குந்திண்மையில்லாமல் அதற்குள்ளாகி யொழுகலைஆணின்மையென்றார். செய்யுங்காலென்பதும் நிகழ்காலவினையெச்சம். காரணமாகியபாவத்தைக் காரியமாகிய துன்பமென்றது உபசாரவழக்கு.

செம்மையொன் றின்றிச் சிறியா ரினத்தராய்க்
கொம்மை வரிமுலைபா டோண்மரீஇ—உம்மை
வலியாற் பிறர்மனைமேற் சென்றாரோ யிம்மை
அலியாகி யாடியுண் பார்.

(இ-ள்) உம்மை - முற்பிறப்பில், சிறியார் - கீழோருடைய, இனத்தர் ஆகி - கூட்டத்தோடு கூட்டுச்செய்தவராகி, செம்மை ஒன்றும் - நடுவுநிலைமை

றிதும், இன்றி - இல்லாமல், வரி - தொய்யிலாகிய கோலமெழுதிய, கொம்மைமுலையாள் - வட்டமாகிய முலையையுடைய பெண்ணினது, தோள்மரீஇ - தோள்களைவிரும்பி, வலியால் - (பொருளுடல்களினது) வலியினால், பிறர்மனைமேல் - பிறர்மனையாளாகிய அவளிடத்து, சென்றாரே - சென்றவரே, இம்மை வருபிறப்பில், அலி ஆகி - பேடிகளாகி, ஆடி - நடனஞ்செய்து, உண்பார் (அதனால்வரும்பொருளால்) உயிர்வாழ்பவர் எ - று.

அவாவுதற்குக் காரணமாதலபற்றிக் கொம்மைவரியென விசேடணந்தந்து முலையாளெனவும், பொருளுடல்களினது வலியுடையாராகுஞ்சிறப்புக் கருதிச் சென்றாரெனவும், சென்ற இழிபுகருதி அலியெனவும் கூறினர். சென்றார், அலி முறையே சிறப்பு இழிபுகளை யுணர்த்திவந்த பாலவழுவமைதிகள். நடுவுநிலைமையாவது தம்மனைவியைப் பிறனொருவன் கூடப் பொறாதவன் அது பிறனுக்கு முன்னெனக் கருதிச்செய்யாமை. ஒன்றென்பதனீற்றில இழிவுசிறப்பும்மைதொக்கது. மருவல் விரும்புதல் பிறர்மனை கூடப்பொருளது. (அ௫)

பல்லா ரறியப் பறையறைந்து நாட்கேட்டுக்
கல்யாணஞ் செய்து கடிப்புக்க—மெல்லியற்
காதன் மனையாளு மில்லாளா வென்னொருவன்
ஏதின் மனையாளை நோக்கு.

(இ - ள்) நாள்கேட்டு - (தந்தைமுதலியோர்) நல்லநாள்விசாரித்து, பல்லார் - (உறவினர்முதலிய) பலரும், அறிய - அறியும்படி, பறைஅறைந்து - பறைகொட்டுவித்து, கல்யாணம்செய்து - கல்யாணஞ் செய்யப்பட்டமையால், கடிபுக்க - (தன்னாலிடப்பட்ட) காவலிலுள்ள, காதல - தன்னிடத்துவிருப்புமுள்ள, மெல்இயல - மென்மையாகிய தன்மையுடைய, மனையாளும் - மனைவியும், இல்லாள் ஆக - தன்மனையினிடத்து இருக்கையில, ஒருவன் - ஒருவன், ஏதில்மனையாளை - அயலான்மனைவியை, நோக்கு - கருதுதல, என் - யாதுகாரணம். எ - று.

அறைந்து என்பதில் பிறவினைவிகுதியாகிய விவ்விகுதியும், கல்யாணஞ்செய்து என்பதில் செயப்பாட்டுவினைப்பொருண்மை விகுதியாகிய படுவிகுதியுந் தொக்குத்தலாயின. பின்னுள்ளவினையெச்சம் காரணப்பொருட்டாகிய செயவெனெச்சத்திரிபு. தனக்குப்பணிந்து நடக்கும் ஒழுக்கமும், தன்னினிளைமையு முடையாளென்பார் மெல்லியன் மனையாளென்றார். பகுதிப்பொருள் விகுதியாகிய மைவிகுதி கெட்ட ஏதின்மை பண்புகுபெயர். உம்மை உயர்வு சிறப்பு. பல்லாரென்பதனீற்றில் முற்றும்மை தொக்கப்பட்டது. (அ௬)

அம்ப லயலெடுப்ப வஞ்சித் தமர்பரீஇ
வம்பலன் பெண்மரீஇ மைந்துற்று—நம்பும்
நிலைமையி னெஞ்சத்தான் றுப்புரவு பாம்பின்
தலைநக்கி யன்ன துடைத்து.

(இ - ள்) அயல் - அயலிலுள்ளார், அம்பல் எடுப்ப - தன்பழியெடுத்துக் கூறவும், தமர் - (அஃதறிந்த) உறவினர், அஞ்சி - பயந்து, பரீஇ - வருந்தவும், வம்பலன் - பிறனுடைய, பெண் - மனையாளை, மரீஇ - சேர்ந்து, வைகது - பாவமாகியகுற்றத்தை, உற்று - அடைந்து, நம்பும் - அவ்விருப்பமும், நிலைமை இல் - நிலைத்தலின்மையாகிய, நெஞ்சத்தான் - மனமுடையானது, துப்புரவு - அநுபவம், பாம்பின்தலை - விடப்பாம்பினது தலையை, நக்குல அனனது - நக்கினலொத்த அபாயத்தை, உடைத்து - உடையது. எ - று.

அவ்விருப்பமும் நிலைமையிலலாமை என்றது முனமருவின பிறன்மனைவிபால் வைத்த விருப்பம் சின்னாளசென்றபினகுலைந்து வேறுபிறன்மனைவிபால்வைததல்பற்றி உம்மை-இழிவுசிறப்பு நமபுவிருப்பாகிய குறிப்புணாததும் உரிச்சொல். உவமையால ஒருகாலத்துமரணமும நேருமெனபது. பரீஇ செயவெனச்சத்திரிபு. வம்பலன் உரியடியாகப் பிறந்தபெயா, வம்பு (நிலையின்மை) பகுதி, அல் சாரியை, அன் ஆண்பாற்படர்க்கைவிகுதி, உகரகேடுசந்தி, பொருள்நட்புப் பகை யிரணடும் நிலையிலலானவனபது. இது ஒருவபிறனென்னும் பொருளில்வந்தது. (௮௭)

பரவா வெளிப்படா பலலோர்கட் டங்கா
உரவோர்கட் காமநோ யோஓ கொடிதே
விரவாரு ணாணுப் படலஞ்சி யாதும்
உரையாதுள் ளாறி விடும்.

(இ - ள்) உரவோர் கண் - அறிவுடையாரிடத்துத் தோன்றும், காமநோய் - காமநோய்கள், பரவா - பெருகமாட்டா, வெளிபபடா - (உளளேபெருகின்) புறத்தே தோன்றமாட்டா, பல்லோர்கண் தஙகா - (புறத்தே தோன்றின்) பின் அறிந்த பலரிடத்தும் தஙகமாட்டா, (ஆதலால அவை) ஓ கொடிதே - மிகக்கொடுமையுடையனவே ஆம், விரவாருள - பகைவரிடத்து, நாணுப்படல் - (அவ்வறிவுடையோர)நாணுதலை, அஞ்சி, அஞ்சுதலால, யாதும் - (அக்காமநோய்கள்) சிறிதும், உரையாது - (தம்மை) வெளிபபடுத்தாமல், உள ஆறிவிடும் - உளளே அடஙகிப்போம். எ - று.

தோன்றிய இடப்பன்மைபற்றிக் காமநோய் பலவாயின. பல்லோர்கட் டங்காமையாகிய கொடுமைபற்றித் தோன்றிய செறலால் பன்மைப்பால் கொடிதென ஒருமைப்பாலானது பால்வழுவமைதி. ஓ இழிவுசிறப்பு ஏ தேற்றம். மனத்தையும் உடலையும் வருத்துதலால் காமம் நோயெனப்பட்டது. பல்லோர் கட்டங்காமையாவது மறறோரும் அறிய அப்பலலோருந்தூறறுதல். அஞ்சி செயவெனெச்சத்திரிபு. உரையாதென்னும் எதிர்மறைவினையெச்சம் அஃறிணைக் கண்கிளக்குநபோலக் கூறும்மரபு வழுவமைதியாகிய இலக்கணை. (௮௮)

அம்பு மழலு மவிர்கதிர் ஞாயிறும்
வெம்பிச் சுடினும் புறஞ்சுடும்—வெம்பிக்

கவற்றி மனத்தைச் சுடுதலாற் காமம்
அவற்றினு மஞ்சப் படுமே.

(இ - ள்) அம்பும் - (எய்யப்பட்ட) அம்பும், அழலும் - தீயும், அவிர்கதிர் - விளங்குகின்ற கிரணங்களையுடைய, ஞாயிறும் - சூரியனும், வெம்பி - கொதித்து, சுடினும் - வருத்தினும், புறம் சுடும் - உடலைவருத்தும், காமம் - காமமானது, வெம்பி - வெப்பமுடையதாகி, மனத்தைக்கவற்றி - மனத்தைக்கவலைப்படுத்தி, சுடுதலால் - வருத்துதலால், அவற்றினும் - அவ்வம்பு முதலியவற்றிற்கு அஞ்சுதலினும், அஞ்சப்படும் - (அக்காமத்தை) அஞ்சுதலே தகுதி. எ-று

சுடினுமென்னும் எதிர்மறைஉம்மை அவ்வம்புமுதலிய மூன்றும் தம்மியல்பின்மிகுச்சுடமாட்டாமையை உணர்த்திற்று. சுடுதல் அம்புக்கின்றாயினும் அழல், ஞாயிறென்னும் மிகுதிபற்றி அவற்றின்வினைகொண்டது. ஆதலால் அம்புமழலும் ஞாயிறும்சுடினுஞ் சுடுமென்றது ஓர்மரபுவழுவமைதி. அம்புவெம்புதல் உடையான்தொழிலை உடைமையின்மேலேற்றிக்கூறும் அவ்வழுவமைதி. படும் தேற்றப்பொருள் தரும் ஒருவகைத்தொழிற்பெயர். (அக)

ஊருளெழுந்த வுருகெழு செந்தீக்கு
நீருட் குளித்து முயலாகும் — நீருள்
குளிப்பினுங் காமஞ் சுடுமேகுன் றேறி
ஒளிப்பினுங் காமஞ் சுடும்.

(இ-ள்) ஊருள் - (ஒருவன்தானிருக்கும்) ஊரில், எழுந்த - பற்றி எழுந்த, உருகெழு - வெப்பமிக்க, செந்தீக்கு - செந்நிறமாகியபெருந்தீயினின்றும், நீருள்குளித்தும் - (ஆறுகுளமுதலிய) நீரிலகுளித்தும, உயல் ஆகும் - தப்புதல்கூடும், காமம் - காமத்தி, நீருள்குளிப்பினும் - நீரில்மூழ்கியிருப்பினும், சுடுமே - சுடாமலிராது, காமம் - அககாமத்தீ, குன்றுஏறி - மலைமீதேறி, ஒளிப்பினும் - (குகைமுதலியவற்றில்) ஒளிந்திருப்பினும், சுடும் - சுடாமலிராது.

ஊருளெழுந்த உருகெழு என்றவிசேடணத்தால் செந்தீஎன்றது பெருந்தீயைஎன்பது பெற்றாம். ஐந்தாவதனீங்கற் பொருளில்வந்த குவ்வுருபு உயலென்னுந் தொழிற்பெயர்கொண்டது. குளித்துமென்றஉம்மை அப்புறப்பட்டு அன்றிஎனப்பொருள் தருதலால் இறந்தது தழீஇய எச்சவும்மை. நீங்காது உடனின்றுசுடுங் கொடுமைகருதி இருமுறைகாமஞ் சுடுமென்றார். தேற்றப்பொருளதாகிய ஏகாரத்தைப்பின்னுங்கூட்டுக. உருஎன்னும் பண்படிவிகுதிபெறின் உருப்பமெனப் படிவிகுதிபெறும். (௯௦)

## ௰ - ஆம் அதிகாரம் - ஈகை.

அஃதாவது வறியராய் இரந்தவர்க்கு மறுக்காமல்ஈதலையுணர்த்துவது. ஈகை காரியவாகுபெயர். பிறன்மனைநயத்தலாகிய தீமைசெய்தானையும் பொறுத்து, அவரிரப்பினும் வேண்டியதை ஈயவேண்டுமென்றற்கு இது அதன்பின் வைக்கப்பட்டது. இது இல்லறத்தானைநோக்கிற்று.

இல்லா விடத்து மியைந்த வளவினால்
உள்ள விடம்போற் பெரிதுவந்து—மெல்லக்
கொடையொடு பட்ட குணனுடை மாந்தாக்
கடையாவா மாண்டைக் கதவு.

(இ-ள்) இல்லாத இடத்தும்-(மிக்கபொருள்) இல்லாத நிலைமையிலும், இயைந்த அளவினால் - (தம்மிடத்து) இசைந்துள்ளபொருள்களின்மட்டில், உள்ளஇடம்போல், மிக்கபொருளுள்ள நிலைமையில் மகிழ்வதுபோல - பெரிது உவந்து - மிகுதியுமமகிழ்ந்து, மெல்ல - சிறிதாக, கொடையொடு - கொடுத்தலாகியநற்செயலோடு, பட்ட - நீங்குதலில்லாத, குணன்உடைய மாந்தர்க்கு - நற்குணமுடையமக்களுக்கு, ஆண்டைக்கதவு - துறக்கவுலகத்துக்கதவுகள், அடையாஆம் - மூடப்படாதனஆகும். எ - று.

அளவினாலென்பது வேற்றுமைமயக்கம். பெரிதுவக்காராயின்கொடுத்தல்நடவாதாதலால் பெரிதுவந்தென்றும், ஆண்டைக்கதவு அடைக்கப்படாமைக்குக் காரணம்கொடையேஅன்றிகுணமுமாமென்பார் கொடையொடுகுணனுடைமாந்தரென்றுங்கூறினார். ஈற்றில் ஐகாரச்சாரியைபெற்று நின்றமுதனீண்டஆண்டையென்னுஞ்சுட்டுப்பெயர், முதனிலையாகிய அகரஞ்சேய்மையைச்சுட்டுவதாதலால் துறக்கத்தின்மேல் நின்றது. உயர்வுபற்றிக் கதவுபன்மைப்பாலாயிற்று. (௯௰௧)

முன்னரே சாநாண் முனிதக்க மூப்புள
பின்னரும் பீடழிக்கு நோயுள—கொன்னே
பரவன்மின் பற்றன்மின் பாத்துண்மின் யாதும்
கரவன்மின் கைத்துண்டாம் போழ்து.

(இ-ம்) முன்னர் - எதிரில், சாம்நாள் - இறக்குநாளும், முனியத்தக்க - வெறுக்கத்தக்க, மூப்பு - முதுமையும், உள - உண்டாயிருக்கின்றன, பின்னரும் - அவையன்றியும், பீடு - (வலிமுதலியவற்றின்) மிகுதியை, அழிக்கும் - கெடுப்பதற்குரிய, நோய் உள - நோய்கள்உண்டாயிருக்கின்றன, (ஆதலால்) கைத்துஉண்டுஆம்போழ்து - (மிக்க) பொருளுண்டாயிருக்குங்காலையில், கொன்னே - பயனில்லாமலே, பரவன்மின் - (மேலும்பொருள்தேடுதல்கருதி) பலவிடங்களிலும்செல்லாதிரும், பற்றன்மின் - இறுகப்பிடியாதிரும், பாத்து - (பிரமசாரிமுதலியபதின்மருக்கும்) பகுத்திந்து, உண்மின் - (நீவிரும்) உண்ணும், யாதும் - சிறிதும், கரவன்மின் - (இரப்பவரை) மறுக்காமலிரும்.

பரவுதல் பலவிடங்களிலுஞ்செல்லுதல். தம்முள்குறித்த ஒரெண்ணினளவுதேடுவோமெனக்கொண்டார்க்கே இப்பரவுதல்உண்டாவதாலால் அது பற்றுதற்கும், பாத்துண்ணாமைக்கும், கரத்தலுக்குங் காரணமாதல்பற்றி முதற்கணவைத்தனர். கொன் - பயனின்மைப் பொருளதாகிய இடைச்சொல். பாத்து என்னும் இறந்தகாலவினையெச்சத்தின் பகுதியாகிய பா பகு என்னும் முதனிலைத்தனிவினையின்மரூஉ. பிரமசாரிமுதலியபதின்மர்பிரமசாரி,வானப்பிர

ரஸ்தன், சந்நியாசி, ஆதரித்தவரால் துறக்கப்பட்டவர், தரித்திரர், ஒருவருமின்றித் தம்பால்வந்திறந்தவர், தென்புலத்தார், தெய்வம், விருந்தினர், சுற்றத்தார். முனியவென்னும் செயவெனெச்சம் ஈறுதொகுக்கப்பட்டது. (௯௨)

நடுக்குற்றுத் தற்சேர்ந்தார் துன்பந் துடையார்
கொடுத்துத்தாந் துய்ப்பினு மீண்டுங்கா லீண்டும்
இடுக்குற்றுப் பற்றினு நில்லாது செல்வம்
விடுக்கும் வினையுலந்தக் கால்.

(இ-ள்.) கொடுத்து - (இரப்போர்க்கு) கொடுத்து, தாம் துய்ப்பினும் - தாம்அநுபவிப்பினும், ஈண்டுங்கால் - வளருங்காலத்திலே, ஈண்டும் - வளரா நிற்கும், விடுக்கும் - (தம்பால்) விடுதற்குரிய, வினை - நல்வினை, உலந்தக்கால் - முடிந்ததானால், இடுக்குஉற்று - உலோபகுணத்தைப்பெற்று, பற்றினும் - தாம் இறுகப்பிடிப்பினும், நில்லாது - நிலைபெறாது, செல்வம் - பொருட்செல்வம், (இஃதறியாதார்) நடுக்குஉற்று - (வறுமையால்) தளர்ச்சியைஅடைந்து, தற்சேர்ந்தார் - தம்மைச்சார்ந்தவரது, துன்பம் துடையார் - (அவர்வேண்டியவந்தபொருளையீந்து) துன்பத்தை ஒழிக்கார். எ-று.

நடுங்கு, இடுங்கு என்னும் முதனிலைகள் புடைபெயர்ச்சி விகுதியாகியதல்புணர்ந்து கெட்டமாத்திரையில் நடுக்கு, இடுக்கு எனத்திரிந்தன ஆதலால் இவை முதனிலைதிரிந்த தொழிற்பெயரென்பர். தற்சேர்ந்தாரென்பதில் தன் பன்மையி னொருமைவந்த வழுவமைதி. இஃதறியாதார் என்பது இசையெச்சம். இச்செய்யுள் ஏற்புழி எடுத்துக்கூட்டும் அடிமறிச்செய்யுள். (௯௩)

இம்மி யரிசித் துணையானும் வைகலும்
நும்மி லியைவ கொடுத்துண்மின்—உம்மைக்
கொடாஅ தவரென்பவர் குண்டுநீர் வையத்
தடாஅ வடுப்பி னவர்.

(இ-ள்) குண்டு நீர் - கடலாற் சூழப்பட்ட, வையத்து - உலகத்தில், அடாத-(தமக்கென்று உணவு)சமைக்காத, அடுப்பின் அவர் - அடுப்பினையுடைய அவ்விரப்போரை, உம்மை - முற்பிறப்பில், கொடாதவர் - (தம்பால் இரந்தோர்க்கு) ஈயாதவர், என்பர் - என்றுஅறிவுடையோர் கூறுவர், (ஆதலால்) வைகலும் - நாடோறும், நும்மில் - உம்மிடத்து, இயைவ - அடைந்துள்ள பொருள்களில், இம்மிஅரிசி - இம்மியென்னும் அளவைக்கொண்ட அரிசியினது, துணை ஆனும் - அளவுள்ளபொருளை ஆயினும், கொடுத்து - (அறத்தினபொருட்டு) கொடுத்து, உண்மின் - (பொருளுடையீர்) உண்ணுங்கோள். எ-று.

இம்மி என்பது மிகச்சிறிதென்பதற்குச் காட்டியதோரளவு. அது சுணூஇருபத்தொன்று கொண்டது. அவ்வளவைக்கொண்ட பொருள் மத்தங்காய்ப் புல்லரிசி. இம்மிஅரிசி பண்புத்தொகைநிலை. துணை பண்பாகுபெயர். ஆன் ஆயினென்பதன் மரூஉ. குண்டு நீர் பண்புத்தொகைப் புறத்துப்பிறந்த அன்

மொழித்தொகையாகிய காரணப்பெயர். குண்டு ஆழம். அடுப்பினவர் "தெருண்டவறிவினவர்" என்றாற்போல இன்சாரியை பெறக இரண்டனுருபுதொக்கது. அடாவடுப்பி னென்றமையால் அவர் இரப்போர் மேனின்றது. சுட்டு இழிப்பில்வந்தது. (௬௪)

மறுமையு மிம்மையு நோக்கி யொருவற்
குறுமா றியைவ கொடுத்தல்— வறுமையால்
ஈத லிசையா தெனினு மிரவாமை
ஈத லிரட்டி யுறும்.

(இ-ள்) இயைவ - (ஒருவன்தன்னால் கொடுப்பதற்கு) இசைந்தபொருள்களை, மறுமையும் - மறுமைப்பயனையும், இம்மையும் - இம்மைப்பயனையும், நோக்கி - நன்குணர்ந்து, ஒருவற்கு - (இரந்த) ஒருவனுக்கு, உறும் ஆறு- உரிமையாம்வழியில், கொடுத்தல் - கொடுக்கக்கடவன், ஈதல் (அவ்வாறு) கொடுத்தல், வறுமையால் - வறுமையினால், இசையாதுஎனினும் - இசையாதாயினும், இரவாமை- (தான்பிறர்பால்)யாசிக்காமையாராதல், ஈதல்-ஈதலாலவரும் மேம்பாட்டினும், இரட்டி - இருமடி மேம்பாடு, உறும் - அடைவான். எ-று.

மறுமை இம்மை இரண்டுமிடவாகுபெயர். அவ்விரண்டின் பயனாவன முறையே துறக்கஇன்பம், புகழ்முதலியன. ஈதல் கருவியாகுபெயர். உறுமாறென்றமையால் ஒருவன் இரப்போனுக்காயிற்று. (௬௫)

நடுவூருள் வேதிகைச் சுற்றுக்கோட் புக்க
படுபனை யன்னர் பலர்நச்ச வாழ்வார்
குடிகொழுத்தக் கண்ணுங் கொடுத்துண்ணா மாக்கள்
இடுகாட்டு ளேற்றுப் பனை.

(இ-ள்.) பலர்நச்ச - பலரும் விரும்பும்படி, வாழ்வார்-வாழ்பவர், நடுவூருள் - ஊர்நடுவில், வேதிகைச்சுற்று - மேடையின் வட்டத்திலுள, கோள்புக்க - கொள்ள (அதனடுவில்) உள்ள, படுபனை - பயனுண்டாகும் பெண்பனையை, அன்னர் - ஒப்பாவர், குடி - (தம்முடைய) குடும்பம், கொழுத்தக்கண்ணும் - (தம்மால்) செல்வ மிக்கவிடத்தும், கொடுத்து - (ஏற்போர்க்கு)கொடுத்து, உண்ணாமாக்கள் - (தாமும்) அனுபவியாத மனிதர்கள், இடுகாட்டுள் - சுடுகாட்டிலுள்ள, ஏற்றுப்பனை அன்னர் - ஆண்பனையை ஒப்பாவார். எ-று.

பலர்நச்ச வாழ்வாராவார் நச்சிவந்த பலரும் முன்றங்குறைகிடம் பெறுவாரென்பார் படுபனையாகிய உவமையை வேதிகைச்சுற்றுக் கோட்புக்கவென விசேடித்தும், பெருஞ்செல்வத்தின ரென்பார் குடிகொழுத்தக்கண்ணுமென்றும், அறத்தின்பொருட்டுக் கொடுத்தலில்லாமையால்அச்செல்வப்பயன் பெறுதலிலரென்பார் அவரை ஏற்றுப்பனையென்றுங் கூறினர். முன்னுள்ள அன்னரென்னுங் குறிப்புவினைமுற்றைப் பின்வாக்கியத்துக்குங்கூட்டுக.பண்புத்தற்கிழமைப்பொருட்டாகியஊர்நடுவென்னும் ஆறும்வேற்றுமைத்தொகையில

த்தொடர் பின்முத்தாக நின்றமையால் நடுவூரென்பது இலக்கணப்போலி. ஒருசார்விலங்கினுணின் பெயராகிய ஏறென்பதைப் பனைக்குக்கூறியது ஓர்மரபுவழுவமைதி. ஒருசார்விலங்குக்குரியதை "ஆனுடனெருமை பன்றியாய் மயிர்க்கவரி சங்கு, மானொடுமேனைபுல் வாயுமாறுகொள் சுறவும் ஏறும்" என்னும் நிகண்டாலுமுணர்க. (கூஅ)

> பெயற்பான் மழைபெய்யாக் கண்ணு முலகம்
> செயற்பால செய்யா விடினும்—கயற்புலால்
> புன்னை கடியும பொருகடற் றணசோப்ப
> என்னை யுலகுய்யு மாறு.

(இ-ள்) கயல்-சேல்மீனினது, பலால் - முடைநாற்றத்தை, புன்னை புன்னைமலர்கள், கடியும் - (தம்மணத்தால) விலக்குகின்ற, பொருகடல - (அலைகளால் கரையை) தாக்குகின்றகடலினது, தணசேர்ப்ப-குளிர்ந்த துறையையுடையானே, பெயல்-பெய்தலையுடைய, பால்-கார்ப்பருவத்தில், மழைபெய்யாக்கண்ணும் - மழைபெய்யாவிடினும், உலகம்-உயர்ந்தோர், செயல்-செய்தலாகிய, பால-வகைபபட்ட அறங்களை, செய்யாவிடினும் - செய்யாவிட்டாலும், உலகு-உலகத்துயிர்கள், உய்யும்ஆறு-(இறவாமல்) வாழும்விதம், என்னை - உளதாவதேது. எ-று

காலவகையாறனுள் கார்ப்பருவமொன்றாகலின் அதனைப் பெயற்பாலென்றும், உலகுஉய்தலுக்குச் செயற்பாலசெய்தல் மழைபெய்தல்போல இன்றியமையாததாதலின் அதனோடு இதனையும் உடன்வைத்துங் கூறினார். மாதர்கண்களுக்கு உவமைகூறுஞ்சிறப்புக்கருதிக் கயலென்றாராயினும் மற்றமீன்களினதுபுலாலுமுண்டெனககொள்க. புன்னைமுதலாகுபெயர். என்னை எவனென்பதன்மரூஉ. (கூஎ)

> ஏற்றகை மாற்றாமை யென்னானுந் தாம்வரையா
> தாற்றாதாாக் கீவதா மாண்கடன—ஆற்றின்
> மலிகடற் றண்சேர்ப்ப மாறீவாாக் கீதல்
> பொலிகட னென்னும் பெயர்த்து.

(இ-ள்) மலிகடல் - (வளம்) நிறைந்தகடலினது, தண்சேர்ப்ப - தண்ணியதுறையையுடையானே, ஆற்றின் - (கொடுத்தலை) செய்தால், மாறு ஈவார்க்கு - (தாம்ஈந்ததற்கு) பிரதிகொடுப்பவர்க்கு, ஈதல் - கொடுத்தல், பொலிகடன்என்னும் - விளக்கமாகியகடனென்று சொல்லப்படும்,பெயர்த்து - பெயருடையது, (ஆதலால்) ஏற்றகை - (தம்மிடத்து) ஏந்தியகையை, மாற்றாமை - இல்லையெனமறுக்காமல், என்ஆனும் - எவ்வளவுசிறியதையாயினும் ஆற்றாதார்க்கு - (பிரதிசெய்ய) வலியில்லாதஇரப்போர்க்கு, தாம்வரையாது - தாம் (அவரை) ஏற்றுக்கொண்டு, ஈவது - கொடுப்பதே, ஆண்கடன்ஆம் - ஆண்மகனதுகடமையாம். எ-று.

அவரை ஏற்றுக்கொள்ளலாவது முகமலர்ந்து இன்சொல்லாலுபசரித்தல். வரைதல் நீக்குதல். என் ஓர்வகைவினாப்பெயர். இங்குஇரண்டனுருபுதொகை; என்னானும் அளப்பரிது,, எனமூன்றனுருபும், "என்னுக் கடைவுடையேன்யான்,, "என்னுக்கோவளர்கின்றதே,, என்நான்கனுருபுமேற்றுவரல்கா

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
நூலகம்
TIRUVANMIYUR MADRAS 41

ண்க. ஆனென்பது ஆயினென்பதன் மரூஉ. இவ்வாறே ஆயில் ஆல், எனின் என்
றில் ஏல் எனவரும். யாவரும் அறிந்ததென்பார் பொலிகடவென்றார். (௯௮)

இறப்பச் சிறிதென்னா தில்லென்னா தென்றும
அறப்பயன் யார்மாட்டுஞ் செய்க—முறைபுதவின்
ஐயம் புகூவுந் தவசி கடிஞைபோல
பைய நிறைத்து விடும்.

(இ-ள்) இறப்பச்சிறிது - (ஒருவன் நம்மால் கொடுக்கப்படும் பொருள், மிகச்சிறிது, என்னாது - என்று (தனகருள்) எண்ணாமல், இல்என்னாது - (அதுபற்றி) இல்லையென்று மறுக்காமல், அறப்பயன் - அறமாகியபயனை, யார்மாட்டும் - (ஏற்போர்) எல்லாரிடத்தும், என்றும் - எந்நாளும், செய்க - செய்துவரக்கடவன், (அப்படிச்செய்துவரின் அது,) முறை - முறையாக, புதவின் - (வீடுகளின்) வாயிலில், ஐயம் - பிச்சைக்கு, புகும் - நுழைகின்ற, தவசி - விரதியினது, கடிஞைபோல - பிட்சாபாத்திரத்தைப்போல, பைய - மெல்ல, நிறைத்துவிடும் - (அறத்தினால் அவனுயிரை) நிரம்பச்செய்துவிடும். எ-று

இல்லென்னாதென்றகுறிப்பாலும், அதிகாரத்தாலும் அறம் ஈகையின்மேலதாயிற்று. ஐயம புகுகின்றதவசியினது ஏற்குங்கலத்தைப் புகுதலானது இரக்கப்படுபொருளால நிரப்புவதுபோலஎந்நாளும் சிறிதுசிறிதாக அறத்தைச்செய்யின் அவ்விடைவிடாதசெயல அவனுயிரை அறத்தால்நிரப்புமென்பது,உம்மைமுற்றும்மையாதலால் யார்என்னுமவினாப்பெயரின்முதனிலையா எஞ்சாமைப்பொருளது. கடிஞை உயிர்க்குஉவமமெனக்கொள்க அறப்பயனை அநுபவிப்பது அது வாதலால். (௯௯)

கடிப்பிடு கண்முரசங் காதத்தோர் கேட்பர்
இடித்து முழங்கியதோர் யோசனையோர் கேட்பர்
அடுக்கிய மூவுலகுங் கேட்குமே சான்றோர்க்
கொடுத்தா ரெனப்படுஞ் சொல்.

(இ-ள்.) கடிப்புஇடு - குறுந்தடியால் அடிக்கப்பட்ட, கண்முரசம் - கண்ணையுடைய முரசொலியை, காதத்தோர்கேட்பர் - காததூரத்திலுள்ளோர் கேள்விப்படுவார், இடித்துமுழங்கியது - (மேகம்) இடியாநின்று முழங்கினதை, ஓர்யோசனையோர் கேட்பர் - யோசனை தூரத்திலுள்ளோர் கேள்விப்படுவர், சான்றோர் - (ஞானவொழுக்கங்களில்) நிறைந்தவர்க்கு, கொடுத்தார் - அவர் வேண்டியதை (இவர்) கொடுத்தார், எனப்படும்சொல் - என்று (அறிவுடையோரால் சொல்லப்படும்புகழ், அடுக்கிய - (ஒன்றின்மேலொன்றாக) அடுக்கப்பட்ட, மூவுலகும் - மூவுலகத்துள்ளாரும், கேட்கும் - கேள்விப்படுவார். எ-று.

முரசத்துக்குக் கண்ணென்றது தோல்விசித்த பக்கத்தை. முரசம் கருவியாகுபெயர். காதம், யோசனை அவ்வொலிகள் சென்றுபரவும் எல்லையைக் குறித்தன. இடித்தலும் முழங்கலும் ஒருகாலத்ததாதலால் இடித்து இடியாநின்றென்பதன் திரிபு. இடித்தென்றதனால மேகம் வருவிக்கப்பட்டது. மூவுலகும் கேட்குமென்றது பூமிமுற்று முள்ளாரேயன்றிப் பாதலத்திலும் சுவர்க்கத்திலுள்ளவர்களும் கொடுத்தார் புகழைஎடுத்துக் கூறலை. (௱)